MADRAS.


# வித்யாவிஹாரிணி

காவியம், சரித்திரம், கலைக்கியானம், தொழின்முறை, வேடிக்கைக்கதைகள், முதலியன விளக்கிச் சித்திரசகிதமாய் நடைபெறும்

ஓர்மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை

ஸி. என். கிருஷ்ணஸ்வாமி அய்யர், எம்.ஏ., எல்.டி. பத்திராதிபர்.

| | | |
|---|---|---|
| புஸ்தகம் I.<br>Vol I. | சாதாரணஹ சித்திரைமாதம்<br>April 1910 | சஞ்சிகை 8<br>No. 8 |


## பிரபஞ்சவர்த்தமானம்

"பழையன கழிதலும், புதியன புகுதலும்
வழுவல, கால வகையினானே."

*மதிராசு கவர்ன்மெண்டு பாதிரியாரும் மத விஷயமாகப் படிப்பும்.*

சைதாப்பேட்டையில்போதனைமுறைகற்கும் உபாத்திமாருக்கு உதவும்படி, சென்றமீ கவர்ன்மெண்டு பாதிரியாராகிய ஸ்ரீமான்-வைட்ஹெட் பட்டவர்த்தனர் ஒரு உபந்நியாசம் செய்தார். இந்தியப்பள்ளிக்கூடங்களில் மதம், குணம், ஆசாரம் இவ்விஷயமாய்ப் படிப்பு வேண்டுமென்கிற பிரஸ்தாபம் சுமார் பதினைந்து வருஷ காலமாக அப்போதப்போது இருந்துகொண்டேதான் வந்திருக்கிறது. என்றாலும் அதைப்பற்றி இந்தவழிதான் போகவேண்டுமென்று தெளிவாக விதித்தவர் யாருமில்லை. இந்தியாகவர்ன்மெண்டுக்குக் கொஞ்சநாளைக்குமுன் பெரிய பாதிரியாராகவிருந்த டாக்டர் வெல்டன் என்பவர் கிறிஸ்துமதக் கிரந்தங்களைக் கூசாமல் எல்லோருக்கும் படிப்பிக்கவேண்டுமென்று பகிரங்கமாய்ச் சொன்னார். ஆனால் அதையொருவரும் காதிற் போட்டுக்கொள்ளவில்லை. வேறு சிலர் இந்துக்களுக்கு வேத முதலியவற்றையும், மகம்மதியர்களுக்குக் குரானையும், கிறிஸ்தவர்களுக்குப்பைபிலையும்கற்பிக்கவேண்டுமென்றும், நன்னெறிகளை எல்லோருக்கும் பொதுவாகக் கற்பிக்கவேண்டுமென்றும், சொல்லி வாதாடி வந்தார்கள். அதுவும் பேச்சு மாத்திரந்தான் நடந்தது. பத்துவருஷம் வாதாடியதில், இந்துஸ்தானத்தில் இரண்டொரு ஹிந்துக் காலேஜ்களிலும், அலிகர் முதலிய இரண்டொரு மஹம்மதீயக் காலேஜ்களிலும், ஏதோ ஒரு விதமாக மதபோதனை நடந்து வருகிறது.

தென்னிந்தியாவில் ஒன்றும் நடப்பது சாத்தியமாகக்காணுவதில்லை. ஏனெனில் இவ்விடத்தில் பரஸ்பரபேதங்கள் வெகுதூரம் முற்றியிருக்கின்றன. வருணம், ஜாதி, இவைகளிலுள்ள பேதங்கள் மட்டுமேயன்றிப் பாஷை விஷயத்திலும் பேதம் வெகுவாக முற்றியிருப்பதால், ஒருகாரியமும் நடக்குமென்று காணுவதில்லை. ஸ்ரீமான்-வைட்ஹெட் துரை பத்து

வருஷத்திற்கு முந்தி ஒருமுறை இவ்விஷயமாய்ப் பேசியபொழுது, இப்படித் தான் சொன்னார். அதாவது, இந்தியாவில் இப்பொழுதிருக்கிற ரீதிக்கு இந்து மதவிஷயமாகச் சமரசமாய்ப் போதிப்பது சுலபமன்று, என்று. அதற்குச் சிலர் அக்காலத்தில் ஆர்த்தம் செய்தார்கள். இந்துமதம் உதவாதென்றால், கிறிஸ்துமதம்தான் உதவலாமாக அவர் எண்ணியதுபோலும், என்று.

பத்து வருஷமானபிறகு மறுபடி ஷெயார் பேசியதைக் கேட்கும்போது, அப்படியொன்றும் அவர் முஷ்கரமாக எண்ணவில்லையென்பது தெளிவாகிறது. இப்பொழுது அவருடைய வாதம் இது. மதவிஷயத்தில் படிப்பு அவசியம் வேண்டும். சர்க்காரோ கிறிஸ்தவர்கள். ஆதலால் அவர்கள் வேறொரு மதத்தைச்சிரத்தையுடன் படிப்பிப்பது கூடாத காரியம். ஆனால் கிறிஸ்துமதத்தை இந்து மகம்மதியருக்குக் கற்பிப்பதும் கூடாத காரியம். ஏனெனில் இந்துக்களுக்கும், மகம்மதியருக்கும் அது மதமன்று. தவிரச் சர்க்கார் தாம் பிரஜைகளுடைய மதவிஷயத்தில் எவ்விதத்திலும் பிரவேசிப்பதில்லை யென்று பிரமாணம் செய்திருக்கிறார்கள். ஆதலால், இந்தியாவில் மதவிஷயமாய்ப் பள்ளிக்கூடங்களில் படிப்பு நடக்கவேண்டுமானால், டிபார்ட்மெண்டுப் பள்ளிக்கூடங்கள் எல்லாம், சர்க்கார் அதீனம் நீங்கி, மகா ஜனங்கள் அதீனமாகிவிட வேண்டும். இந்து, மகம்மதிய, கிறிஸ்தவம் ஆகிய மூன்று மதங்களே இந்தியாவின் முக்கிய மதங்களாதலால், அந்தந்த மகா ஜனங்கள் தத்தமக்கு வேண்டியமட்டில், பள்ளிக்கூடங்களை ஆங்காங்கு அமைத்துக்கொண்டு மதம், ஆசாரம் இவற்றைப் போதித்துப் பரிபாலனம் செய்வதுதான் சாத்தியமாகக் காணுகிறது, என்கிறார்.

ஆனால், இதுதற்காலம் நடப்புக்கும் இனிப் பள்ளிக்கூடங்களுக்குக் காணும் தசைக்கும் நேர் விரோதமாகக் காணுகிறது. ஏனெனில் இப்பொழுது சில வருஷங்களாக நடப்பதைப் பார்க்குமிடத்துப் படிப்பு விஷயத்தில் சர்க்காருடையவும், டிபார்ட்மெண்டாருடையவும், வியாபாரம் அதிகரித்து வருவதேயன்றிக் குறைவதாகக் காணுவதில்லை. இனிப்பிரைமெரி பாடசாலைகள் எங்கும் ஏற்பாடாகிக் குழந்தைகளுக்குச் சம்பளமில்லாமல் பாடம் சொல்லவேண்டுமென்றும் ஏற்படுவதில், அவர்களுடைய அதிகாரம் பின்னும் அதிகமாகவே வியாபிக்கும். செகண்டரி, காலேஜ் தரபுகளிலும், 'மாதிரிப் பள்ளிக்கூடங்கள்' வேண்டுமென்று சர்க்கார் மூலமாய்ப் பிரயத்தனம் நடந்துவருகிறது. இன்ஸ்பெக்டர் வகைரா உத்தியோகஸ்தருடைய சங்கியையும் அதிகரித்துவருகிறது.

ஆதலால் நமது பாதிரியவர்கள் சொல்லும் சங்கதி தென்னாட்டிற்குச் சமீபகாலத்தில் ஏலாததென்றே நாம் சொல்லவேண்டி வருகிறது. ஏனெனில் மதவிஷயத்திற்காகச் சர்க்கார் தமது உத்தேசங்களை நிறுத்திவிடுவது நடவாத காரியம்.

**லாகோர் பண்டக்காக்ஷி.**

மதிராசு கவர்ன்மெண்டுக்குத் தொழில் விஷயத்தில் டைரெக்டராகிய ஸ்ரீமான்-காட்டன் துரையவர்கள் லாகோரில் சென்ற டிசம்பர்மீ"த்தில் கூடிய பண்டக்காக்ஷியைப்பற்றிச் சமீபத்தில் ஒரு பிரசங்கம் செய்தார்கள். இவருக்கு உத்தியோக தருமத்தினாலும், வேறு பல காரணங்களாலும் இவ்விஷயத்தைப்பற்றிப் பேச யோக்கியதை சித்தித்திருப்பதால், இவர் சொல்வதை அப்பண்டமாற்றுக்குரியவர் கவனிக்க வேண்டும். தேசியத்தொழில்கள் முன்னுக்கு வரவேண்டுமானால், நம்மிடத்தில் காணுங் குறைவுகளையெடுத்துக்காட்டும்படிசற்ஜனரை நாம் வேண்டிக்கொள்வது நல்லதாதலாலும்,

இம்மாதிரிக் காக்ஷிகளால் அது சாத்தியமாகி, அதனால் நாம் முன்னுக்கு வருவது நிச்சயமாதலாலும், இதுபோன்ற காக்ஷிகள் இந்தியாவெங்கும் இருந்துவருவது நல்லதென்று இவர் வாதிக்கிறார். அது சரியென்றே நாமெல்லோரும் ஆமோதிக்கலாம்.

லாகோருக்கு வந்த சரக்குகளைப் பற்றிப் பேசுமிடத்து, மதிராசிலிருந்து இரண்டு தறிகள் பரீக்ஷைக்காகப் போயின. வேறு தறிகளும் வந்திருந்தன. அவற்றில் 'சர்ச்சில்' தறியென்பது நன்றாகக்கூடுமென்று மதிராசு கவர்ன்மெண்டுக்குக் கண்டதால், அதில் ஒன்று வாங்கிச்சேலம் சர்க்கார் நெசவுப்பள்ளிக்கூடத்தில் பரீக்ஷிக்கப் போகிறார்கள். பங்காளத்திலிருந்து 'கெமிகல்,' என்றால், ஔஷதம், கைத்தொழில் முதலியவற்றிற் குதவும் சரக்குகள் ஏராளமாய் வந்திருந்தன. அவ்விடத்தில் இந்தச் சாஸ்திரத்தில் நிபுணரான டாக்டர் பி. ஸி. ராய் என்னும் கனவான் இதை ஆரம்பித்தது. சரக்குகள் முதல்தரம். நயத்திற்கும் குறைவில்லை. இந்தியாவில் விளையும் ரோஜா, மல்லிகை, முதலிய நல்ல வாசனை வீசும் புஷ்பங்களிலிருந்து சிரேஷ்டமானதும், கிருத்திரமமில்லாததுமான அத்தர் முதலிய திராவக சத்துகளை யிறக்குவற்காக இந்தக் கம்பெனியார் ஆரம்பித்திருக்கிறார்கள். அதனால் புண்ணியம், புருஷார்த்தம் இரண்டும் உண்டு. சவர்க்காரம் அதிகமாகவே தயாராகிவருகிறது. என்றாலும், சவர்க்காரங்களில் வாசனையதிகமே தவிர, யோக்கியதை அதிகரிக்கவில்லை. மெழுகுவர்த்திகளில், குஜராத்து கம்பெனியென்று பம்பாயில் விர்த்தியாகி வரும் கம்பெனியாருடையது சிரேஷ்டமென்றும், மதிராசிலாகி வரும் பாரதவர்த்திகள் அவ்வளவு சிரேஷ்டமாகக்காணவில்லை யென்றும் இவர் சொல்லுகிறார். பாரதவர்த்தி உடைமைக்காரர் இதைக் கவனித்துச் சீக்கிரம் அதிற்காணுங் குறைவுகளைப் பரிகரிக்கவேண்டும். தேசியத் தீப்பெட்டிகளும், தீக்குச்சிகளும் இன்னும் நன்றாய்த் தீர்மானமாக வேண்டும். விவசாயவகையில் அனேகம் கருவிகள் வந்திருந்தன. அவற்றில் ஜனங்களுக்கு அக்கறை அதிகமாகக் கண்டதாம். இது நற்குறியென்றே காணுகிறது. 'பிக்கானீர்' ராச்சியத்திலிருந்து வந்த களிமண்ணைக்கொண்டு ஆக்கிய சட்டிபானை வகைகள் வெகு திறமென்றும், ஆனால் 'சீனமண்' மாதிரியான முதல்தரம் மண் இந்தியாவிலெங்கும் காணுவதாயிருக்க, குயவன் தொழில் மட்டும் எவ்வளவு சிறக்கலாமோ அவ்வளவில்லை யென்றும் காணுகிறது. இதைக் குயவர்கள் கவனிக்கவேண்டும். கண்ணாடி சாமான்களும், யந்திரங்களும், இப்போது சிறப்படையாவிட்டாலும் சீக்கிரம் அடையலாமென்று காணுகிறதாம்.

பட்டுவிஷயத்தில் காஸ்மீரம் முதலிய இடங்களில் வேலை பழையபடி திறமாகவே நடந்துவருகின்றன. பங்களூரில் 'தாதா' பட்டுப் பரீக்ஷைத் தோட்டத்தைச் 'சால்வேஷன் சேனை' யென்கிற கிறிஸ்தவவர்க்கம் வாங்கித் தங்கள் முயற்சியால் முன்னுக்குக் கொண்டு வரப் பார்க்கிறார்களாம்.

லாகோர் காக்ஷியை மொத்தத்தில் பார்க்குமிடத்துச் சந்தோஷகரமே யென்றாலும், மதிராசைப் பொறுத்தமட்டில் நடக்கவேண்டிய காரியம் ஏராளமாயிருக்கிறது. நாணயம் அதிகரித்து, ஜனங்கள் ஒருவரையொருவர் நம்பி, 'மொந்தைகளிலுள்ள' பணமெல்லாம் வெளி வந்து ஒன்றுசேர்ந்து 'குட்டிபோடவேண்டும்.' புத்திமான்கள் தொழில் ரகசியங்களை நன்றாய்க் கற்று, பைத்தியகாரக் வியாபாரம் செய்யாமல், எங்கு எந்தத்தொழில் சிறக்குமென்பதை அறிந்து பணத்தைப் போட்டு வேலையாரம்பிக்க வேண்டும். சர்க்காரோ இவ்விஷயத்தில் வேண்டிய பரீக்ஷைகளைச் செய்வதற்கும், சிறிய ஆரம்பங்களைச் செய்துபார்ப்

பதற்கும், விவேகிகளாயுள்ளவருக்குத் திரவிய சகாயஞ்செய்து, வேறு தேசங்களுக்கு அனுப்பித் தொழில் கற்றுக்கொடுப்பதற்கும், தயாராயிருக்கிறார்கள். ஆனால் மொத்தத்தில் இது ஜனங்களாலாகவேண்டிய காரியமென்பதைப் புத்திமான்கள் அறியவேண்டுமென்று இவருடைய உபதேசம்.

பாபா பாரதி அவர்களுக்கு வழியனுப்பு.

சென்றமீ மதிராசில் பாபா பிரேமானந்த பாரதி சுவாமிகளும், அவருடைய அமெரிக்க சிஷ்யஜனங்களும் வந்து சில நாளிருந்ததில், சுவாமிகளுடைய உபந்நியாசம் பல இடங்களில் நடந்தது. பாபா சுவாமிகள் இன்னாரென்று தெரியாதவர்களுக்கு உபயோகமாக இரண்டொரு சங்கதிகள்மட்டும் சொல்லிவிடுவோம். இவர் பங்காளத்தில் ஹைகோர்ட்டு ஜட்ஜி முதலிய பெரிய உத்தியோகங்கள் வகித்து, கல்வி, ஒழுக்கம் இவற்றாற் சிறந்தோங்கிவரும் ஒருசத்வமிசத்தி லுதித்தவர். வெகு சிறுவயதிலேயே மதவிஷயமாக மனதைத் திருப்பி யுழைத்தவர். இந்துஸ்தான வைஷ்ணவரில், பங்காளிகள் ஸ்ரீ கிருஷ்ண சைதன்னிய சுவாமிகளுடைய சம்பிரதாயப்படி ஸ்ரீ கிருஷ்ணபகவானை ராதாவல்லபனாகவும், கோபிகாரமணனாகவும், உபாசித்து வருவதில், அதை உறுதியாகக்கொண்டு, ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில் பக்தியதிகரித்து, அந்தப் பக்தி ரஸத்தை மற்றவரும் அறிந்து ஆனந்தப்பட்டு மோக்ஷமடையவேண்டி அதற்கென்ன செய்வதென்று யோசித்தார். அமெரிக்காவுக்கு நல்ல காலமாதலால், அவ்விடத்தில் போய் அவ்விடத்தில் இந்த ரகசியத்தை வெளியிடவேண்டுமென்று அவருக்குப்புத்தி யுண்டாயிற்று.

அமெரிக்கா ஜனங்கள் வெகு விசித்திர சுபாவமுடையவர். அந்த நாட்டில் செல்வச் செருக்கு வெகு அதிகம். ஆதலால் 'சருவசக்தரானபகவான்' என்று நாம் சொல்லுவதை மாற்றி, அத்தேசத்தவர் 'சருவசக்தரான வெள்ளியப்பன்,' என்று வழங்குவதுண்டு. பழையநாளில் இரணியாக்ஷன் தன்னையே தெய்வமாகப்பாவித்திருந்தபடியே, இவர்களுள் கோடீசுவரர்கள் தங்களைச் சர்வேசுவரராகப் பாவித்திருப்பதாகச் சமாசாரம். தவிர வெள்ளைக்காரர், கறுப்பு மனிதர், தாமிர நிறத்தவர், ஆகிய மூன்றுவகைஜனங்கள் இந்நாட்டிலிருப்பதில், வெள்ளைக்காரர் மற்றிருவகையாரையும் தங்களிஷ்டம் போல் நடத்திப் பலவிதமாகவும் இம்சைசெய்து வருவதாகவும் கேள்வி.

"செல்வம் வந்துற்றகாலைத் தெய்வமுஞ் சிறிதுபேணார், சொல்வனவறிந்து சொல்லார், சுற்றமும் புறமுநோக்கார்," என்பது நமக்குள் வெகு நாளைய அனுபவம். நம்மவர்களே இப்படியானால், வேற்றாரார் ஒரு இந்திய சந்நியாசிக்கு மரியாதை வைத்து, அவர் சொல்லுவதைக் கேட்பார்களாவென்று நமக்குக் காணுவது சகஜம். அதிலும் செல்வச் செருக்கினால் கண் புரை மூடி, நெஞ்சம் கல்லாகி, பணத்தைப் பிரத்தியக்ஷ தெய்வமாகக் கொண்டிருக்கும் வேற்றாராரிடம் போய், அவர்கேட்டிராத மத விஷயமாகப் போதனைசெய்து, அவர் மனதைத் திருப்புவதென்பது, கேவலம் பைத்திய குணமென்றே யாரும் சொல்லிவிடலாம்.

என்றாலும் ஸ்ரீகிருஷ்ணனிடத்தில் சுவாமிகளுக்குள்ள பக்திக்கு அளவில்லையாகவே, அவர் இதையெல்லாம் கணக்கிடாமலும், லாப நஷ்டம் விசாரியாமலும், ஸ்ரீபகவானையே நம்பிப் புறப்பட்டுப்போனார். அவருடைய கிருபா பலத்தினாலும், தமது பக்தி விசேஷத்தினாலும், போய்ச் சில வருஷங்களுக்குள்ளாக அமெரிக்காவிலுள்ள வெள்ளைக்காரர்களில் பணக்காரரும், கல்வியிற் சிறந்தோரும், அனேகர் சுவாமிகளுடைய மதத்தைக் கைப்பற்றி ஸ்ரீ கிருஷ்ணபக்தராகி யிருக்கிறார்கள். இப்பொழுது ஒரு கிருஷ்ணன் கோயிலும் அவ்விடத்திலாகி யிருக்கிறது. சுமார் 9000-பெயர் பொ

றுக்கி யெடுத்தவராகி சுவாமிகளுக்குச் சிஷ்ய ராக விளங்குகிறார்கள். இவர்களில் சில ஸ்ரீமதிகள் இங்கு வந்திருந்தார்கள்.

சுவாமிகளுக்கு அமெரிக்காவில் ஸ்ரீகிருஷ்ணனையும், கீதையையும் பிரபலப்படுத்த வேண்டுமென்பது மட்டும் ஆசையல்ல. அவ்விடத்திலுள்ளவருடைய செல்வச்செருக்கை யகற்றி, எல்லா ஜாதியாரும் அந்நியோந்நியமாய் வாழச் செய்ய வேண்டுமென்பது பெரிய ஆசைதான். ஆனால் அத்துடன் நில்லாமல் அவ்வாறு தமக்கு வசப்படும் அமெரிக்க ஸ்ரீமதிகளில், கல்வி, ஒழுக்கம் முதலிய நற்குணங்கள் நிறைந்தவர்களாக நூறுபெயரையோ, அதிகப்பட்டவரையோ, மறுபடி இந்தியாவுக்கு அழைத்து வந்து, இந்தியாவில் இக்காலத்தில், கிரகசார வசத்தினால் பல விதத்திலும் மங்கிக் கிடக்கும் இந்திய ஸ்திரீகளுக்கு அவர்கள் மூலமாய் வித்தை, லௌகிக யுகதி, வைதிகபுத்தி இவற்றைப் புகட்டவேண்டுமென்பதும் அவருக்குப் பேரவா. ஆதலால் அதற்கென்றே இப்பொழுது அவர் போவதால், மதிராசிலுள்ள மகா ஜனங்கள் சுவாமிகளுக்கு உபசாரம் சொல்லி, போகும் காரியம் கைகூட வேண்டுமென்றும், விபரீதமதங்களும் ஆசாரங்களும் எந்நாட்டிலும் பிரபலிக்காமற்படி ஸ்ரீ கிருஷ்ணபகவான் சங்கற்பிக்கவேண்டு மென்றும் பிரார்த்தித்தார்கள். நாமெல்லோரும் இதைச் சந்தோஷமாக ஆமோதிக்கவேண்டியவர்கள்.

அமெரிக்காவில் சுவாமிகளுடையவும், அவரைப்போன்ற வேறு இந்தியர்களுடையவும், உபதேசம் வீண்போகவில்லை யென்பதற்குச் சமீபத்தில் ஒரு சாக்ஷியம் போதும். அமெரிக்கக் கோடீசுவரர்களிலெல்லாம் கைவலுத்தவர் ஜான் ரோக்பெல்லர் என்பவர். அவர் இப்பொழுது தமது ஆஸ்தியில் 60-கோடி பவுன் பெறுமானதைத் தருமார்த்தமாக விட்டிருக்கிறார். அதைக்கொண்டு அமெரிக்காவிலும், பூமண்டலத்திலுள்ள வேறு எந்நாட்டிலுமுள்ள மகாஜனங்களுக்குள், துக்க நிவாரணமும், சுகப்பெருக்கும் உண்டாவதற்குச் சாதனமான கல்வியோ, வேறெந்த உபாயமோ, செய்து வரவேண்டுமென்றும், சமஸ்தமான ஜனங்களுடையவும் க்ஷேமார்த்தமாக அது உபயோகப்படவேண்டுமென்றும் அவர் சொல்லுகிறார். இந்தப் புத்தி கீதை கேட்காதவனுக்குத் தோன்றாது. ஏனெனில் கிறிஸ்த வமதம் இவ்வளவுநாள் அமெரிக்காவிலிருந்தும், சமஸ்தமான ஜனங்களுடையவிசாரணை அம்மதஸ்தருள் மட்டாகவேயிருந்து வந்திருக்கிறது பிரத்தியக்ஷம். அந்த விஷயத்திலும் சுவாமிகள் உழைத்துக்கிறிஸ்தவ பாதிரிமார்களுக்கு அவர்களுடைய வேத புஸ்தகத்திற்குச் சரியாகப் பொருள் சொல்லி, அவர்களுக்கும் கண் திறக்கும்படி செய்திருக்கிறார். இவ்வாறு இந்தத் தேசத்திற்கும், இதர தேசங்களுக்கும், நன்மையையே நாடிச் சந்நியாசி விரதம் பூண்டு, பரோபகாரத்தையே தனக்காக வேண்டிய காரியமாக வகித்திருக்கும், சுவாமிகளுக்கு ஸ்ரீகிருஷ்ண பகவான் பூரண ஆயுள், தேகபலம், மனோதைரியம் முதலியவற்றை மேலுமேலு மருளித் தமது சங்கற்பத்தை நிறைவேற்றுவாராக. சுவாமிகள் தமது மதவிஷயமா யெழுதிய புஸ்தகங்கள் வெகு நேர்த்தியாதலால், சில விஷயங்களை அவற்றினின்றும் திரட்டி, ஒழிந்தபோது அபிமானிகளுக்கு விநியோகம் செய்வோம்.

ஸ்ரீகாலடி க்ஷேத்திரத்தில் நடந்த பிரதிஷ்டை விஷயத்தில், யூனைடெட் இந்தியாவிற்கு ஒரு அம்சம் விநோதமாகக் காணுகிறதாம். அதாவது, அத்துவைத மத ஸ்தாபகராகிய ஸ்ரீஜகத்குருவுக்கு இம்மாதிரிக் கேவல துவைதமாக ஓர் ஞாபகக்குறி வேண்டுமென்று சிலர் நினைத்ததும், அதைச் சரியென்று அந்தக் குருபரம்பரையில் வந்து

காலடிப் பிரதிஷ்டையும், யூனைட்டட் இந்தியாவும்.

விளங்கும் ஸ்ரீசிருங்ககிரி சுவாமிகள் ஒப்புக்கொண்டதுமே. ஆனால் இதில் ஆச்சரியமொன்றும் நாம் காணுவதில்லை. பரகாயப் பிரவேச முதலிய மகிமைகளை ஆரோபித்து மகான்களுடைய பெயரை இகழ்ச்சிக்கு இடமாக்குவதைவிட இம்மாதிரிப் பூஜித்துவருதல் பலவினும் நன்றென்னல் தகும். தவிர இந்த ஞாபகக்குறிகள் சாரித்திர ரீதியாக வெகு உபகாரஞ் செய்யக்கூடியவைகள். அத்துவைத சித்தாந்தத்திற்கும் இதற்கும் எப்படியொப்புமென்றால், ஒவ்வாததான். ஆனால் உலகம் எங்கும் முட்டாள்மயமாகியிருப்பதால், அந்த முட்டாள்களெல்லோரும் விவேகிகளாகி வரும்வரை இம்மாதிரிப் பைத்தியக்கார காரியங்கள் நடக்கத்தான் செய்யும். அவரவர் கருமத்தையும், கருமபலனையும் அவரவரே தபசுமூலமாய் நசிக்கச் செய்யவேண்டுமென்று உபதேசித்து வந்த ஸ்ரீ புத்தபகவானுக்கு விக்கிரகங்களும், அவருடைய எலும்பு முதலியவைகளுக்குப் பூஜையும், விக்கிரகமென்கிற வாசனையே கூடாதென்று அதஞ்செய்து வந்த முகம்மதுநபிக்கு, அவரது ஜூப்பா, தாடிரோமம, முதலியவற்றை வைத்துப் பூஜையும், அப்படியே கிறிஸ்தவர்களில் சிலுவை முதலியவற்றிற்குப் பூஜையும், நடக்கும்வரை இதுவும் நடக்கலாமாகவே காணுகிறது. நம்மைப்போன்ற விவேகிகளுக்கோ இதெல்லாம் அனுவசியம். சாஸ்திரமும், "துவிஜருக்கு அக்னி தெய்வமாகவும், முனிகளுக்கு இருதயத்தில் தெய்வமாகவும், முட்டாள்களுக்கு விக்கிரகத்தில் தெய்வமாகவும், வேதாந்திகளுக்கு எங்கே பார்த்தாலும் தெய்வமாகவும் இருக்கிறது," என்று முறையிடுவதால், யாருக்காவது இம்மாதிரிக் காரியங்கள் பைத்தியமென்று கண்டால், அவர்கள் முனிகளோ, வேதாந்திகளோ, ஆய்விட்டது பிரத்தியக்ஷம். ஆனால் எல்லோருக்கும் அந்தப்பாக்கியம் இல்லையாதலால், அவரவர் மனோதருமத்தின்படி செய்வதில் தோஷமொன்றும் நாம் காணவில்லை. குடி, களவு, காமம், வெகுளி முதலிய துராசாரங்கள் அணுகாமலிருக்கும்வரை, நாம் இம்மாதிரிக் காரியங்களைத் தூஷிப்பது அனுவசியமென்பது நமது மதம். தவிர ஐரோப்பா, அமெரிக்கா முதலிய இடங்களிலிருந்தும், சிலர் இதை அங்கீகரித்ததாகக் காட்டியிருப்பதில், அவர்களனைவரையும் முட்டாள்கள் என்பதற்கு ஏனோ மனம் வருகிறதில்லை.

**கும்பகோணம் காலேஜ் பிரின்ஸிபால்**

கும்பகோணம் என்னும் பட்டணம் பழையநாளில் கல்வி விஷயமாக வெகு தூரம் பேர் பெற்று விளங்கியது. அதிலுள்ள கவர்ன்மெண்டு காலேஜில் படித்தவர்கள் தென்னிந்தியாவிலும், அதற்கப்பாலும் போய்ப் பொறுமையான பெரும்பதவிகளை வகித்துச் சீராகக் காரியம் நடத்திப் பெருமையும் கீர்த்தியும் பெற்றவர்கள். அவ்விடத்தில் முந்திப்பிரின்ஸிபால்களாயிருந்த ஸ்ரீமான் போர்டர் துரையவர்கள், ஸ்ரீமான்-கோபால ராயரவர்கள், இவர்களுடைய வித்தை, விநயம் முதலியவற்றைச் சிறப்பித்து எத்தனையோ கதைகள் சொல்வதுண்டு. அவர்களுடைய சிஷ்யகோடிகளுக்குள் காணும் குருபக்திக்கு அளவேயில்லை. ஒருவர் இப்போது 60-வது வயதாகியும், தான் திவானாக உத்தியோகம் செய்தும், ராயரவர்களுடைய படத்தைப்பார்த்தால் தனக்கு இன்னும் அச்சம் உண்டாகிறதென்று சொல்லக்கேட்டிருக்கிறோம்.

இப்படி விளங்கிய காலேஜுக்கு இப்பொழுது சுமார் 20-வருஷங்களுக்கு மேலாகவே பெரிய துர்த்தசையென்னல் தகும். 80-96-ம் ௵ங்களில் தென்னிந்தியாவில் வித்தை விஷயமாகப் பெருங்குழப்பம். சர்க்கார் மானேஜ்மெண்டிலிருந்த காலேஜ்களை யெல்லாம் கேட்பவருக்குக் கொடுத்துவிடுவதாகப் பிரஸ்தாபம் பலமாயிருந்தது. கும்பகோணம்

காலேஜுக்கும் தசைமாறும் போலிருந்தது. ஆனால் 96-ம் வருஷத்திற்குப்பின் பல காரணங்களால் சர்க்காருடைய மனோதருமம் மாறித் தங்கள் மாரிபத்தாகவே முன்னிருந்த பாடசாலைகளை வைத்துக்கொள்ளுவதுடன், வேறு பிரைவேட் மானேஜ்மெண்டிலிருப்பவைகளிலும் சிலவற்றைத் தாம் ஒப்புக்கொண்டு நடத்துவதாக இப்பொழுது சில காலமாகப் பிரயத்தனம் நடந்து வருகிறது.

ஆதலால் கும்பகோணம் காலேஜ் பழையபடி மகத்துவம் அடைய இடமுண்டென்று நாம் நம்பியிருக்கிறோம். அப்படியிருக்க இப்போது சுமார் மூன்று வருஷங்களுக்கு மேலாகவே பிரின்ஸிபாலாக இருக்கும் ஸ்ரீமான்-ஹாட்ஜஸ் துரையவர்கள்மேல் அடிக்கடிப் பல தினுசுகளாகப் புகார் கேட்டு வருகிறது. இப்படி அடிக்கடிக்கேட்டுவந்தும், காரியத்தில் ஒரு பலனுங் காணாமலிருப்பதுதான் இதில் வேடிக்கை. ஒவ்வொரு முறையும் ஏதோ ஒரு விநோத நடவடிக்கை இவர் மூலமாய் நடந்ததாகவும், இப்படி நடந்தால் பிள்ளைகளுக்கு வித்தை, விநயம் இரண்டும் மோசமாய்ப் போய்விடுமென்றும், யாராகிலும் எழுதி வருகிறார்கள். ஒன்றோ இரண்டோ கடிதங்கள் வருகின்றன. பிறகு சிறிதுகாலம் ஒன்றும் கேட்பதில்லை.

சமீபத்தில் ஒருவிசேஷம் நடந்தது. சென்ற வருஷத்திய மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் முக்காலே மூன்றுவீசம் மாணாக்கரும் வெட்டுண்டதினிமித்தம் நம்மைப்போல் பலரும் அங்கலாய்த்ததில், மதுரையில் எல்லாயோக்கியதையும் கூடிய உபாத்திமார் அனேகர் சேர்ந்துள்ள சங்கமொன்றில் இதை நன்றாக விசாரித்து, ஏதோஇரண்டொருவகையாகப்பரிகாரம்தேடி, அதை வேறு இடங்களிலுள்ள உபாத்தியாயர்களும் அறியும்படிக்கும், அவர்களுக்கு அவைகளைவிடச் சிரேஷ்டமான பரிகாரம் தோன்றுமானால் அதைத் தங்களுக்கு அறிவிக்கும்படிக்கும், கடிதங்கள் அனுப்பிக்கேட்டார்கள், வேறிடங்களுக்கு அனுப்பியபடியே பத்திலொன்றாகக் கும்பகோணம் காலேஜில் ஸ்ரீமான் ஹாட்ஜஸ் துரைக்கும் ஒருகடிதம் வந்தது. இந்தக்கடிதத்தை அவர் என்ன வேண்டுமானாலும் செய்திருக்கலாம். சில பெரியோருடைய மாமூல்படி, கடிதத்தைக்கிழித்துப் பறக்கவிட்டிருக்கலாம். அல்லது வாங்கி யொருபுறம் செல்லரிக்க விட்டிருக்கலாம். அல்லது அதற்குப்பதில் தான் எழுதுவதற்கு ஒன்றுமில்லையென்றெழுதி யிருக்கலாம். வாஸ்தவத்தில் நல்ல பரிகாரம் தெரிந்திருந்தால், அதையெழுதி மதுரைக்காரருக்கு அறிவு புகட்டி யிருக்கலாம்.

ஆனால் இந்த ஸ்ரீமானுக்கு இதொன்றும் சரியென்று காணாமல், அந்தக்கடிதம் வந்தவுடன், அதற்குப்பதில் மறு தபாலிலேயே இவ்வாறு எழுதவேண்டுமென்று கண்டு எழுதிவிட்டார். "மதுரை உபாத்தியாயர் சங்கத்தவர் வரவிடுத்த கடிதம் ஸ்ரீமான்-ஹாட்ஜஸ் துரை கையில் கிடைத்தது. அதற்குப்பதிலாக அவர் வரைவது:—

1. மதுரைச் சங்கப் புலவர்கள் அவரவர் வேலையைப் பார்த்துக்கொண்டு போகவேண்டும்.

2. தங்களுக்குப் பரிகாரமாகக் காணுவதைக் கதையில் குரங்கு பலாக்கொட்டைகளை எதிற் போட்டதோ, அதில் போட்டுவிடவேண்டும். (என்றால், அந்தப் பரிகாரத்தை விவரித்திருக்கும் கடுதாசியை நெருப்பில் போட்டு எரித்துவிடவேண்டும் !)"

இந்தக் கடிதத்தைப் பார்த்ததும், மதுரைக்காரருக்கு ரோஷம் பொங்கி, உடனே அவருக்கு நோட்டீசு கொடுத்தார்கள். அவரும் யோசித்துத்தான் செய்தது சிறுபிள்ளைத்தனமென்று கண்டு, அபசாரக்ஷமை கேட்டுக்கொண்டார். அத்துடன் இந்தக்கதை முடிகிறது.

இந்தச்சங்கதி பகிரங்கமானது முதல், பலர்

பலவிதமாக எழுதலானர்கள். ஒரு பத்திராதிபர் இவருக்குக் குரங்குகளுடன் பழக்கம் அதிகமேதவிர, மனிதருடன் இல்லையென்று காணுவதாகவும், ஆதலால் இவர், கிஷ்கிந்தை மகாஜனங்களுக்கு ஏற்பட்டிருக்கும் காலேஜுக்கு அதிபதியா யிருக்கவேண்டியது நியாயமாக, கும்பகோணம் மகாஜனங்களுக்குக்கல்வி கற்பிப்பேனென்று வந்தது பிசகென்றும் எழுதுகிறார்.

நாம் கேட்பது இது. இப்படி அடிக்கடிப் புகாருக்கு இவர் இடங் கொடுப்பது வாஸ்தவமானல், அதற்குத்தக்க பரிகாரம் ஏன் இன்னும் கும்பகோணம் மகாஜனங்கள் தேடவில்லை? துரையவர்கள் செய்துவருவது மொத்தத்தில் சரியாயிருந்தால்,

ஒருவனறிவானுமெல்லாம்
*  *  *  *
குணனடங்கக்குற்றமுளானும்......
கணனடங்கக்கற்றானுமில்,

என்னும் நியாயத்தை யனுசரித்து, ஏதோ சிறு பிழைகளைப் பார்த்தும் பாராமல் விட்டுப் போகவேண்டும். அல்லது அவர் மூலமாகக் குழந்தைகளுக்கு நற்குணம் விருத்தியாகாதென்று கண்டால் மகாஜனங்கள் ஒருங்கு சேர்ந்து, தங்கள் அபிப்பிராயத்தைத் தக்க சாக்ஷியங்களுடன் நியாயமா யுள்ளபடி டிபார்ட்மெண்டாருக்கோ, வேறு அதிகாரிகளுக்கோ, தெரிவித்துத் தங்கள் மனோரதத்தை நிறைவேற்றிக் கொள்ளவேண்டும். இரண்டையும் விட்டு, எப்போதாவது உரத்த குரலாகக் கூவிவிட்டு அவரவர் வேலையை அவரவர் பார்த்துப் போவதில் ஒரு குணமும் காணுதது நிச்சயம்.

மற்ற விஷயங்களி லெப்படிப் போனாலும், இந்தக்கடிதம் விபரீதக் கடிதமென்றுதான் நமக்குக் காணுகிறது. 'திருவிளையாடல்' வேண்டுமென்றால் காலதேசவர்த்தமானங்களை மறவாமலே செய்தல் தான் பெரும்பதவி வகித்துள்ளவர்க்கு லக்ஷணம். யாவருக்கும் பதவியொன்றிருப்பதால் அதற்குள்ள மரியாதையைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டியதை முதற்கடமை யாக்கிக்கொள்ள வேண்டும். அதிலும் உபாத்திமாருக்கு இது இன்றியமையாத லக்ஷணமாம்.

மதிராசு பால பரிபாலன சங்கம்.

மார்ச்சு மீ 1-தேதி 'மதிராசு பால பரிபாலன சங்கம்' என்னும் தருமகாரிய சபையின் வருஷவாரி ரிபோர்ட்டு வாசிக்கப்பட்டது. இந்தியாவில் எத்தனையோ ஆயிரவருஷங்களாக விவாகமென்பது காம்மியமாகமட்டும் அல்ல, தரும்ப்பிரஜைகளுடைய அபிவிருத்திக்காக வென்று வேதமும், சாஸ்திரமும் முறையிட்டு வந்திருக்கிறது. அனுஷ்டானத்திலும், 'மரியாதை மனிதர்' எல்லோரும் இதைக் கூடியமட்டில் பரிபாலித்துத்தான் வந்திருக்கிறார்கள். தவிர மக்களில்லாதவர், விரதமும், தவமும் செய்து, யாத்திரைபோய், தான தருமங்களை ஏராளமாகச் செய்து வருகிறார்கள். ஆகவே இப்படிச் செய்யும் காரியத்தின் முக்கிய பலனாகிய குழந்தைகளைப் பெற்றோர்கள் எவ்வளவோ பிரியமாக வளர்த்து வருவது தான் சகஜம். அப்படியே தான் அனேகமாய் நடந்து வருவதாகவும் கொள்ளலாம்.

ஆனல் பழைய தருமங்கள் இக்காலத்தில் மங்கிப்போயிருக்கின்றன. ஜீவனம் செய்வதில் முன்னிலும் சிரமம் அதிகரித்தே வருகிறது. பழையஜாதி நியாயங்களும், நிர்ப்பந்தங்களும் முன்போல் ஜனங்களைக்கட்டுப்படுத்துவதில்லை. ஜனங்களும் அதிககூலிமுதலிய காரணங்களினல் இருந்த இடம்விட்டு வேறூர்களுக்கும், வேறு நாடுகளுக்கும் போய்விடுகிறார்கள். வித்தை, நாகரிகம், முதலியன நமது நாட்டில் பெரும்பாலார்க்கு இல்லை. தெய்வ பக்தியும் பழையபடி ஜனங்கள் மனதிலுறைப்பாக இல்லை.

இக்காரணங்களால் பெற்றோர்களுக்குக் குழ

REGISTRAR OF BOOKS REGISTERED 13 JUN 1910 MADRAS

ந்தைகளுடைய க்ஷேமவிஷயத்தில் கவனம் குறைந்து வருவதாகச் சிலகாலமாய் நம்மில் சில விவேகிகளுக்குக் காணவே, போனவருஷம் மதிராசிலும், அதற்குமுந்தி வேறிடங்களிலும் 'பால பரிபாலன சபைகள்', ஏற்பட்டு வேலை நடந்து வருகிறது. வருஷவாரி ரிபோர்ட்டினாலும், சபையில் சிலர் பேசியதினாலும் இரண்டொரு பெரிய ரகசியங்கள் வெளியாகின்றன. கல்கத்தாவில்மட்டும் சுமார் 800-பெண்குழந்தைகள் பதினைந்து வயதுக்குட்பட்டனவாக விபசாரத் தொழிலுக்கென்று பழக்கப் படுகின்றனவாம். பொட்டுக்கட்டுவது இன்னும் சாமான்னியமாக இந்நாட்டில் காணும் வழக்கம். திக்கற்றகுழந்தைகள் அனேகம் நிராதரவாகத்திரிகின்றன. இவைகளுக்குச் சத்திரங்கள் ஏற்படவேண்டும், சங்கத்தார் பொறுப்பு ஏற்றுக்கொள்ளும் விஷயத்தில் அம்மாதிரி அவர்கள் அதீனமாகி வரும் குழந்தைகளுக்கு ஜீவனத்திற்கு உபாயம் ஏதாகிலும் கற்றுக்கொடுக்க வேண்டிவரும். தெரியாத்தனத்தினால் குழந்தைகளைத் தப்புவழியிலாவது, கருணையற்றாவது நடத்தும் பெற்றோர்களுக்கு நயத்திலோ, பயத்திலோ, நல்வழி போதித்துத் திருப்ப வேண்டும். காலக்கிரமத்தில் தக்க சட்டங்கள் வேண்டுமென்று ஜனங்களே அபிலாஷைப்படும்படி பேசியும், எழுதியும் வரவேண்டும். இப்போது 43 குழந்தைகளை அவ்வாறு சன்மார்க்கத்திற்குத் திருப்பி யிருக்கிறது. அந்தக் குழந்தைகளுடைய கதைகளைக் கேட்பவர் நெஞ்சம் கல்லானாலும் உருகிவிடும். பெரிய பட்டணங்களில் தான் இந்த அனியாயம் பலத்து வருகிறது. அனேக கேசுகள் ஒருவருக்கும் தாக்கலாவதில்லை. சட்டம் சில விஷயங்களில் விசித்திரமாக இருக்கிறது.

இந்தத் தருமகாரியத்திற்கு ஜாதி, மதம், முதலிய இடையூறுகள் இல்லை. ஏனெனில், எந்தச் சாதியாகிலும், எந்த மதஸ்தராகிலும், குழந்தைகள் விஷயத்தில் க்ஷேமத்தை நாடி உழைப்பதற்கும், பொருள் உதவுவதற்கும், ஆக்ஷேபமேயில்லை. அவரவர் கருமத்தின்படி போகட்டுமென்று விடுவது சாஸ்திரமுமல்ல, அனுபவமுமல்ல. ஆதலால் பெரிய பட்டணங்களிலெல்லாம் இதற்குக் கிளைச்சங்கங்கள் ஏற்பட்டு நடந்துவருமென்று நம்புகிறோம். சிரத்தைமட்டும் இருந்தால், ஒருவராகவே வெகுதூரம் காரியம் நடத்திவிடலாமென்பதற்கு நமது கவர்னரவர்கள் டாக்டர் ஸ்ரீமான் வி. பி. ராமராயரைப்பற்றிக் கூறியதே சாக்ஷி. ஆதலால் ஒவ்வோரூரிலும்கனவான்கள் ஒன்று சேர்ந்து, ஜாதி மத முதலிய பேதங்களைவிட்டு ஒருமனதாக உழைத்துக் குழந்தைகள் முன்னுக்கு வருவதற்காகப் பிரயாசைப்படவேண்டும். ஏனெனில், இன்று குழந்தையாயிருப்பவர் தாம் நாளைக்குப் பிரஜைகளாகி ஊருக்கு நன்மைக்கோ, தீமைக்கோ காரணமாவது.

**இந்து ஸ்திரீகளுக் கிருக்கும் பதவி**

சென்ற பிப்ரவரி மீ 10உ இங்கிலாந்தில் நமது பங்காள நண்பர் 'சரத் குமார கோஷர்,' இந்துஸ்திரீகளுக்குள்ள யோக்கியதையை விளக்கி யொரு பிரசங்கம் செய்தார். இங்கிலாந்தில் 'வோட்டு' வேண்டி மன்றாடும் ஸ்திரீகளிலொரு சீமாட்டி நமது நாட்டுக்கு வந்து பார்த்துவிட்டுப் போய் இவ்விஷயமாக எழுதியதை அடுத்தமுறை பதிப்பிக்கிறோம். இரண்டையும் படித்து அவரவருக்குள்ள மனோதருமம்போல் யோசித்துக்கொள்ளல்வேண்டும். கோஷர் சொல்லுவது இந்து ஸ்திரீகளுடைய பதவியேயன்றி மகம்மதீயர்களைக் குறித்ததல்ல.

"இந்துஸ்திரீகளைக்குறித்து இங்கிலீஷ்காரர்களுக்கு அனேக விஷயங்கள் தெரியவேண்டியது இப்பொழுது வெகு அவசியம். ஏனெனில், இந்தியாவில் அனேகமாய் எவ்விடத்திலும் 'நாயகத்துவம்' அவளுடையதாயிருக்கிறது. யோசிக்குமிடத்து, இந்து ஸ்திரீ

களுக்குத் தமது நாட்டுப் புருஷரைவிடப் பதவி யுயர்ந்துள்ளது. வேறு எந்த ராச்சியத்திலும் ஸ்திரீகளுக்கு இவ்வளவு உன்னத பதவியில்லை யென்னலாம். வேதங்களில் அனேக பாகங்கள் ஸ்திரீகளுண்டாக்கிய மந்திரங்களாம். இந்தியாவில் இக்காலத்தில் சுயம்வரம் இல்லை. பெற்றோர்களேதான் கல்யாணம் நடப்பிப்பது. என்றாலும், அனேக தேசங்களில் சுயம்வரத்தாலுண்டாகும் தோஷங்கள் இங்கே காணுவதில்லை. ஏனெனில் தருமப்பிரஜைகள் இடையறாது வரவேண்டுமென்கிற சாஸ்திரத்தை யனுசரித்து இவ்விடத்தில் குடும்பவாழ்க்கை யேற்பட்டிருக்கிறது. புருஷனுக்குக் காலையில் ஔபாசனமாகவேண்டுமானாலும், வேறு புண்ணியகருமமாக வேண்டுமானாலும், பத்தினி யனுமதியின்றி ஒன்றும் நடவாது. அவன் தன் கருமத்தை யனுஷ்டிக்கையில், பத்தினி பக்கத்திலிருக்கவேண்டும். இந்தக்காரியம் கூடாதென்று அவள் மனதில் நினைத்தாலும் காரியம் வீணாகிவிடும். ஒவ்வொரு குடும்பத்திலும் யாராவது ஒரு ஸ்திரீ பாக்கியலக்ஷ்மிக்கு வேண்டியவளென்று சாமான்னியமாய் நம்பிக்கையுண்டு. ஆனால் அவள் இன்னாளென்று விளங்குவதில்லையாதலால், குடும்பத்திலுள்ள ஸ்திரீகளையெல்லாம் மரியாதைவைத்து நடத்துவது அவசியமாகியிருக்கிறது. குடும்பத்தில் பெண் குழந்தைகள் பிறந்தால் அழுகையென்று இங்கிலாந்தில் அனேகர் நம்பியிருப்பது பிசகு. அளவிற்குமிஞ்சிப் பெண் குழந்தைகளிருந்தால், எந்தக் குடும்பத்திற்கும் சிரமந்தான். ஆனால் இதனால் பெண்குழந்தைகளுக்கிருக்கும் மரியாதை விளங்குகிறதே தவிர வேறொன்று மன்று. இந்துக்கள் பல பெண் சாதிகள் வேண்டுவதாக ஒரு தப்பெண்ணமும் மேனாட்டில் உண்டு. சந்ததியில்லாவிட்டால், இரண்டாவது கல்யாணம் செய்துகொள்ளலாமென்பது சாஸ்திரம். ஆனால் அனுபவத்தில் அப்படி யனுஷ்டிப்பாரில்லை யென்றே சொல்லிவிடலாம். அதற்கும் மூத்தவளுடைய அனுமதிவேண்டும். படுதாவுக்குட்படுதல், சமையல் செய்தல், முதலியன சாஸ்திர சம்மதமாதலால், அதைக்குறைவாக நினைக்க இடமில்லை. சமையல் அன்னியர் செய்தால் அது நைவேத்தியம் ஆகாது. பிள்ளையில்லாத கைம்பெண்களுக்குக் கொஞ்சம் சிரமமிருந்தாலும், பிள்ளையுடையோர்க்கு ஒரு குறைவுமில்லை. 'சதீ' என்னும் சடங்கு லக்ஷத்திலொருவர் கூடச் செய்வதில்லை. செய்தவரோ தெய்வங்களாகவும், புருஷனுக்கு மோக்ஷம் கொடுக்கும் புண்ணியவதிகளாகவும், பாவிக்கப்படுகிறார்கள். இதனாலும் இந்துக்களுக்குள் பெண்களுக்கிருக்கும் உன்னதபதவி வெளியாகிறது. ஸ்திரீயினுடைய தயவில்லாமல் புருஷனுக்குக் கதிமோக்ஷமேயில்லை. ஆதலால் இவைகளைக் கவனிப்பவருக்கு இந்து ஸ்திரீகளைக்குறித்து வாய்ச்சுளுவாய்ப் பேச மனம் வராது."

**தீண்டாதவர் விஷயம்**

சென்றமாதத்தில் மூன்று சந்தர்ப்பங்களில் இவ்விஷயமாக நம்மில் வெகு பெரிய பதவிபெற்ற ஸ்ரீமான்கள் வெகு உறைப்பாக பேசியதையும், அதைக்கேட்டோர் மனப்பூர்வமாய் ஆமோதித்ததையும் அபிமானிகள் அறிய வேண்டுகிறோம். சேலத்தில் கோ ஆபரேஷன் விஷயமாகப் போயிருந்த கனம் ஜட்ஜி ஸ்ரீமான் வி. கிருஷ்ணசுவாமி அய்யரவர்கள் 'தியாஸபி' மண்டபத்தில் இது விஷயமாக வெகு தெளிவாகப் பேசினார். மதிராசில் பரமஹம்ஸ ஸ்ரீராமகிருஷ்ணசுவாமிகள் ஆராதனதினத்தில், ஸ்ரீமான்கள் சிவசுவாமி அய்யர். சேஷகிரி அய்யராகிய இருவரும் பேசினார்கள், எல்லோரும் ஒரே ரீதியாகப்பேசி, நமது வேத சாஸ்திரங்களில், ஈசுவர சிருஷ்டியிலுள்ள யாரையாகிலும் இகழ்ந்தோ, 'தீண்டாமல்' வைத்தோ, வருவது மகாபாபமென்று முறையிடுவதை விளக்கினார்கள். சாஸ்திர சம்மத

மாகப் பார்த்தால் இந்தியாவில் தான் ஜனங்கள் தாரதம்மியம் சிறிதுங்காணுமல், எல்லோரும் சமானஸ்கந்தராக இருந்துவாழவேண்டும். ஆனல் அனுஷ்டானம் எக்காலத்திலும் வேறுபட்டேநின்றதால், மகாத்துமாக்கள் அப்போதப்போது அவதரித்து, உபதேசம், நடவடிக்கை, இருவகையானும் சாஸ்திரத்தை ஊர்ஜிதப்படுத்தி வந்திருக்கிறார்கள். ஸ்ரீபுத்தபகவான் முதல் ஸ்ரீராமகிருஷ்ணசுவாமிகளீருக, எத்தனையோ மகாத்துமாக்கள் இது விஷயத்திலுழைத்தும், நாளது தேதியில் $5\frac{1}{2}$ கோடி ஜனங்கள் கால் நடைகளுக்கும் தாழ்ந்த ஸ்திதியிலிருப்பது பெரியதோஷம். இவர்களை யிப்படி வைத்துக்கொண்டு, திரான்ஸ்வால் முதலிய இடங்களில் நாம் சமதைவேண்டுவது அக்கிரமம். ஆதலால் வித்தை, குணம், குலம், சீலம், முதலியவை யாரிடத்திலிருப்பதாகச் சொல்லுகிறேமோ, 'அவ்வுயர் குலத்தோராகிய' அனைவரும், இனிக்காலதாமதமின்றி, 'இவ்விழி குலத்தவருக்கு' உண்ணச்சோறும், உடுக்கவஸ்திரமும், தங்கநிழலும், சம்பாதிப்பதற்கு வேண்டிய அறிவைப்புகட்டி, குடிமுதலிய துராசாரங்களைவிலக்கி, மதமுதலிய விஷயங்களில் நன்னெறி கைப்பற்றி யொழுகும்படி செய்து, இந்துமதம், இந்து ஆசாரம், இந்து தருமசிந்தை, இவற்றை வெகுகாலமாகப் பீடிக்கும் கிரகணங்களை யொழிக்கப் பிரயத்தனப்படவேண்டும்.

பேச்சை நிறுத்திக் காரியத்தைத் தொடங்க வேண்டுவதுதான் நல்லதென்று அனேகருக்குக் காணும். என்றாலும் பேச்சு அதிகமாகவும், அடிக்கடியும் இருக்கத்தான் வேண்டும். அதை நிறுத்துவதில் பிரயோஜனமில்லை. மனதில் நினைப்பதை வாயாற் சொல்லித்தான் அது காரியத்திற் காணவேண்டிய முறை. சுவரோடாகிலும் சொல்லியழ வேண்டியது பழைய அனுபவமாதலால், பத்து இடங்களில், விவேகிகள் கேட்பவர் ஏற்குமாறு சொல்லிக் கலகம் பிறப்பித்தால் நியாயமும் தன்னிச்சையாகப் பிறக்கும். தனைபில்லை எவ்விதமாக ஆரம்பிப்பதென்பதுதான் தற்காலம் நிஷ்கரிஷிக்க வேண்டியவிஷயம். ஆரம்பிக்கவேண்டுமென்பதை யாரும் ஆக்ஷேபிப்பதில்லை.

அசை போடுதல்

"யார் யாருக்கு 'அரிசி பருப்புச்செலவு' குறைந்து சுகப்படவேண்டுமோ, அவர்கள் தின்பதையெல்லாம் நன்றாக மென்று தின்ன வேண்டும். யாருக்குச் சிரஜீவித்துவம் வேண்டுமோ அவர்கள் சளையாமல் அசைபோட்டுண்ணல் வேண்டும்," என்று ஒரு மேனட்டுப் பெரிய அம்மாள் எழுதுகிறாள். இப்படிச் செய்து வந்ததால் தன் புருஷனுக்குச் சாமான்னியர் சாப்பிடுவதில் மூன்றிலொருபங்குதான் சாப்பிடுவதற்கு அகத்தியமிருந்ததென்றும், என்றாலும் தேகபுஷ்டி, பலம், வெய்யில், மழை முதலியன பொறுப்பதற்கு வேண்டிய மனோதிடம், இவற்றிலொரு குறைவுங் காணவில்லையென்றும், அவள் கூறுகிறாள், தவிரத் தானும் அவ்வாறே செய்துவந்ததில், தீனி குறைந்ததென்றும், மாமிசம் முதலியன தேவையிருக்கவில்லையென்றும், தங்களிருவருக்கும் சாப்பாட்டுச் செலவில் தினம் 12-அணு விழுக்காடு செலவு குறைந்ததென்றும், எழுதியிருக்கிறாள். ஆதலால், நமது நாட்டிலுள்ளவர்கள் அனேகருக்கு வயிறு நிறையச் சாப்பாடு கிட்டுவதில்லையென்பது கொண்டு, கிட்டுவதை அதிகமாக்கி வயிற்றை நிரப்பச் சுலபமான வழியொன்றேற்பட்டதற்காகச் சந்தோஷிக்கிறோம். அவர்களுக்கெல்லாம் நாம் சொல்லுவது, "ஓ இஷ்டர்களே, சாப்பிடும்போதும், சிற்றுண்டி தின்னும்போதும், அசை போடுங்கள், அசை போடுங்கள், அசை போடுங்கள்!! தனிகர்களானல் அவர்கள் இன்னும் மிச்சம் பிடிக்க வழியுண்டாகிறது. ஏழைகளானல் அரை வயிறுகாண்பதைக்கொண்டு வயிற்றை நிரப்ப

லாம்,'' என்பதே. இந்தியர்களுக்கோ மொத்தத்தில் பல்வெகு நேர்த்தியென்பதும், வலுவென்பதும் உலகமறிந்த விஷயம். ஆதலால் வயிறு நிறைய அசை போடலாம்.


மைசூர் சமஸ்தானத்தில் தேவ தாசிகள் விஷயமாய் உத்திரவு

'முளபாகல்' ஸ்தலத்தில் ஸ்ரீ ஆஞ்சநேய சன்னிதி யொன்றிருக்கிறது. அதில் அவ்விடத்திலுள்ள தேவதாசிகள் யாருக்காவது புதிதாகப் 'பொட்டுக்கட்டவேண்டிய' காலத்தில் அந்தப் பெண்ணைக் கூட்டிப்போய் 'கெச்சை பூஜை,' என்றால் தாசிகளுக்குக் கூத்துக்கு முக்கிய அங்கமாகிய 'சதங்கைப் பூஜை' யென்று ஒரு சடங்கு நடத்துவது வழக்கம். சமீபகாலத்தில் ஒரு பெண்ணுக்கு இந்தக்கோலம் கொண்டு நடத்தப்பிரயத்தனமானதில், அவ்விடத்திய மகாஜனங்கள் அதை யாக்ஷேபித்துத் தடைசெய்யப் போனார்கள். தாசிகள் அமில்தாருக்கு மனு கொடுத்தார்கள். அவருக்கும் கலகமாகுமென்று கண்டதால், இந்தச் சடங்கு கூடாதென்று உத்தரவு செய்தார்.

அசிஸ்டாண்டு கம்மிஷனருக்குத் தாசிகள் அப்பீல் செய்ததில், அவர் கெச்சைபூஜைக்கும், ஜாதி நிபாபத்திற்கும் சம்பந்தமில்லையென்றும், மனுதாரர்கள் பிரார்த்தனை செய்துகொண்டிருப்பதாலும், இந்தப் பூஜை வெகு காலமாய் நடந்து வருவதாலும், பதிவுபோல நடப்பதில் ஆக்ஷேபங்காணவில்லையென்றும் விதித்தார். ஆனால் இந்தக்கோவில் சர்க்கார் விசாரணைக் குட்பட்டிருப்பதால், டிப்டி கம்மிஷனர் இவ்விஷயத்தில் என்ன செய்வதென்று சர்க்காரைக் கேட்டார்.

சர்க்கார் இவ்விஷயத்தைக் கவனித்துப்பார்த்ததில், இந்தச்சடங்கின் ரகசியத்தை எந்தப் பெயர்கொண்டு மறைத்தபோதிலும், 'கெச்சைபூஜை' யென்பது, பூஜைசெய்யும் பெண்ணைத் தாசித்தொழிலுக்குக் கங்கணம் கட்டிவிடுவதென்பது பிரசித்தமாகத் தெரிந்த விஷயம். ஆதலால் சர்க்கார் அதீனமான கோவில்களில் இந்த அக்கிரமம் நடப்பதைச் சும்மா விருந்து பார்த்திருக்கச் சர்க்காருக்கு மனமில்லை. இந்தச் சடங்கு கோவில்களில் நடவாததால் யாருக்கும் விசேஷ நஷ்டமில்லையென்று, மனுதார் வாக்குமூலமாகவும், சர்க்கார் ஆகம சாஸ்திரி யெழுதிவைத்திருப்பது மூலமாகவும், சர்க்காருக்குத் தெரிவதால், மைசூர் சமஸ்தானத்தில் முஜரா டிபார்ட்மெண்டு பார்வையிலுள்ள யாதொரு ஆலயத்திலும் கெச்சைபூஜையாவது அதுபோன்ற வேறு யாதொரு சடங்குமாவது நடக்கக்கூடாதென்று உத்தரவு செய்கிறார்கள். இதரா தேவஸ்தானங்களுக்கு வழிபிறக்குமா?

ஒரு கனவான் வீட்டுத்திண்ணையில் அனேக இஷ்டர்கள் கூடிப் பேசிக்கொண்டிருந்தார்கள். வீட்டுக்காரருடைய மகன், ஐந்துவயதுக்குழந்தையும் அவ்விடத்திலுட்கார்ந்திருந்தான். ஏதோ பேச்சுமேல் பேச்சாகவரும்போது ஒரு கனவான், இந்தக்குழந்தையின் சாதுரியத்தை மெச்சினார். மற்றொருவர் அதற்கு உத்தரமாக, 'நான் அனேகம் குழந்தைகளைப்பார்த்திருக்கிறேன். அனேகமாய்ச் சிறுவயதில் புத்திசாலிகளாகவும், உற்பாதப்பேச்சுகள் பேசியும் இருப்பவர்களெல்லாம், வயதாக ஆகக் குரங்குகளாகவும், எருமைகளாகவும் ஆகிவிடுகிறார்கள்,'' என்றார். இதுவரை சும்மாயிருந்த அக்குழந்தை இதைக்கேட்டதும், 'ஐயா, ஆனால் தாங்கள் குழந்தைப்பருவத்தில் வெகு உற்பாதமாயிருந்தீர்களோ?'' வென்று மட்டும் கேட்டது. அச்சபையில் ஒருவரொழிய மற்றெல்லோரும் வெடித்த சிரிப்பாகச் சிரித்தார்கள்.



நம்பூதிரி

MADRAS

## நம்பூதிரிமார்

ஸ்ரீமான் ஈ. எஸ். சுப்பிரமணியப்பாட்டம்
ஆளி அவர்கள், பி. ஏ., பி. எல்.

பரசுராம க்ஷேத்திரமென்கிற கேரளதேசமானது இந்தியாவின் தென்மேற்குக்கோடியில் இருக்கிறது என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயமே. மேற்குத்தொடர்ச்சி மலையின் இரு பக்கங்களின் காட்சிகள் நிரம்பவும் விசேஷமாயிருக்கும். மேல்புறத்திய சமுத்திரத்தில் விசேஷத் துறைமுகங்களில் ஒன்றான கொச்சித் துறைமுகம் கேரளத்திற்கு ஒரு விசேஷபெருமையைக் கொடுக்கிறது. கேரள பூர்வவிருத்தாந்தத்தை விளக்கும் கிரந்தத்தில், இந்தப் பூமியைச் சமுத்திரத்திலிருந்து மீட்டு எடுத்து ஸ்ரீ பரசுராமன் தான் க்ஷத்திரியர்களைக் கொலை செய்த பாபத்திற்காகப் பிராமணர்களுக்குத் தானஞ்செய்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த நாட்டிலிருக்கும் சுதேசிகளுக்குள் பிரத்தியேக ஆசார நடவடிக்கைகள் காண்கின்றன. ஆதலாலவர்களில் முக்கிய ஜாதியாருடையவும், அங்கு வெகு நாளைக்கு முன் குடியேறி அவர்களுடன் வெகுவாய்க் கலந்துவிட்ட இரண்டொரு ஜாதியாருடையவும், நடை, உடை, பாவனைகளைச் சுருக்கி யுரைப்பது நலமென்று காணுகிறது. முதன் முதல் நம்பூதிரிகளைப் பற்றிப் பேசுவோம். கேரளநாட்டிலிருக்கும் பழைய பிராம்மணர்களுக்கு நம்பூதிரிகள் என்று பெயர். இந்தப் பதம், 'ஐயர், ' 'அய்யங்கார்,' என்பவைபோன்று, மரியாதையைக் குறிப்பிடுவது. 'சுவாமிஜீ' என்பதுபோலவென்க.

நம்பூதிரிகள் சுமார் 1000-வருஷத்திற்கு முன் கேரளத்திற்கு வந்ததாகத் தெரியவருகிறது. அவர்களுக்குப் பூர்வீகஸ்தலம் காவேரி, நர்மதை, கிருஷ்ணா இந்த நதிகளின் ஓரமென்று சிலபேர் அபிப்பிராயப்படுகிறார்கள். இப்பொழுது பம்பாய்க்கு வடக்கே புரோஸ் என்னுமிடத்தில் பார்க்கவப் பிராமணர்கள் என்று ஒரு ஜாதிக்காரர் இருப்பதாகத் தெரியவருகிறது. பார்க்கவர் என்பது பரசுராமனுக்கு உபயோகப்படும் வேறு பெயர். ஏனெனில் அவர் பிருகு மகரிஷி வமிசத்தவர். அவர்கள் கொஞ்சம் தாழ்ந்த பிராமணர்களாக நினைக்கப்படுகிறார்கள். க்ஷத்திரிய வமிசத்தை வேரறுக்கயத்தனித்த பரசுராமனைப் பாபியாகவும், ஆதலால் அவருடைய பரிவாரங்களான பரசுராமப் பிராம்மணர்களைத் தாழ்ந்தவர்களாகவும் ஜனங்கள் காலக்கிரமத்தில் எண்ணியிருந்தாலுமிருக்கலாம். ஆகவே ஒருக்கால் நம்பூதிரிகள் அவ்விடத்திலிருந்து வந்தாலும் வந்திருக்கலாம்.

கேரளத்தில் இவர்கள் வந்தபொழுது பாம்பு முதலிய விஷ ஜந்துக்களாலும், இன்னும் அனேக உபத்திரவங்களாலும், முதல் வந்தவர்கள் ஓடிப்போய்விட்டதால், கேரளத்திற்கு வந்த பிராமணர்களை அங்கேயே ஸ்திரமாக இருக்கும்படி செய்ய அவர்களுடைய சிகைகளை அத்தேச ஆசாரப்படி முன்னுக்கு வைத்தும், பிராம்மணர்களிலில்லாத அநேக அனுசாரங்களை இவர்களுக்காகக் கூட்டியும், ஸ்ரீபரசுராமன் ஏற்பாடு செய்து இருப்பதாகச் சொல்லும் கதையானது வாஸ்தவமாயிருக்கலாமென்று அவ்விடமிருக்கும் ஜனங்களைப் பார்க்கும்பொழுதே தெரியவருகிறது.

இப்பொழுது உள்ளபடி நம்பூதிரிகள் நான்கு வகுப்பினர்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றனர். முதல் வகுப்பினர், தம்பிராக்கள், ஆட்டியன்மார், என்று இரண்டு கிளைகளாகப் பிரிந்திருக்கிறார்கள். இவர்களை ஏனையோர் நம்பூதிரிபாடு என்று மரியாதையாகச் சொல்வார்கள். மற்ற வகுப்பினர்களை நம்பூதிரிகள் என்றுமட்டும் சொல்லுவார்கள். இவர்கள் மதவிஷயத்தில் யாகம் முதலிய கருமங்கள் செய்யும் பதவியைவிட உயர்ந்த பதவி அடைந்து இருப்பதாகத் தெரிகிறது. அதனால்

அவர்கள் யாகம் முதலியன தங்களுக்கு வேண்டியதில்லை என்று வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இவர்களில் சிலர் தந்திரிகளாகிக் கருமத்தில் வரும் சந்தேகங்களை நிவர்த்தி செய்ய ஏற்பட்டவர்கள்.

இரண்டாவது வகுப்பினர் விசிஷ்டநம்பூதிரிகள். இந்த வகுப்பிலும், அக்கினிஹோத்திரிகள், பட்டத்திரிகள், என்று இரண்டு பிரிவுகள் உண்டு. அக்கினிஹோத்திரிகள் பெரிய யாகம் முதலியவற்றைச் செய்கிறவர். பட்டத்திரிகளுக்கு யாகங்கிடையாது. அவர்கள் தர்க்கம், வேதாந்தம் முதலிய சாஸ்திரங்களைப் படித்து 'வாத்தியான்' நம்பூதிரிகளாக இருக்கிறார்கள். மூன்றாவது பிரிவினர் சாமான்னிய நம்பூதிரிகள். இவர்களுக்கு வேதங்களைப்படிப்பதற்கு மட்டும் அதிகாரமே அல்லாமல் யாகங்கள் செய்ய அதிகாரமில்லை. இவர்கள் சாதாரணமாய்க் கோயில்களில் பூஜைவகையராக்களைச் செய்யப்பட்டவர்கள். நான்காவது பிரிவினர் கேரளத்தில் பிரசித்தியான அஷ்ட வைத்தியர்களாகிய ஜாதிமாத்திரக்காரர் என்பவர். இந்த வகுப்பினர் அத்தியயனத்திற்கு அதிகாரமில்லாதவர்கள். அதாவது, அவர்களுக்கு வேதஞ்சொல்ல அதிகாரம் இல்லை.

நம்பூதிரிகள் சாதாரணமாய்ப் பெரிய தோட்டங்களின் நடுவில் வாசஞ் செய்கிறார்கள், கேரளத்தில் அனேகமாய் எல்லா இடங்களிலும் காண்பதுபோலவே தனித்தனியாய் வீடுகள் கட்டி இவர்களும் வசித்து வருகிறார்கள். இவர்கள் இருப்பிடங்களுக்குச் சாதாரணமாக இல்லம் என்றும், பெரிய நம்பூதிரிகள் இருப்பிடத்திற்கு மனை யென்றும் பெயர். சூத்திரர்கள் சாதாரணமாக அவர்கள் இருப்பிடங்களை மனையென்றே சொல்வார்கள். நம்பூதிரிகளுடைய மனைகளைச் சுற்றியிருக்கும் தோட்டக் காக்ஷிகள் நிரம்பவும் அதிசயிக்கத்தக்கனவாயிருக்கும். சாதாரணமாகப் புளி, மா, பலா, தெங்கு, பாக்கு, முதலிய மரங்களும், சேனை, சேம்பு முதலிய கிழங்குகளும், எல்லா விதமான வாழைகளும், நானாவிதமான புஷ்பச்செடிகளும் ஆகிய இவைகள் தோட்டத்தைக் குளிர்ச்சியாகச் செய்கின்றன. தோட்டங்களின் வடமேற்குப் பாகத்தில் ஒரு 'பாம்புக்காவு' இருக்கும். அவ்விடத்தில் சாதாரணமாக உயிருள்ள பாம்புகளும் காணும். ஒவ்வொரு இல்லத்திலும் தென்கிழக்கு மூலையில் அந்த இல்லத்திற்குச் சுடுகாடு காணும். இல்லங்கள் அநேகம் 'பிறை'களுடன் அதிகவிலை பிடிக்கும் படியான மரக்கூடுகளாக இருக்கும். இல்லங்களின் வடகிழக்குப் பாகத்தில் கோசாலை அல்லது மாட்டுக்கொட்டம் இருக்கும். இப்படித் தனிவீடுகளாயிருப்பது சுகாதார விஷயத்தைக் குறித்தமட்டில் நிரம்பவும் நன்மையுடையதாயிருக்கிறது. அதாவது நம்பூதிரிகளிடமிருந்து நாம் தெரிந்துகொள்ளக்கூடியவைகளில் இது ஒன்று.

நம்பூதிரிகள் வீடுகளில் மேஜை நாற்காலிகள் கிடையாது. ஆமைவடிவு போன்ற பலகைகளும், பாய்களும்தான் அவர்களுடைய ஆசனங்கள். சாப்பிட உட்காருவது பலகையில் தான். பலகையில்லாமல் சாப்பிட உட்காருவதே கிடையாது.

கொங்க தேசத்தார்களைப்போல் கேரளீயர்களுக்குள் பாகஞ்செய்துகொள்வது அபூர்வம். குடும்பத்தில் வயதில் பெரியவர் சொத்துக்களைப் பாதுகாத்துக் குடும்பத்தைச் சேர்ந்த மற்ற ஜனங்களுக்குச் சாப்பாடு வகைராக்கள் கொடுத்து ரக்ஷித்து வருவது வழக்கம். நம்பூதிரிகளுக்குள் குடும்ப விருத்திக்காக அவரவர் குடும்பத்தில் மூத்தமகனுக்குமட்டும் கல்லியாணம் செய்துவைப்பது வழக்கம். வயதில் மூத்தவன் மூன்றுகல்லியாணம்வரையிலும் செய்தும், குடும்பத்திற்குச் சந்ததியில்லாவிட்டால் அவனுக்கு இளையவன் கல்லியாணஞ் செய்து

கொள்வான். அந்தக் குடும்பத்தைச்சேர்ந்த மற்ற புருஷர்கள் சூத்திர ஸ்திரீகளுடன் சம்பந்தம் செய்துகொள்வது வழக்கம். சுவயம் கேரளீயவாசிகளாகிய நாயர்ஸ்திரீகள் நம்பூதிரி முதலிய பிராம்மணர்களைத் திருப்திசெய்யும் பொருட்டுத் தங்களுடைய பாதிவிரத்தியத்தையும், மார்பை மூடிக்கொள்ளும் துணியையும் விட்டுவிடும்படியாக ஸ்ரீ பரசுராமர் உத்தரவு செய்திருக்கிறுரென்று கேரளத்தில் ஒரு ஐதிகம். இப்பொழுது நாகரீகம் ஜாஸ்தியாகிவருவதால், இந்த விதிக்குச் சற்றுப்பலக்குறைவு கண்டு வருவதாகச்சொல்லலாம். இந்த ஆசாரத்திற்குக் காரணம் என்னவாயிருந்தாலும், இப்படி நடப்பு இருப்பதற்குச் சந்தேகமே இல்லை. நாயர்தரவாடுகளில் மருமக்கதாயம் சம்பிரதாயமாயிருப்பதால், இந்தப்படி நடப்பது அவர்களுக்குச் சகஜம். மருமக்கதாயப்படி ஒரு மனிதனுடைய சொத்துக்கள் அவனுக்குப் பிற்காலம் அவன் மக்களைச் சேராமல், அவன் மருமக்களுக்கு (சகோதரி குழந்தைகளுக்குச்) சேரும். நம்பூதிரிகளுக்குள் இந்த மருமக்கதாய ஆசாரம் விசேஷமாய்க் கிடையாது. பையனூர் கிராமத்தில் இருக்கும் நம்பூதிரிகள் மட்டும் இந்தச் சம்பிரதாயத்தை அனுசரிக்கிறுர்கள். ஆனுலும் அவ்விடத்திலும் சொந்த மக்கள்தான் தாய் தகப்பனுர்களுக்கு உத்தரகிரியை செய்யவேண்டியது.

நம்பூதிரிகள் கல்லியாணம் செய்துகொள்வதற்கு முன்னுடி ஜாதகப் பொருத்தங்களை விசேஷமாய்க் கவனித்துப் பார்ப்பார்கள். நம்பூதிரிகளில் மூத்தமகன் மட்டும் கல்லியாணஞ் செய்துகொள்வது வழக்கமாதலால், அவர்களுக்குள் இருக்கும் எல்லாப் பெண்களுக்கும் செலவில்லை. ஆதலால் நம்பூதிரிகள் பெண்களைக் கல்லியாணம் செய்துகொள்வதற்கு முன்னமே அந்தப்பெண்களுக்குள்ள ஸ்திரீதனம் நிச்சயப்படுத்துவது முக்கியமாய் இருக்கத்தானே வேண்டியது. சட்டப்படி எல்லா நம்பூதிரிகளும் கல்லியாணம் செய்துகொள்வதில் தப்பிதமில்லையென்று சென்னை ஹைகோர்ட்டில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஆனுல் அந்தத் தீர்மானப்படி நடவடிக்கை கொஞ்சம் மட்டுத்தான். இந்த ஸ்திதியில் பெண்கள் அதிகரித்தே வருவதால், வரதக்ஷிணை ஜாஸ்தியாய் இருப்பது ஆச்சரியமல்ல. தகுந்த தொகை கொடுக்கச் சக்தி இல்லாத இல்லங்களில் கல்லியாணமாகாத பெண்கள் எந்த வயதிலும் நாலு அல்லது ஐந்து இருப்பதுண்டு. ஆனுல் இதை மற்றவர்கள் இகழ நியாயமில்லை. வரதக்ஷிணையை நினைந்து, மனமுருகிப் பைத்தியம் பிடிப்பவரும், பெண் குழந்தைகளைக் கொன்றுவிடும் ராஜபுத்திரரும், நம்பூதிரிகளைப் பார்த்து இவ்விஷயத்தில் நன்றுகப்படித்துக் கொள்ளலாம். 'எட்டு வருஷமானுல் கன்னிகை,' என்கிற தப்பு ஸ்மிருதியைக் கட்டிக்கொண்டழுபவரெல்லாம் இவர்களுடைய சம்பிரதாயத்தை அனுஷ்டித்தால் கஷ்டம் விடியும். இது நிற்க.

ஒரு நம்பூதிரி இரண்டு மூன்று கல்லியாணங்கள் செய்திருந்தபோதிலும் எந்தக் கல்லியாணத்திலாவது முதலில் பிறக்கும் மகன்தான் கல்லியாணஞ்செய்து குடும்பவிருத்தி செய்யப் போகிறவன்.

கல்லியாணத்திற்காக மாப்பிள்ளை வகையராக்கள் பெண்வீட்டுக்குப் புறப்படும் தருணத்தில் பெண்ணினுடைய தகப்பன் செலவில் மாப்பிள்ளை வீட்டில் ஒரு பெரிய சமாராதனை நடக்கும். அதற்குப் பிறகு மாப்பிள்ளை தன் தாயாரிடமிருந்து கொஞ்சம் பொரியும், ஒரு அப்பமும், மாலையும் பெற்றுக்கொண்டு பெண் வீட்டுக்குப் போவான். அவன் கையில் கங்கணங்கட்டிப் பெண்ணுக்குள்ள தாலியும், அதிர்ஷ்ட சூசகமான ஒரு கண்ணுடியும், கல்லியாணப் பெண்ணுக்கு துஷ்ட தேவதைகள் உபத்திரவத்தை நீக்கும் பொருட்டு ஒரு அம்

பும், இரண்டுஜோடி வஸ்திரங்களும், பதினாறு கணுக்களுள்ள ஒரு மூங்கில் தடியும் கொண்டு அவன்கூட வருவார்கள். மாப்பிள்ளைக்கு முந்தி சில நாயர் வேலைக்காரர்கள் வாள் வீசிக் கொண்டு போவார்கள். இது நம்பூதிரிகளுக்கு ஒருகாலத்தில் கேரளத்தில் ராச்சியாதிகாரம் இருந்ததைக் காட்டுவதாய் இருக்கலாம். பெண் வீட்டுக்கு இவர்கள் போனதும் நம்பூதிரி ஸ்திரீகள் வெளியில் வரக்கூடாதவர்களாதலால் அவர்களுக்குப் பதிலாகச் சில நாயர் ஸ்திரீகள் இவர்களை அழைத்துப் போவார்கள். மாப்பிள்ளை தன் வலதுகாலை அந்த வீட்டுக்குள் வைத்து உள்ளே போனதும், பெண்ணின் தகப்பன் மாப்பிள்ளையை நோக்கி, நீர் ஸ்நானஞ்செய்து கல்லியாணத்திற்கு வரவேண்டுமென்று சொல்லுவார்! நந்திமுக முதலிய கருமங்களைச் செய்தபின் இச்சுபகாரியத்திற்காக இல்லத்தைச் சுத்தி செய்து பெண்ணின் தகப்பன் தீபத்தின்முன் கிழக்கு நோக்கி உட்காருவான். அந்த வீட்டுநாயர் வேலைக்காரன் ஒரு மண்கலத்தைத் தகப்பனுக்கு முன் வைத்து ஒரு பூமாலையைக் கையில் கொடுப்பான். கன்னிகாதானம் செய்யத் தயாராயிருக்கும் தகப்பன் மாப்பிள்ளைக்குத் தக்க உபசாரங்கள் செய்ய, மாப்பிள்ளை அந்தப் பெண்ணினுடைய தகப்பன் தலையைத் தொடுவான். அதற்குப்பின் பெண்ணினுடைய தகப்பன் ஓமகுண்டத்திற்கு முன் சில கருமங்களைச் செய்வதுண்டு. ஒரு சுபமுகூர்த்தத்தில் மாப்பிள்ளைகொண்டு வந்திருக்கும் தாலியைக் கல்லியாணப் பெண்கழுத்தில் அந்தப் பெண்ணினுடைய தகப்பனே கட்டி விடுவான்! மாப்பிள்ளை கட்டுவதில்லை. பிறகு ஒரு நாயர் ஸ்திரீ ஒரு தட்டத்தில் எண்ணெயில் எரிந்து கொண்டிருக்கிற அநேகம் திரியும் கொண்டு, இப்பொழுது முகம்மூடி வெளியில் வந்திருக்கும் மணப்பெண்ணின் முன் ஆரத்தி எடுப்பாள். இதற்குப்பிறகு மாப்பிள்ளைக்கும் பெண்ணுக்கும் வேதகோஷங்கள் நடந்துகொண்டிருக்கையில் முகதரிசனம் நடக்கும். பெண்ணின் தகப்பன் "இரண்டு பேர்களும் சேர்ந்து தருமத்தை அனுஷ்டிக்கவும்" என்று மூன்று தடவை சொல்லி, மாப்பிள்ளை கையில் தன் பெண் கை மேலும் மாப்பிள்ளை கை கீழுமாக இருக்கச்செய்து தாரை வார்ப்பார். இதற்குப்பின் பாணிக்கிரகணமும் பிராமணர்களுடைய ஆசீர்வாதமும் நடந்தேறும். பிறகு லாஜஹோமம், அக்கினி பிரதக்ஷிணம், அம்மி மிதித்தல், முதலியவைகள் கிரமமாய் நடக்கும். இதில் அந்தப்பெண்ணை அந்தக்கல்போன்ற ஸ்திரமான கற்புடன் இருக்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள். பிறகு ஸப்தபதி நடக்கும். இதரப்பிராமணருக்குள் ஸப்தபதி நடந்தால்தான் கல்லியாணம் நிறைவேறுகிறதாக அபிப்பிராயம். கேரளத்திலோ பாணிக்கிரகணத்திற்கு விசேஷம் ஏற்பட்டிருக்கிறது. இந்தக் கருமங்கள் முடிந்தவுடன் மணப்பெண் தன் புருஷன் வீட்டுக்கு ஔபாசன அக்கினியுடன் போய் அவ்விடத்தில் அடுத்த மூன்று நாள் கிருகஸ்த கருமங்கள் செய்யவேண்டும். கல்லியாணம் ஆரம்பித்து முதல்நாள் முதல் மூன்றுநாள் வரையில் அவர்கள் படுக்கை முதலியன உபயோகப்படுத்தக் கூடாது. அக்காலங்களில் மணப்பெண்ணும் மணவாளனும் உப்புச் சேர்த்துச் சாப்பிடவுங் கூடாது. நான்காம் நாள் சாயந்திரம் இரண்டு பேர்களும் எண்ணெய்தேய்த்துஸ்நானஞ்செய்து, ஹோம கருமங்கள் முடிந்தவுடன், சயன அறைக்குள் புகுவார்கள். அடுத்த பௌர்ணமிக்கு மறுநாள் ஸ்தாலிபாகம் செய்வதுடன் சடங்குகள் முடிவுபெறும். சில யஜுர்வேத நம்பூதிரிகள் இந்தக் கருமங்களுடன் மீன் பிடிப்பதாக ஒரு சடங்கு நடத்துவதும் உண்டு. ஆனால் இது நம்பூதிரிகளுக்கு மட்டுமே விசேஷித்த சடங்

கல்ல. ஏனெனில் போதாயனர்களான இதரப்பிராம்மணர்களுக்குள்ளும் இந்த வழக்கம் உண்டு ஆதலால் இது வெகு புராதனமாகவே காணுகிறது. இதுதான் சாதாரணமான கல்வியாண விபரம்.

இதைத்தவிர சருவஸ்வதானம் என்றுவேறு ஒரு கல்லியாணமும் உண்டு. ஒரு நம்பூதிரி இல்லத்தில் ஒருவர் இறந்து, ஆண் சந்ததி இல்லாமல் ஒரு பெண்மட்டிலும் கல்லியாணம் செய்து கொடுக்கவேண்டியிருந்தால், விதவையான அந்தப்பெண்ணின் தாய் ஒரு நம்பூதிரியை அழைப்பித்து, இறந்துபோன தன் புருஷனுடைய கருமாதிகளைச் செய்வித்து, தன் பெண் உள்பட தனக்கு உள்ள சருவ சொத்தையும் அந்த நம்பூதிரிக்குத் தானம் பண்ணிவிடலாம். இறந்த நம்பூதிரிக்குக் கருமங்கள் செய்யத் தாயாதிகள் இருந்தால், அவர்களில் யாராகிலும் கருமங்களைச் செய்து தங்களுக்கு வேண்டியதை எடுத்துக்கொண்டு, மீதி சொத்தையும் பெண்ணையும் வேறு ஒரு நம்பூதிரிக்குக் கொடுத்துவிடுவார். இந்தச் சருவஸ்வதானக் கல்லியாணத்தில் உண்டாகும் சந்ததிகளுக்கு அவர்களுடைய தகப்பனுடைய இல்லத்துச் சொத்துக்குப் பாத்தியதை இல்லை. இந்தத் தகப்பன் குடும்பத்திலும் ஆண்சந்ததி இல்லாவிட்டால் இந்தச் சருவஸ்வதானம் சந்ததிகளில் ஒன்றைத்தன் தகப்பன் குடும்பத்திற்கு வார்சாக ஏற்படுத்தலாம். எந்தக் குடும்பத்திலும் மூத்த மகன் சருவஸ்வதானக் கல்லியாணம் செய்துகொள்ளக் கூடாது.

கல்லியாணத்தில் சந்ததிகள் இல்லாவிட்டால் தத்து எடுத்துக் கொள்வதுண்டு. சாஸ்திரப்படிக்குச் சாதாரணமாய் நடக்கக்கூடிய தத்துக்குப் பத்துக்கைதத்து என்று பெயர். இதில் ஐந்துபேர்கள் சம்பந்தப்பட்டிருக்க வேண்டியதென்று அந்த வார்த்தையினாலேயே தெரியவருகிறது. தத்து மகனுக்குச் சொந்தத்தாய் தகப்பனும், தத்துவாங்கிக் கொள்ளும் தாயும் தகப்பனும் தத்துமகனுமாக ஐந்துபேர்கள். இவர்கள் ஒரேகோத்திரத்தைச்சேர்ந்தவர்களாக இருக்கவேண்டும். இந்தப்படி தத்து எடுக்கப்பட்ட பையனுக்குத் தன் சொந்தத் தாய் தகப்பனுடைய உத்தரகிரியையும் செய்ய வேண்டும். இந்தப்பையனுக்கு உபநயனம் முதலியன சொந்தத் தாய் தகப்பன் வேண்டுமானால் செய்யலாம். இதைத் தவிரத் தர்ப்பை, ஸமித்து, முதலியவைகளால் ஹோமம்செய்து தத்து எடுப்பதும், ஒரு குடும்பத்திற்குச் சந்ததி யில்லாவிட்டால் ஒரு நம்பூதிரியைக் குடும்பத்தில் ஒருவராகச் சேர்த்துக் கருமங்கள் ஒன்றுமில்லாமலே தத்து எடுத்துக்கொள்வதுமுண்டு.

நம்பூதிரி ஸ்திரீகளுக்கு 'அந்தர்ஜனம்' அல்லது அம்மைமார் என்று பெயர். ஒரு குடும்பத்திற்குப் பத்துநாள் தாயாதிகளாவது, மூன்றுநாள் தீட்டுக்காரர்களாவது இல்லாதவரையில், அக்குடும்பச் சொத்துக்குப் பாத்தியஸ்தனை ஒரு நம்பூதிரியை ஏற்பாடு செய்ய இந்த அந்தர்ஜனத்துக்குப் பாத்தியமுண்டு. நமக்குள் நடப்பில்லாத இன்னொரு வழக்கமும் நம்பூதிரிகளுக்குள் உண்டு. அந்தர்ஜனம் இஷ்டப்பட்டு ஏதாவது ஒரு நம்பூதிரியைத் தன்னுடைய இல்லத்திற்குச் சந்ததிக்காகக் கல்லியாணஞ் செய்துகொள்ளச் செய்து, அதில் உண்டாகும் குழந்தையைத் தன்னில்லத்திற்குப் பாத்தியஸ்தனாகச் செய்து கொள்ளலாம். தத்து எடுத்துக்கொள்ளுகிற பையனுக்கு நிபந்தனையில்லை. நம்மைப்போல ஒரு காலத்தில் ஒருவனைத்தான் தத்து எடுத்துக் கொள்ளலாமென்கிற நிபந்தனையுங்கிடையாது.

(இன்னும் வரும்)

## இந்திய பிராசீன சுவயம்வரம்

ஸ்ரீமதி-மீனாக்ஷியம்மாள்

இக்காலத்தில் இந்தியர்களில் கல்வி கேள்விமிகுந்தவர்களுக்குள் நமது விவாக முறையைப்பற்றித் திருப்தியேயில்லை. இப்பொழுது நடப்பதெல்லாம் பழையநாளில் நடந்த நெறிகோணி உண்டாகிய தென்றும், ராச்சியத்தில் ஜனங்களுக்குச் சுவாதந்திரியம் போய், உயிர், உடைமை யெல்லாவற்றிற்கும் பயம் வெகுவாயதிகரித்த மத்திய காலத்தில் வந்த தென்றும் அவர்கள் வாதாடுகிறார்கள். ஆகலால் இப்பொழுது நமக்கு அதிர்ஷ்டவசத்தினல் மறுபடி சுவாதீனம் கிடைத்திருப்பது கொண்டு, அதற்கனுசாரமாக இந்த வேண்டா விலங்குகளையும் தறித்தெறிந்து விட்டுப் பழையபடி நேர்வழியில் போகவேண்டுமென்பது அவர்கள் கோரிக்கை. ஆகவே, விவாகம் பழையபடி தம்பதிகளுடைய இஷ்டத்தைக் கொஞ்சம் அனுசரிக்கவேண்டு மென்பதும், இப்பொழுது வெகு காலமாய் நடந்து வருகிற மாதிரி ஜீவகளையற்று, இதரர் இஷ்டம்போலவே நடக்கக்கூடாதென்பதும் அவர்கள் கக்ஷி. தவிர வதூவரர்களுடைய பரஸ்பர சம்மதம் அவசியமாகிவருமளவிற்குக் கன்னியா சுல்கம், வரதக்ஷிணை, இரண்டுங் குறைவது சாத்தியம்.

இது நடக்கவேண்டுமானல், தம்பதிகளுக்கு விவாகம் குழந்தைப் பருவத்தில் நடப்பது நிற்கவேண்டும். ஆணும் பெண்ணும், குழந்தைப் பருவம் நீங்கி யௌவனம் வந்தபின்பே விவாகத்தைப்பற்றி யோசிக்கவேண்டும். ஏதோ ஒரு முறையில் இருவர் தம்பதிகளாவதற்கு முன், இவர்களுக்குப்பரிசயமுண்டாகி, ஒருவருடையகுணம், சுபாவம் முதலியவை மற்றொருவருக்கும்ஹிதமாகமனதிற் படவேண்டும். பின்னரேஇவர்கள்தம்பதிகளாகவேண்டும். இதுநமக்குள்புதிதன்று. வேதம், இதிகாசங்கள் இவைகளைப் பரிசோதித்தால், வேண்டிய சாக்ஷியங்களகப்படும். இப்படிச் சுவயம்வர பூர்வகமாய் ஆகிய விவாகங்களினல் தான் தம்பதிகள் தமக்குள் அனுகூலமாக நடந்து, அதனல் நல்ல சந்ததியும் பெருகிற்றென்பது நிச்சயம். ஆதலால், அக்காலத்தில் நமக்கிருந்த சௌகரியங்களெல்லாம் மறுபடி நமக்குக் கிடைத்திருப்பதுகொண்டு அக்காலத்தில் விவாக முறையிலிருந்த இரண்டொரு நன்னெறிகளையாவது நாம் மறுபடியேன் கைப்பற்றக்கூடாது? சர்க்காரோ நமது ஜோலிக்கு வருவதில்லை. சாஸ்திரமும் முறையிடுகிறது. அனுபவமோ பிரத்தியக்ஷம். பழைய சுவயம்வரத்தில், மேனட்டில் காணும் சில துர்லக்ஷணங்கள் இல்லவே யில்லை. ஏனெனில், மேனட்டாருக்குப்பொன் புடவை, முதலிய இகபோகங்களில் ஆசை வெகு அதிகம். நமது நாட்டிலோ, ராஜாக்கள் முதலிய 'பெருத்த' ஜனங்களும் சாஸ்திரத்தை வெகுமானித்து, "விவாகமென்பது கேவலம் காம்மியத்தைப் பொறுத்ததல்ல, தரும பிரஜையை அபிவிர்த்தி செய்யும் பொருட்டு," என்னும் விதியை அனுஷ்டித்து வந்தவர்கள். ஆதலால், 'சீரும் சிறப்புமாக' இருக்க வேண்டிய ஆசையிருந்தபோதிலும், அதையே மோக்ஷமாக எண்ணமல், மறுமையில் நற்கதியடைய வேண்டியதையே நமது ஜனங்கள் முக்கிய விரதமாகக் கொண்டவர்கள். ஆதலால் வெகு மோசமான கொடுங்கோன் மன்னரும் இவ்விஷயத்தில் தருமத்திற்குக் கட்டுப்பட்டே நடந்தார்கள். ராவணன் சீதையைச் சிறைப்பிடித்துப் போனனே யொழிய துராகிருதம் செய்தவனன்று. ராக்ஷதனனலும் சாஸ்திரத்திற்குக் கட்டுப்பட்டவனுகவேயிருந்தான். இப்பொழுதும் இந்தத் தருமத்தை நாம் மறவாமலிருக்கும்வரை நமது மகாஜனங்களுக்குக் குறைவு ஒன்றுமில்லை.

பண்டிதர்களைக் கேட்டால், அக்காலம்வேறு,

இக்காலம் வேறு என்கிறார்கள், அப்படியே யிருக்கட்டும். எக்காலத்திலும் நன்னெறி பற்றி நடப்பதைத் தப்பென்று யார் சொல்லுவது? அக்காலத்திய வழக்கங்களை யெல்லாம் நாம் புராணத்தில் படிக்குமாறு இப்பொழுது ஒரே முழுக்கில் உயிர்ப்பிக்க வேண்டுமென்று நாம் சொல்லவரவில்லை. வேண்டியதை மட்டும் உயிர்ப்பிக்கத் துணிவது பிசகல்லவென்று நமது வாதம். காலம், காலமென்றால், காலம் என்ன செய்யும். அது அசேதன மாதலால், அதன்மேல் வீண்பழி போடுவதை விட்டு,நாம் புத்தியை உபயோகித்துத் தெய்வத்திற்குப் பயந்து, வேண்டியதைச் செய்து கொள்வோமாக.

நாம் பக்தி, சிரத்தையுடன் ஒரு காரியத்தில் புத்தியைச் செலுத்தி உழைத்தால், காலம், தேசம், வர்த்தமானம் எல்லாம் கிரமமாக நமக்கு வசப்பட்டுத் தானாகவேண்டுமென்பது நிச்சயம். பொம்மைக் கலியாணமும், வாதகூஷிணையும், வதூதகூஷிணையும், விருத்தர்களுக்குக் குழந்தைகளைப் பலியிடுவதும், கலியாணத்திற்காக வீடுவாசல் எல்லாம் தோற்று ஓட்டாண்டியாவதும், ஆகிய இந்தத் துக்கங்களெல்லாம் நாமாக வரவழைத்துக்கொண்டனவேயன்றி, வேறொருவருடைய நிர்ப்பந்தத்தின் மூலமா யுண்டாகியவை யன்று. நாம் முட்டாள்களாகியதன்றி, அப்படியே யிருப்பதாகப் பிடிவாதமும் கொண்டால் அதற்குப் பிறரை நொந்துகொள்வதில் என்ன பயன்?

இந்தியாவில் பூர்வகாலத்தில் ஆணும் பெண்ணும் தங்களபீஷ்டம்போல் வரித்துக் கலியாணம் செய்துகொண்டது நமக்குப் பலசாக்ஷியங்களால் வெளியாகிறது. பெண்கள் இப்பொழுதிருக்கிறபடி முழுமோசமாக வீட்டைவிட்டு வெளியே போவதற்குத் துணைதேடியவரல்லர். என்றாலும், அதனால் இப்போது மேனாட்டில் உண்டாவதாக நாம் கேட்கிற அனர்த்தங்கள் விளைந்ததாகக் காணவில்லை.

சுவயம்வர மூலமாய்ப் புருஷன் தன் மனதிற்கியைந்தவனென்றும், அவனைக் கலியாணஞ் செய்துகொண்டால், தங்களுக்குச் சமதையானவோ, அல்லது தங்களைவிடச் சிறந்ததானவோ, சந்ததி நிச்சயமென்றும் கண்டபின் தான், விவாகம் நடக்கும். இப்பொழுதோ, இதெல்லாம் விபரீதமாக நடக்கிறது. முதன் முதல் யாரோ இரண்டு குழந்தைகளைப் பிடித்துப் பெற்றோர் தங்களுக்குள்ள மனோரதத்தை நிறைவேற்றவேண்டிப் பணத்திற்காகவோ, வேறு நியாயத்தினாலோ அவசரப்பட்டு முடிபோட்டு விடுகிறார்கள். பிறகு அவர்கள் பெரியவர்களாகி யொருவருடனொருவர் பழகி மனதொத்துப்போக வேண்டி வருகிறது. ஆனால் நமக்குள் இன்னும் பழைய வாசனை நம்மைப் பூராவாக விடவில்லை யாதலால், மொத்தத்தில் இம்மாதிரிக் கலியாணங்களால் பேரனர்த்தம் ஒன்றும் விளைவதில்லை. சந்ததிமட்டும் க்ஷீணித்துப்போகிறது. அது ஒருநாளில் பிரத்தியக்ஷமாகக் காணக்கூடியதல்ல. ஆதலால் நம்மில் பெரும்பாலார்க்கு எல்லாம் சரியாகத்தான் நடப்பதாகக் காணுகிறது.

ஆனால் பழைய நாளில் நமது மகரிஷிகளுக்குள் நைமித்திகக் கலியாணமென்றொரு வழக்கமுண்டு. ஆரண்ணியங்களிலும், நதிதீரங்களிலும் ஏகாகிகளாக வசித்திருந்த அனேக தபசிகள் ஏதோஒருகாரணத்திற்காகக் கொஞ்சகாலம் ஒரு ஸ்திரீயை மணம்புரிந்து வைத்துக்கொண்டிருந்து, பிறகு தமது மனோரதமானவுடன் பிரிந்து விடுவது வழக்கம். இது முற்றிலும் தருமத்தை யனுசரித்ததன்று. இரண்டொரு கேசுகளில்மட்டும் இம்மாதிரி நடந்தது நல்ல பிரஜையுண்டாக வேண்டுமென்ற அபிலாஷையாலென்று தெரிகிறது. ஐரோப்பா முதலிய நாகரீகம் தேர்ந்த இடங்களிலும் இக்காரணம்பற்றி இம்மாதிரி விவாகம் இருக்க

வேண்டுமென்று அனேகருக்கு அபிப்பிராயம். ஆனல் பெரும்பாலார் இதை இன்னும் ஒப்புவதில்லை.

விசுவாவசுவும் மேனகையும் சுவயம்வரஞ் செய்து கொண்டதில் நல்ல ரூபவதியான புதல்வியொருவள் பிறந்தாள். இவரிருவரும் கந்தருவராதலால், குழந்தையை ஸ்தூலகேசி யென்னும் ரிஷியாசிரமத்தில் விட்டுப்போனர்கள். ரிஷியும் இக்குழந்தையின் ரூபலாவண்ணியத்தைக்கண்டு அதிசயித்து, எடுத்துப்போய் வளர்த்தார். சுற்றிலுமுள்ள ரிஷிப்பெண்களுக்கெல்லாம் இவள்மேல் பிரியமுண்டாகி, எல்லோரும் இவளை ரிஷிமகளென்றே நினைத்திருந்தார்கள். வளரவளர இவளுடைய ரூபமும், குணமும் வெகுதூரம் புகழ்ச்சிக்குக் காரணமாயின.

இவள் தருணியாகிச் சுவயம்வரமாக வேண்டிய காலத்தில், அந்த ஆசிரமத்திற்கு அப்போதப்போது வித்தைவிஷயமாய் வந்துகொண்டிருந்த பிருகு மகரிஷியின் மகன் ருரு வென்பவன் இவளைக்கண்டு ஆசையுற்றுத் தன்னை மணம்புரியவேண்டுமென்று அவளைக் கெஞ்ச, அவளும் சம்மதித்தாள். உடனே அவன் தகப்பனகிய பிருகுவை அனுப்பி ஸ்தூலகேசியைக்கேட்டுவரும்படிசொன்னன். இது பழைய நாளைய வழக்கம். பிருகுவும் போய்க்கேட்க, ஸ்தூலகேசி சந்தோஷத்துடன் சம்மதங்கொடுத்தார். முகூர்த்தம் நிச்சயமாயிற்று.

ஆனல் முகூர்த்தம் இரண்டொரு நாளிருக்கையில், இந்தப்பெண் தன் கூட்டாளிகளோடு ஆசிரமத்தில் எங்கோ ஒரு புதாருகில்விளையாடிக்கொண்டிருக்கையில், தெரியாமல் ஒரு சர்ப்பத்தை மிதிக்க, அதுவும் சீறி இவளை வெடுக்கென்று பிடுங்கி விட்டது. இவள் மூர்ச்சைபாய் விழுந்துபார்ப்பவருக்கெல்லாம் பிராணனையிழந்தவளாகவே கிடந்தாள். ஸ்தூலகேசியும், சுற்றியிருந்த ஆசிரமவாசிகளாகிய பராசுவாசர், கௌதமர் முதலியோரும் சங்கதி கேட்டு வந்து புரண்டு அழுது கொண்டிருந்தார்கள்.

ருருவுக்கு இந்தச் சங்கதி தெரிந்ததும், மனதைத் திடப்படுத்திக்கொண்டு, ஓர் தனியிடத்திற்குப் போய்ச் சாஸ்திரப்படி நமஸ்கரித்துத் தபசுசெய்து, தனக்குப்பிராண பதமான சகியை உயிர்ப்பிக்க வேண்டுமென்று இந்திரனை வேண்ட, அவனும் தூதனை யனுப்பினன். தூதன் வந்து, "ஓரிஷி குமாரனே, மாண்டவர் மறுபடி பிழைப்பதுண்டா? ஏன் வீணகத் துக்கிக்கிருய்?" என்ருன். ருரு, "ஐயா, நான் இந்த ஜன்மத்தில் இப்படித் துக்கமனுபவிக்கும்படி யொருபாபமும் செய்யவில்லையே. ஆதலால் எப்படியாவது எனதுயிர்க்காதலியை யுயிர்ப்பிக்க வேண்டும்," என்ருர். "உனது ஆயுளில் பாதியவளுக்குக் கொடுத்தால் அவள் மறுபடி பிழைத்து அவ்வளவு காலம் உன்னேடிருப்பாள்," என்று தூதன் சொல்ல, ருரு வெகு சந்தோஷத்துடன், "இதோ தானஞ் செய்கிறேன். பிழைத்தால் போதும்," என்ருன். பிறகு இந்திரனருளால் பெண்பிழைக்க, எல்லோரும் சந்தோஷித்துக் கலியாணம் வெகு சம்பிரமமாய் நடந்தது. தம்பதிகள் வெகு நேர்த்தியாகவும் அன்னியோன்னியமாகவும் காலம் கழித்துவந்தார்கள்.

ஜரத்காரு ரிஷியின் விவாகம் இதற்கு நேரெதிரிடையாக விருந்தது. இவர் பிரும்மசாரியாய் உலக ஆசையற்றுத் திரிந்துகொண்டிருந்தார். இவருடைய சகோதரர் ஆறுபெயரும் இப்படியே சமாதி யடைந்துவிட்டதால், வமிசம் அற்றுப்போகுமென்று பிதுருக்கள் புலம்பினர்கள். அந்த அழுகைக்குரல் இவருக்குக் கேட்க, இவர் விசாரித்தறிந்து கொண்டு, "ஓ பிதுருக்களே, உங்கள் நிமித்தம் நான் விவாகஞ் செய்துகொள்ள வேண்டுமே யொழிய, எனக்கு அவசரமில்லை. ஆதலால் ஒரு

பிள்ளையாகும்வரை வேண்டுமானால் நான் கிருகஸ்தனாகிறேன்," என்று சொல்லிப்போனார். பிறகு, பிரும்மசரிய விதிப்படி தினமும் பிக்ஷைவாங்கி உண்டு வருவதில், போனவிடத்திலெல்லாம், "அன்னபிக்ஷை வேண்டும், அம்மாளே," என்று கூப்பிடுவதுடன், "பெண் சாதி பிக்ஷை வேண்டும். யாராவது போடுவீர்களா?" என்றும், கூப்பிடுவார். எல்லோரும் சிரித்துக்கொண்டிருந்தார்கள்.

இப்படியிருக்கையில் நாகலோகத்தில் சர்ப்பங்களுக்குள் பிளேக் உண்டாகி, எல்லாம் அற்றுப்போகும்போலிருந்ததில், பிரமதேவனை வாசுகி வணங்கிப் பரிகாரம் கேட்க, அவரும் ஒரு நாக கன்னிகையைப் பிக்ஷையாக இட்டு அந்த வமிசத்தில் பிறக்கும் பிள்ளை மூலமாக க்ஷேமமடையலாமென்று சொன்னார். வாசுகியெல்லோரையும் எச்சரித்திருக்க, ஒருநாள் ஜரத்காரு அத்தேசம் போய் வழக்கப்படி, "பிக்ஷைக்காரனுக்குப் பெண் கொடுப்பாருண்டா?" என்று கூவினார். வாசுகி சங்கதி தெரிந்து இவரை வெகு மரியாதையுடனழைத்துப்போய்த் தன் தங்கையை விவாகம் செய்வித்தான். ஆனால், விவாகத்திற்குமுன் ஜரத்காரு அந்தப் பெண்ணைப் பார்த்து, 'ஓ பெண்ணே, நீ ராஜகுமாரி, நானோ பிக்ஷைக்காரன். இப்பொழுது ஏதோ காரணம்பற்றிக் கலியாணம் செய்துகொள்ளுகிறேன், என்கிறாய். ஒரு காரியம்மட்டும் உறுதியாயிருக்கட்டும். எனக்கு மனைவியானபிறகு எனது மனம் சிறிதும் கோணாமல் நடந்துவரவேண்டும். என்றைக்கு என்மனம் கோணுமோ அன்று நான் நடந்துவிடுவேன்," என்றார். அதற்கு ஒப்புக்கொண்ட பிறகுதான் கலியாணம் நடந்தது. இக்காலத்தில் இப்படி நடக்குமா?

கலியாணமாகியபிறகு சிறிதுகாலம் எல்லாம் சரியாகத்தான் நடந்து வந்தது. ஆனால், ஒருநாள் சாயங்காலம் சூரியாஸ்தமனமாகையில் ஜரத்காரு தன்மனைவி மடியில் தலை வைத்துப்படுத்து உறங்கினார். சந்திவேளையாகிவிட்டதால் எழுப்பாமலிருந்தாலும் குற்றம், எழுப்பினாலுங்குற்றம், என்னசெய்கிறதென்று நாககன்னிகை மயங்கி, வெகுதூரம் ஆலோசித்துக் கடைசியாக எழுந்திருக்கும்படி மெதுவாக அசைக்க, உடனே அந்தப்பிராம்மணன் வெகு ரோஷத்தோடு எழுந்து, நான் சொன்னபடி செய்வேனென்று போனார். நாகக்கன்னிகை அவரை நமஸ்கரித்துச் சங்கதியை விளக்கியும், அவர் சிறிதும் இரங்காமல், நான் சொன்னபடி தான் செய்வேனென்று உதட்டியாய்ச் சொல்லிவிட்டு, அவளுக்கு வரமாக ஒருபுத்திரன் பிறப்பானென்றும் அவனால் நாக குலத்திற்கு மோக்ஷ முண்டென்றும் சொல்லிப் போய்விட்டார். இந்த விவாகத்தில் கிருகஸ்த தருமம் மட்டும் மிலிடெரியாகக் கண்டிப்பாய் நடந்ததே தவிர, பரஸ்பர சிநேகமென்பதில்லை. இப்போது நடக்கும் கலியாணங்களில் எத்தனை கேசுகள் இப்படிப்பட்டனவென்று அநுபோகஸ்தர் சொல்லவேண்டும்.

மூன்றாவதாக நாம் சத்தியவதி பராசர சுவயம்வரத்தைச் சொல்லலாம். பராசரர் அத்தியயனஞ்செய்து பெரியரிஷியாகிய பின், ஒருநாள் யமுனையைத் தாண்டிப்போகவேண்டிவந்தார். அங்கே பரசல் துறையில் செம்படவன் இல்லை. அவனுக்குப் பிரதியாக அவனுடைய மகள் சத்தியவதி கோலையூன்றி நின்றாள். இவள் வலைச்சியல்ல. அவ்வூர் அரசனுக்குப் பிறந்தவளென்றும், இவளுடன் இரட்டையாய்ப்பிறந்த பிள்ளையை மட்டும் அரசன் சுவீகரித்துக்கொண்டு, இவளைச் செம்படவனுக்கு வளர்க்கக் கொடுத்துவிட்டானென்றும் ஒரு வதந்தியிருந்தது. ஆனால் செம்படவன் மட்டும் வெகு ஆதரவுடன் இப்பெண்ணை வளர்த்து வந்ததில், இவள் ரூபலாவண்ணியத்தில் நிகரற்று வளர்ந்து, அத்துடன் ஜாதித்தொழிலும் கற்று, தகப்பனில்லாத காலத்தில் ஜனங்களை

அக்கரை சேர்த்து வருவது வழக்கமாகியிருந்தது. ஆதலால் வழக்கப்படி இவள் பரசலில் நின்று வருபவரை யெதிர்பார்த்திருக்க, முனிவரும் வேகமாய் வந்து இவளுடைய வடிவழகையும் நின்றிருக்கும் சம்பிரமத்தையுங்கண்டு மோகித்தார். பிறகு ஒரு நிமிஷம் ஒன்றும் சொல்லத்தோன்றாமல் நின்றுவிட்டு, பெண்ணைப்பார்த்து, 'பெண்ணே, படகுக்காரன் எங்கே?' என, அவளும், 'ஐயா, நான்தான் படகுக்காரன். என் தகப்பனுக்கு நான் ஒரே மகள். ஆதலால், அவருக்கு ஒழிவில்லாத நேரத்தில் நானே பரசல் ஓட்டுகிறேன்,' என்றாள். 'ஆனல், நான் அவசரமாய்ப் போகவேண்டும். ஏதோ என்னை அக்கரைகொண்டு சேர், பார்ப்போம்,' என்று முனிவர் சொன்னர். அதற்கு அவள், 'ஐயா அதுஎன்னலாகாது,' என்றாள். ஏன் என, அவள், 'படகுக்கு ஆயிரம்பெயர் வேண்டும்,' என்றாள். 'நான் ஐந்நூறு பெயருக்குச் சமதை. என் கைக்கமண்டலம் ஐந்நூறு பெயருக்குச்சமதை. ஆகலால், ஏதோ விடு, பார்ப்போம்,' என்று சொல்லிப் படகில் முனிவர் குதித்தார். உடனே சத்தியவதியும் படகைத் தள்ளிப்போனள். ஆனல் முனிவர் அவளை விடாமல் உற்றுப்பார்த்து வரவே, நட்டாறு போகையில் அவள் துடுப்பை யெறிந்துவிட்டு, 'ஐயா முனிவரே, இப்படி யென்னை விடாமலுற்றுப் பார்த்தால், என்னல் படகு தள்ளுவதற்காகாது,' என்றாள். 'ஏன், வசுராஜன் மகளே, உனக்கென்ன, கோபமா?' என்று முனிவர் கேட்க, அவளும் அதைக் கேட்டுப் பிரமித்துப் பிறகு முனிவர் மூலமாகத் தன் வரலாற்றை யறிந்து, அவர் வேண்டுகோளுக்கிசைந்து, அவருக்குச்சதியாகி அந்தச் சம்பந்தத்தில் ஸ்ரீ வியாசபகவானைப் பெற்றுப் பெருமை யடைந்தாள்.

இக்காலத்தில் பண்டிதரொருவரும் இம்மாதிரிக் கலியாணத்தை ஒப்புவதில்லை. ஆனல் மேனட்டில் நாளதுவரை பெரிய கிருகஸ்த குடும்பங்களிலும் சத்தியவதி கலியாணம் போன்ற கலியாணம் சாதாரணமாக நடந்து வருகிறது. ஆதலால் மேனட்டின் அனுஷ்டானமும், இந்தியாவின் ஸ்மிருதியும் பல விஷயங்களில் ஒத்திருக்கின்றன. இந்தியாவின் அனுஷ்டானமோ, பழைய வழக்கங்களையும், ஸ்மிருதியையும் ஒட்டி நடப்பதாகப் பேச்சு மாத்திரம் இருப்பதன்றி வாஸ்தவமாகப் பார்க்குமிடத்து, இந்திய ஸ்மிருதியுமல்லாமல், மேனட்டு ஸ்மிருதியுமல்லாமல், பழையதுமல்லாமல், புதியதுமல்லாமல், ஓராதரவுமற்று நிற்கிறது. ஆதலால் இதற்கு வழி வெகு சீக்கிரம் பிறக்கத்தான் வேண்டும்.

ஸ்டாண்டர்டு மாகஸின்.

---

மகம்மதியருக்குள் கல்வி அபிவிர்த்தியாகவேண்டி வட இந்தியாவில் பலத்த முயற்சிகள் நடப்பதுடன், பெரிய காலேஜ்களு மிருக்கின்றன. 'அலிகர் காலேஜ' என்பது வெகு நாளாகப் பிரசித்திபெற்று நடந்து வருகிறது. நமது நாட்டில் மகம்மதியர் இவ்வாறு பெருத்த காரியங்களைத் தொடங்கச் சக்தியமற்ற, அதன் பலனையும் நன்குயறியாமலிருக்கிறார்கள். ஆகையால் இத்தருணத்தில் வாணியம்பாடியில் வியாபார முதலியவற்றில் கைதேர்ந்தும், கைவலுத்துமுள்ள சில மகம்மதியக் கனவான்கள் கல்வியபிவிர்த்தி சங்கமொன்று ஏற்படுத்தி, அதன் மூலமாய்ப் பாடசாலைகளை முன்னுக்குக்கொண்டு வருவது மெத்தவும் சந்தோஷிக்கத் தக்கது. வாணியம்பாடிப் பள்ளிக்கூடம் இப்பொழுது செகண்டரி தரபுவரை உயர்ந்திருக்கிறது. அதற்கென்று நல்ல கட்டிடமும் நிர்மாணமாகி வருகிறது. ஸ்ரீமான் மகம்மது இப்ராஹீம்குரைஷி என்னும் பி. ஏ., எல். டி., பட்டதாரி தலைமை உபாத்தியாயராகவும், வேறு தக்க உபாத்தியாயர்கள் அவருக்கு உதவியாகவும் இருந்து உழைத்துவருகிறார்கள். பள்ளிக்கூடத்தில் சாமான்னியமாக லௌகிகக் கல்விமட்டுமேயன்றி, மகம்மதிய மதம், ஆகாரம் முதலியவற்றையும் கற்பிக்க எற்பாடுகள் அமைந்திருக்கின்றன. இதையெல்லாம் வேறுசகாயமின்றி வாணியம்பாடி மகம்மதீயக் கனவான்களே நடத்திவருவது அவர்களுக்கும், காரியங்கள் இவ்வளவு சீராக நடப்பது தருமகர்த்தர்களுக்கும் மெத்தவும் பெருமையை உண்டு செய்வதன்றிப் புண்ணியகரமாகவும் ஆகிறது.

## காங்கேயர்

ஸ்ரீமான் சி. து. நாராயணசாமி முதலியாரவர்கள்

இப்பெரியபுலவர்,

'தென்னாடு முடைத்துத் தெண்ணீர் வயற்றொ
நன்னாடு சான்றோ ருடைத்து'' [ண்டை

என ஆன்றோராற் புகழ்ந்தோதப்பட்ட தொண்டை நாட்டின் கண்ணுள்ள "செங்கற்பேட்டை" (செங்கற்பட்டு) என்னுந் தலத்துத் தந்துவாயர் செங்குந்தரென்று கூறப்படுகிற கைக்கோளர் மரபிற் பிறந்தவரென்ப. இக் கைக்கோண் மரபினர் ஸ்காந்தம் கூறுகிற வீரவாகு முதலாம் ஒன்பதின்மர் வம்சத்தார் எனப்படுவர். இப்புலவர் இன்னகாலத்திற் றான் தமிழகம் புகழ வாழ்ந்திருந்தாரென்பதை வரையறுத்துக் கூறவும், இவர் ஜனனமாதிய விசேட வரலாறுகளொன்றும் நாம் அறிந்து மகிழ்தற்கும் ஏதுவில்லாமலிருக்கிறது. "பாவலர் சரித்திர தீபகத்தால்'' இப்புலவர், இல்லறத்திச்சையற்றுத் துறவறமடைந்த ஞானியாரென்பதுணரப்படும். இப்பெருந் தகையார் ஏகாந்தத்தினிமையுணர்ந்து தத்துவங்கடந்த வித்தகப்பொருளாம் தலைவனைக் காணும் பேரின்ப நாட்டங்கொண்டிருந்தாலும், தமது கல்வி நலத்தைப் பொய்யுலக வாழ்வினர்க்குப் புகட்ட மறந்தாரில்லை. இவரியற்றிய நூல்கள் பலவுண்டென்று கருதினும் அவையெல்லாம் கட்புலனுக்கு மறைந்து பிரசித்தியாய் நிற்பது "உரிச்சொல் நிகண்டொன்றேயாம்.'' பதப்பொருள் அறிதற்கும் தமிழ் மொழியுணர்ச்சிக்கும், ஏற்ற கருவியாக நம் பூர்வீகர் கையாண்டுவந்த திவாகரம், பிங்கலம், சூடாமணி, கயாகரம், அகராதி, ஆசிரியம் என்றுதிய நிகண்டு வரிசைகள்போல் இவ்வுரிச்சொல் நிகண்டையும் கொண்டாரென்றறிதலோடு, வடமொழியினுள்ள அமரசிஹ்மம், அமரதத்தம், விசுவம், விஷாமிர்தம், சப்தார்ணவம், சரஸ்வதிவிலாசம் முதலாகவுள்ள நிகண்டுகளையும் கையாண்டு வந்திருப்பதாக அறியப்படுகின்றன. தற்காலம் நமக்குப் பாஷாஞான விற்பனத்திற்கு மிகுந்த உபயோகமாகிவருகின்ற தமிழ் அகராதிகள்போல், முற்காலத்தில் இந்நிகண்டு வரிசைகள் நம் முன்னோர்க்குப் பேருபகாரிகளாக இருந்து வந்தனபோலும். திவாகரம், பிங்கலம், சூடாமணி, ஆகிய இம்மூன்று நிகண்டுகட்கும் பிற்பட்டதே உரிச்சொல் நிகண்டெனக் கொள்ளவேண்டும். இவ்வுரிச்சொல் நிகண்டு, சூடாமணி நிகண்டுக்கு முந்தியதென்பது தொண்டைமண்டல சதகமுடையார் கொள்கை.

"பண்டை நிகண்டு திவாகரம்
பிங்கலம் பன்னுரிச்சொ
லெண்டிசையின் வடமொழிச்
செய்யுளெல்லா முணர்ந்தே
தண்டமிழ் கொண்டு நிகண்டு
சூடாமணி தானுரைத்த
மண்டலவன்குடி கொண்டது
நீடொண்ட மண்டலமே.''

என்பதனாற் காண்க.

உரிச்சொல் நிகண்டு பிற்காலத்ததெனக் கொள்வதற்கு "ஆசிரிய நிகண்டுடையார்'' நமக்கு ஒருவழி காட்டியுள்ளார். அந்நிகண்டு பாயிரத்திலே,

"முந்துள திவாகரம் பிங்கல நிகண்டுசேர்
முந்து காங்கய னுரிச் சொல்
முறைபெறு கயாகரம் பகருமகராதியிவை
முற்று மொன்றாத் திரட்டி.''

என, நிகண்டுவரிசை கூறப்பட்ட அடிகள் வருகின்றன. இம்முறைப்படியேசூடாமணியையடுத்து உரிச்சொனிகண்டைப் பிற்காலத்ததென்று கொள்வதற்குச்சிறந்த காரணமொன்றும் உண்டு. வணங்கற்பொருளில் "சலாஞ் செய்தல்'' என்னும் சொல்வழக்கம், நம் நாட்டில் வழங்கத்தொடங்கியது துருக்கராட்சிக்குப் பிந்தியகாலத்தே என்பது யாவர்க்குந்

தோன்றத் தக்கது. இச்சொல்வழக்கு பிங்கலந்தை, சூடாமணி நிகண்டுகளில் காணக்கிடையாதாயினும், உரிச்சொ னிகண்டில்,

* "வந்தனை காணல் வணங்கல் பணிதலே
தந்தலை தாழ்தல் சலாஞ் செய்தல்"

என வணங்கற் பொருளில் எடுத்தாளப் படுகிறது. இதனால், இந்நிகண்டுடையார்க்குப் பழமை கூறுதல் சிறிதும் பொருந்தாமை காண்க. இதே சொல்வழக்கை, துருக்கராட்சிக் காலத்து விளங்கிய ஸ்ரீ குமரகுருபர முனிவர் தமதுமீனாட்சியம்மைபிள்ளைத்தமிழில் "குறவர் மகட்குச் சலாமிடற் தேக்கறு, குமாரனை முத்துக்குமாரனைப் போற்றுதும்" என்னுந்தொடரில் எடுத்தாண்டனர். ஆகவே, உரிச்சொல் நிகண்டும், அம்முனிவர் காலத்தை யடுத்துச் சிறிது முன்னே பின்னே இயற்றப்பட்டிருத்தல் வேண்டு மென்று கருதலே பொருத்தமாகும்.

இனி, இந்நிகண்டியற்றிய காங்கேயரைப் பற்றிய விசேடமொன்றும் அறிதல் கூடவில்லை. இவர்க்கு வழங்கிய "காங்கேயர்" என்னும் பெயராலும், "இம்முடி" என்று கூறப்படுகிற பட்ட மொன்று இவர்க்குளதாலும், இவர் கங்காவம்சத்தாரென்று கருதலாம். அவ்வாறு கொள்வதற்குத் தக்க மேற்கோளாகிய பிரமாணங்களின்மையால், அது கூடாமையாயிற்று.

காஞ்சி முத்தமிழ்ச்சூரி வீரபத்திர தேசிகரென்பாரியற்றிய "செங்குந்தசிலாக்கியர்மாலையினது" திருவிருத்த மொன்றில்,

"மடம்பெறு மாந்தர் மருடர
மண்டல மாண்புருட
னிடம்பெற வோங்கு முரிச்சொ
னிகண்டை யினி துரைத்துக்
குடம்பெறு மாமுனி யொப்பத்
தமிழைக் குவலயத்திற்
நிடம்பெற வைத்த திறலோர்
செங்குந்த சிலாக்கியரே"

எனவருதலானும், "பாவலர் சரித்திரதீபக" ஆசிரியரும், "உதயதாரகைப்" பத்திராதிபருமாகிய யாழ்ப்பாணம் வித்வான் ஸ்ரீமத் அ. சதாசிவம்பிள்ளையவர்கள் அபிப்பிராயமும் இதுவேயாக நிற்றலானும், இப்புலவர் பெருமான் செங்குந்தர் மரபிற்றோன்றிய பெரியாரென்பது பெறப்பட்டது.


இவரே உரிச்சொனிகண்டைப் பாடினராவர். வெண்பாவிற் பாடப்பட்ட இவ்வுரிச்சொல் 1840ஹு புதுச்சேரியில் அச்சிற் பதிப்பிக்கப்பட்டது.

"உரிச்சொல் இருநூறு முதவு" என்று விநாயகர் காப்புச் செய்யுளில் சொல்லப்பட்டிருப்பினும், அப்போது பதிப்பிக்கப்பட்ட பிரதியில் (220) செய்யுள்களும், 1858ஹு யாழ்ப்பாணம் மானிப்பாய் அச்சுயந்திரசாலையிற் பதிப்பித்த பிரதியில், (330-ம்) விகிருதிஹு ஆவணிமாதம் சென்னை ஆதிகலாநிதி அச்சுக்கூடத்தில் வித்வான் ஸ்ரீமத்-சிவன்பிள்ளை அவர்கள் பதிப்பித்த பிரதியில் (286) செய்யுள்களும் காணுவது கொண்டு உள் காலாந்தரத்தில் அவை பிறராற் பாடப்பட்டுச் சேர்த்தனபோலும்.


இவ்வளவே இப்புலவர் வரலாறாகத் தெரிந்தவை. இத்துறவியார் வாழ்ந்திருந்த காலத்தை நிர்ணயித்துரைத்தல் சாத்தியமன்று. உத்தேசமாகச் சொல்வதென்றால் கி. பி. 1509 முதல் 1530-வரை விஜயநகரத்தை அரசுபுரிந்த கிருஷ்ணதேவராயர் காலத்திருந்த சூடாமணி நிகண்டின் ஆக்கியோராகும் மண்டல புருடர்க்குப் பிற்பட்டிருந்தவ ரென்றறிவதே பொருத்த முடைத்தாம். சுபம்.

---


* ஒன்பதாவது செயல்பற்றிய பெயர்த் தொகுதி பாட்டு 2.



எகிப்திய அரசன் யுத்தத்திற்குச் செல்லுதல்



எகிப்திய வைதீகர்கள்



எகிப்தியர் இழவுகொண்டாடுதல்

13 JUN 1910 MADRAS

# பிராசீன ஜாதியாரின் நாகரீகம்

## எகிப்தியர்

பூர்வ விருத்தாந்தி

(227-ம் பக்கத்தின் தொடர்ச்சி).

நமது நவீன நாகரீக முறையை உரைகல்லாகக்கொண்டு நோக்கின், எகிப்தியரின் பழக்கவழக்கங்கள் வெகு விசித்திரமானவையென்று தோன்றும்; ஆயினும் அவற்றுள் விந்தை ஒன்றுமே இல்லையென்பது ஆழ்ந்து நோக்கும் ஒவ்வொரு விவேகிக்கும் நன்ருய் விளங்கும். உலகத்துள்ள மற்றைச் சாதியாருக்கும் எகிப்தியருக்கும் பழக்கவழக்கங்களில் அதிகமான மாறுபாடுகள் இல்லையாகிலும், எகிப்தியர் கீழ் நாட்டைச்சேர்ந்தவர் என்பதற்கு நல்ல அடையாளங்கள் அவரது நடையுடைபாவனைகளில் காணப்படும்.

எகிப்தியருடைய ஜாதீய ஆசாரங்களையும் பழக்கவழக்கங்களையும் தெரிந்துகொள்வதற்கு ஏற்ற சாதனங்கள் நான்குள்ளன; அவை, கோயிற் சுவர்களிலும் ஜயகோபுரங்களிலும் எழுதப்பட்டுள்ள சிலா லிகிதங்கள், அரசர்களை யடக்கஞ் செய்திருக்கும் கல்லறைகள், தேச காவியம் முதலியவை எழுதப்பட்டுள்ள மரவுரிச் சுருள்கள், கடிதங்கள், சாதனங்கள், காரிய விஷயங்கள் முதலியவை எழுதப்பட்டுள்ள மற்றை மரவுரிச் சுருள்கள் ஆகியவை. முதலாவதான சிலா லிகிதத்தினல் நமக்கு அதிகமாக ஒன்றும் தெரியவில்லை. அதில், கோயில்களில் செய்யப்பட்ட பூஜை முறையையும்,தெய்வப்பிரார்த்தனையையும், அரசர்களின் உதாரத்துவத்தையும் பற்றியே அதிசயோக்தியாக வர்ணிக்கப்பட்டுள்ளது. இரண்டாவதான பிணவறையிலிருந்து பலவகை ஆயுதங்கள், கருவிகள், தட்டுமுட்டு சாமான்கள், பொன் வெள்ளி நகைகள் முதலியன கண்டெடுக்கப்பட்டிருப்பதால், பழைய காலத்தில் அந்நாட்டு ஜனங்களால் உபயோகிக்கப்பட்ட பொருள்கள் இன்னின்னவெனத்தெரிகின்றது. மூன்றுவதான மரவுரிச்சுருளும் நமக்கு அதிக பயனைக் கொடுப்பதில்லை. விசேஷமாக, அச்சுருள்களில் மதவிஷயங்களும் மாந்திரிக முறைகளுமே கூறப்பட்டிருப்பதால், அவை தத்துவ ஞானிக்கு அதிகபயனைக்கொடுக்குமேயொழிய, எகிப்தியரின் வாழுநாளைக்குறித்த விவரங்களைத் தெரிந்துகொள்ள விரும்பும் நமக்குப் பயன் படா. நான்காவதான சுருள்களே தாம் நமக்கு விசேஷமான பயனைக்கொடுக்கின்றன. வாழுநாளில் நடந்த பல விஷயங்களையும் குறித்தே இச்சுருள்கள் பேசுகின்றனவாதலால், இவைகளினின்று தான் நமக்கு அரிய பலவிஷயங்கள் தெரிகின்றன. இவைகளும், இவைகளிற் கூறப்படும் விஷயங்களைச் சித்திரங்களின் மூலமாக உதகரிப்பதாக விருக்கும் உருவப்படங்களுமே நமக்கு ஆதார சாதனங்களாக விருக்கின்றன. இப்படங்கள் எகிப்தியருடைய நடையுடைபாவனைகளைக் கண்டது கண்டபடி தெரிவிக்கின்றனவாதலால், இவைகளின் உபயோகம் இவ்வளவவ்வள வென்று கூற வொண்ணது.

### 3. அரசனுக்குள்ள பதவி.

கீழ் நாடாகிய ஆசியாகண்டத்தவரிடத்தில் சிறந்து தோன்றும் குணங்களில் அதிகாரத்துக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் குணம் விசேஷமானதாகும். அராஜகமான நாட்டைப்பற்றி அவருக்கு ஒன்றும் தெரியாது. உண்மையைக் கூறுங்கால் அரசனே நாட்டுக்குப் பிரத்தியக்ஷ தெய்வம் என்னும் கருத்து எகிப்தியரின் மனதுள் வெகுவாய் ஊன்றிப்போயிருந்தபடியால், யதேச்சையாய் அதிகாரம் செலுத்தும் அரசனில்லாமல் ஒரு ராச்சியமும் நிலை பெறுதென்பது அவரது ஆழ்ந்த கொள்கையாம். எகிப்தியர், தமது அரசரைத்தெய்வமாகவே கொண்டாடினர். ஆனல் இக்கொண்டாட்டம் எப்போதும் அனுஷ்டானத்திலிருக்கவில்லை. ஏனெ

னில் வாஸ்தவத்தில் அரசர்களும் பணிந்து நடக்கவேண்டிய அதிகாரம் ஒன்று சகலத்திற்கும் ஆதாரமாக இருந்தது. "மகாராஜாதிராஜ" முதலிய விருது கூறுவதை யனுசரித்துப் பார்க்குமிடத்து, அரசனுக்கு மேற்பட்ட அதிகாரியில்லை. அவர் வைத்ததுதான் சட்டம்; பிரஜைகளுடைய உயிரும் உடைமையும் அவருடையனவே. ஆனால் அதன் ரகசியத்தை நோக்கும்போது, இதற்கு முற்றிலும் மாறான அனேக அற்புதங்கள் தென்படுகின்றன. அரசனுடைய பிதாவின் காலத்திலிருந்த பழைய ஆலோசனைக்காரர்கள் எப்போதும் உடனிருப்பார்கள். அவர்களிடும் குற்றேவல்களை உத்தியோகஸ்தர்கள் செய்து தீரவேண்டும். பூர்வமுதற்கொண்டே வரும் செல்வாக்குள்ள குடும்பத்தவரையும் அரசன் அநுசரிக்கவேண்டியிருந்தது. சேனாபதிகளின் கையில் விசேஷ செல்வாக்கிருந்தபடியால் அவர்களையும் அரசன் தட்டிக்கொடுத்தே கவனிக்க வேண்டியிருந்தது. இவர்கள் எல்லோரையும் காட்டிலும் மேலாக, குருக்கள்மார் அரசாதிகாரத்துக்குப் பெருந்துணையாகவும் சர்வாதிகாரத்திற்குத் தடையாகவும் நின்று கொண்டிருந்தனர். இன்னும் ராஜபதவியைப் பெற முயற்சி செய்யும் தாயாதிகளும், அரண்மனை யந்தப்புரத்தில் இயற்கையாகவே பொறாமையோடு கூடிய கைகேசிகளும் அரசனுக்குத்தீராத கவலையைக் கொடுப்பதுண்டு. இவ்வாறு அரசனுடைய அதிகாரத்துக்குச்சிற்சில நிர்ப்பந்தங்கள் ஏற்பட்டிருந்தபோதிலும், குடிகள் அரசனை வேண்டாமென்று தள்ளிவிட்டுப் பிரஜாதிபத்தியத்தை ஸ்தாபிக்க இஷ்டப்படவில்லை. பிரஜாதிபத்தியம் என்னும் வித்து ஐரோப்பிய பூமியில் தான் வேரூன்றிப் பலனைக் கொடுத்தது.

அரசன் தெய்வத்தின் பிரதிநிதியாவான். அவனது அதிகாரம் நேராகவே தெய்வத்தினிடமிருந்து பெறப்பட்டதாம். ராச்சியபத்திக்கும் ராச்சியத்திலுள்ள மதக்கொள்கைக்கும் அவரே அதிகாரி; நியாயம் தீர்ப்பவனும் தருமசாஸ்திரத்தைப் பாலிப்பவனும் அவனே சேனாநாயகராக விருந்து படைகளை யுத்தத்துக்கு நடத்திக்கொண்டு போவதும் அவரே தான். கோயில் முதலிய இடங்களில் பூஜை, பலி போடுவதும் அவராகையால்தான். தெய்வங்களுக்கு ஆகுதி கொடுப்பதற்கும் அவரே யஜமானன். அவரிருக்குமிடங்களில் நடக்கும் வைதீக காரியங்களைச் செய்வதற்கு அவரே ஆசாரிய புருஷனாக முன்னிற்பார்.

ராச்சியாதிகாரம் பரம்பரையாக வரும்முறையையுடையது. நேரானசந்ததியில்லாவிடத்து, நெருங்கின உறவினரிலேனும், கல்யாண சம்பந்தம் செய்துகொண்ட இடத்திலேனும் ஒருவரைத் தேர்ந்தெடுப்பதுண்டு. ஸ்திரீகளும் பட்டத்துக்கு வரக்கூடியவர்கள் தாம். இவ்வழக்கம் கி. மு. 4000-வாக்கிலிருந்த பாயன்னிதர் என்னும் அரசனால் ஏற்படுத்தப்பட்டதாம். எப்போதும் அரசன் பிர்ம்மரிஷியாகவாவது, ராஜரிஷியாகவாவது தான் இருக்கவேண்டும். இராஜ குமாரர்களும் அவ்வாறே இவ்விரு வகுப்புகளில் ஏதேனுமொன்றைச் சேர்ந்தவராக இருப்பார்கள். இந்தியாவிலும் வைதிகம் பிரபலித்திருந்த பூர்வகாலத்தில் இப்படி யிருந்ததை அபிமானிகள் அறிவர்.

அரசன் உயிரோடிருக்கும்போது எவ்வளவு மரியாதை செய்யப்படுமோ அவ்வளவும் அவரிறந்த பிறகும் செய்யப்படும். * எகிப்தியரின் முதலரசனான மீனிஸ் என்பவர் இறந்தபிறகு நெடுங்காலம் வரையில் தெய்வமாகக் கொண்டாடப்பட்டாரென்று தெரிகின்றது. ஒரு அரசன் ராச்சியபாரம் புரியும்போது தனக்குப் பின் பட்டத்துக்கு வரக்கூடிய இளவரசனை ராச்சியாதிகாரத்தில் சேர்த்துக்கொள்வதுமுண்டு. இவ்வழக்கம் அமனம்ஹாத் என்னுமர

* அரசன் இறந்ததும் பிரஜைகள் விசனக்குறிகொண்டு தலையில் மண்ணைவாரிப் போட்டுக்கொள்வதைப் படத்தில் காண்க.

சனுல் அனுஷ்டானத்துக்குக் கொண்டுவரப்பட்டதாம். மற்றைய தேசங்களிலும் இவ்வழக்கமிருந்ததுண்டு. இதை யனுசரித்தே தசரதன் ஸ்ரீராமனை இளவரசாக்க முயன்றது. இதனுல் பின்னிட்டுப் பட்டத்திற்கு வருவோர்க்கு ராச்சிய முறையில் அனுபவம் உண்டாகி வந்ததென்பதற்கையமில்லை. மாகாணங்களில் ராச்சியாதிகாரம் செம்மையாக நடந்தேறி வருவதற்காக அங்கங்கே கவர்னர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். சாமந்த அரசர்கள் பேரோவா (எகிப்து சக்கரவர்த்தி)க்குக் கப்பங்கட்டுவார்கள். இரண்டாம் அமெனஹோதெப் என்பவர் ஆசியாக்கண்டத்திலிருந்த தனது சிற்றரசர்களுக்குள் உண்டான கலகத்தை யடக்கச் சென்றிருந்ததாகத் தெரிவதால், எகிப்திய ஸார்வபௌமம் வெகுதூரம் வரையில் பரவியிருந்ததென்பதற்கு இடமுண்டு.

மந்திரிகளும் மற்றைய பெரிய உத்தியோகஸ்தர்களும் முதல் இரண்டு வகுப்புக்களினின்று மட்டுமே தேர்ந்தெடுக்கப்படுவர். மந்திரிகளின் ஆலோசனையின் படியே அரசன் நடந்து வருபவனுதலால், ராச்சியத்தில் நடக்கும் குற்றங்களுக்கும், பிழைகளுக்கும் அரசன் உத்தரவாதியாக வேண்டியதில்லை யென்றும், மந்திரிமார்களே எல்லாப் பொறுப்பையும் வகிக்க வேண்டியவர்க ளென்றும் ராஜநீயக் கொள்கையுண்டு.

தேசத்தின் இயற்கை யமைப்பினுலேயே எகிப்தியருக்கு எதிரிகளால் முதலில் அதிகமான துன்பமுண்டாகாதபடியால், அவர்கள் சிறந்த போர் வீரர்களானதில்லை; ஆயினும் அவர்களுக்குப் போர்த்தொழில் தெரியாதென்றில்லை. ஒரு காலத்தில் அவர்கள் தேசங்களை ஜெயிப்பதிலேயே கருத்தூன்றி யிருந்தனரென்பதற்கும் சாக்ஷியம் பலவுள்ளன. அதனுல் ஸைனே, நூபியா, முதலிய தேசங்கள் எகிப்துக்கு அடங்கிக் கப்பங் கட்டிவந்தன. என்றுலும் எகிப்தியருடைய யுத்தமுறையில் விசேஷம் ஒன்றுங் காணவில்லை. காலாட்படை வீரர்க்கு முக்கிய ஆயுதங்கள் வில்லும், வேலுமே; குதிரைகள் பூட்டிய தேர்ப்படையொன்றுண்டு. இத்தேர்ப்படையை அரசனே நேரில் நடாத்துவார். கோட்டைகளை முற்றுகைபோடும்போது ஏணிகளும், மதிலிடிக்கும் யந்திரங்களும் உபயோகத்திலிருந்தன. போர்வீரர்கள், தற்கால முறைப்படியே, ரணகாளவோசையின்படி ஒழுங்கு தவறுமல் நடந்து வந்தனரென்று சித்திரங்களாலறிகிறேம்.

சாதாரணமாகப் போர்வீரர்கள் இண்டாவது வகுப்பிலிருந்து வருவார்கள். எகிப்து தேசத்திலுள்ள பூமியில் மூன்றிலொரு பங்கு போர்வீரர்களுக்கென்று விடப்பட்டிருந்தது. ஒவ்வொரு போர்வீரனுக்கும், அவன் போர்த்தொழிலைப் பயின்றுலும் பயிலாவிட்டாலும், சுமார் எட்டுஏகரா நிலம் மான்னியம் விடப்பட்டிருந்தது. எகிப்திய போர்வீரர்களுக்கிருந்த இன்னெரு அருமையான சுதந்திரம் என்னவெனில், கடனுக்காக அவர்கள் சிறைச்சாலையில் அடைபடக்கூடாதென்பதாம். ராச்சியத்துக்குக் காவலாகவுள்ளவர்களை, அவர்களுக்கு ஏற்பட்ட தொழிலினின்றும் விலக்கி வைக்கக்கூடாதென்பது எகிப்தியரின் கொள்கை. போர்வீரர்கள் பாலியம் முதற்கொண்டே போர்த்தொழில் பயிலுவர். அதற்கென்றே ஒரு போர்த்தொழில் கலாசாலை யிருந்ததாகத் தெரிகின்றது. எகிப்தியரின் சேனையில் வில்வீரருடைய பலமே மேலானதாக மதிக்கப்பட்டது. அவர்கள் கீழ் நின்றுகொண்டேனும் ரதத்தின் மீதிருந்தேனும் போர்புரிவர். வில்வீரர் படை வியூகத்தின் இரு சிறையிலுமிருப்பார். காலாட்படை பலவணிகளாக வகுக்கப்பட்டு மத்தியில் நிறுத்தப்பட்டிருக்கும். குதிரைப்படை பின்னுல் நின்று உதவி செய்யும். ஒவ்வொரு போர்வீரனும் தானே ஆயு

தங்களைச் சேகரித்துக்கொண்டு, கூப்பிட்ட வுடன் போர்க்களத்துக்குப் போகும்படியாக சர்வ ஜாக்கிரதையோடும் ஆயத்தமாகவிருக்க வேண்டும். எகிப்து நாட்டிவிருந்த போர் வீரரின் தொகை 4,10,000-ஆகும். இவர்க ளில் பிரதிவருஷமும் 1,000-பேர் ராஜகிருகத் தில் மெய்காப்பாளராக விருப்பதற்குத் தேர்ந் தெடுக்கப்படுவர். ஒவ்வொரு போர்வீரனுக் கும், அவன் போர் புரிந்துகொண்டிருக்கை யில், நாள் ஒவ்வொன்றுக்கும் உணவுக்காகப் பத்தா பணம் கொடுக்கப்படும்.

இவ்வாறிருந்த சுதேச போர்வீரர்களைத் தவிர, எகிப்து தேசத்தில் அந்நிய போர்வீரர் களுமிருந்தனர். இவர்களுக்கு நிலமான்னி யம் கிடையாது. வேலைசெய்த நாள்களுக் குக் கூலிமட்டுந்தானுண்டு. எகிப்தியரால் ஜெயி க்கப்பட்ட நாடுகளிலிருந்தும், எகிப்தியருடன் சிநேக சம்மந்தஞ் செய்துகொண்ட நாடுகளி லிருந்தும், இவ்வந்நிய போர்வீரர்கள் வரு வார்கள்.

## 4. யுத்தாயுதங்கள்

எகிப்தியர்கள் சண்டை செய்வதற்காகத் தரித்துக்கொண்டிருந்த ஆயுதங்களாவன:— வில், ஈட்டி, இருவகைவேல், கவண், பலவகைக் கத்திகள், கோடரி, குறுந்தடி, வளைதடி முத லியனவாம். அவர்களுக்கிருந்த ரக்ஷண ஆயு தங்கள், உலோகத்தாற் செய்த முகமூடி, யுத்த அங்கி, பெரிய கவசம் இவைகளேயாம். கேடயம் போர்வீரனிற் பாதியுயரமாயும், அவ னைக்காட்டிலும் இருமடங்கு அகலமாயும், காளைமாட்டின் தோலால் செய்யப்பட்டதாயு மிருக்கும். உலோகத்தால் செய்யப்பட்டவிளிம் புகளும் ஆணிகளும் அதில் அறையப்பட்டி ருக்கும். அதன் உட்புறம் மரத்தினுல் ஆனது. வில், ஐந்துமுதல் ஐந்தரைவரை அடி நீளமுள் ளதாயும், இருகோடிகளும் கூர்மையானவை யாயும், உருண்ட மரத்தண்டினுல் செய்யப்பட் டதாயுமிருக்கும். அம்புகள், இருபத்திரண்டு முதல் இருபத்துநான்குவரை அங்குல நீள முள்ளனவாம். அவற்றுள் சில மரத்தினுலும், சில நாணல் தட்டையினுலும் செய்யப்பட்டி ருக்கும். சாதாரணமாக ஏதேனுமொரு உலோ கத்திற்செய்த முனையொன்று அம்பின் முகத் தில் சொருகப்பட்டிருக்கும். மூன்று இறகு கள் அம்பின் பிடிப்பக்கத்தில் ஒட்டப்பட்டி ருக்கும். ஈட்டி, ஐந்து அல்லது ஆறடி நீளமா யும், மரப்பிடியுள்ளதாயும், உலோக முனை பெற்றதாயுமிருக்கும். வேலும் இதைப்போ லவே யிருக்குமாயினும், அதன் முனை நீளமா யும் வெகு கூர்மையாயுமிருக்கும். கவண் என்றது தோலினுலாவது, திரித்த கயிற்றின லாவது செய்யப்பட்டிருக்கும். இப்போது நமது நாட்டில் வழங்கிவரும் கவணுக்கும் எகி ப்திய கவணுக்கும் அதிக வித்தியாசமில்லை. அக்கவணிலிருந்து எறியப்படும் கற்கள் வெகு வேகத்துடன் நெடுந்தூரம்வரையில் போகக் கூடியனவாம். எகிப்தியருடைய கத்திகள் குறு கினவையாயும் குத்துவதற்குமட்டும் நேரான வையாயுமிருக்கும். வெட்டுவதற்கும் அவை உபயோகிக்கப்பட்டன. பரசு என்ற கோடரி இரண்டு அல்லது இரண்டரை அடி நீளத்தில் ஒற்றை முகமுள்ளதாயும் இரும்பினுலாவது வெண்கலத்தினுலாவது செய்யப்பட்ட முகத் தில் மரப்பிடி கோர்க்கப்பட்டதாயுமிருக்கும். குறுந்தடியும் வளைதடியும் மரத்தினுல் செய் யப்பட்டு வெண்கல வளையங்களைப் பெற் றிருக்கும். அவைகள் கைச்சண்டை போ டும்போது மட்டுமே உபயோகிக்கப்படும். முகமூடி, தோலினுலாவது வெண்கலத்தி னுலாவது செய்யப்பட்டதாக விருக்கும். அவைகளில் சில கழுத்தளவு வரும்; சில காதளவு வரும். பச்சை, செகப்பு, கருப்புநிறங் கள் இம்முக மூடிகளில் தீட்டப்பட்டிருக்கும். யுத்தஅங்கி, குறுக்காகவைத்துஅமைக்கப்பட்ட

வெண்கலத் தகடுகளாலானதாம். அதில் பல வகைகளிருந்தன. பல அளவுகளிலுமிருந்தன. குதிரைப்படைதான் எகிப்தியருடைய சேனையின் முதன்மையான பாகம். ஒவ்வொரு ரதத்திலும் சாதாரணமாக இருவர் இருப்பர்; மூவரும் சிற்சில சமயங்களில் இருப்பதுண்டு; அவர்களுள் ஒருவன் சாரதியாக இருப்பான்.

### 5. யுத்த முறைகள்.

அந்நிய நாட்டின் மீது படையெடுத்துப் போவதென நிச்சயமானல், எகிப்திலுள்ள ஒவ்வொரு மாகாணத்திலிருந்தும் போர் வீரர்கள் வருவார்கள். சாதாரணமாக, அரசனே நேரில் வந்து சேனையை நடத்துவார். சிற்சில வேளைகளில் சேனுபதிகள் நியமிக்கப்பட்டுச் சண்டையை நடத்துவார்கள். குறிப்பிட்டவிடத்தில் எல்லோரும்வந்துசேர்ந்ததும், சேனுநாயகன் யுத்தத்துக்குப் புறப்படவேண்டிய முயற்சியைச் செய்வான். முதன்முதலில் போரில் வெற்றியை விரும்பி தெய்வப் பிரார்த்தனை செய்து பலியிடுவார்கள். அரவானைக் களப்பலியாக்கிய கதை பாரதம் படிப்பவருக்கெல்லாம் தெரியுமல்லவா? பின்னர் போர்வீரர்கள் புறப்படுவார்கள். முதலில் தேர்ப்படை வழிகாட்டிக் கொண்டு போகும். தேரின்மீதேறிவரும் அரசன் மத்தியில் செல்வார்; அவருக்கு முன்னும் பின்னும் வில்,வேல், முதலிய ஆயுதங்களைத் தரித்த காலாட் படைகள் செல்லும். யுத்தம் ஆரம்பமாகுமுன்னர், ரணகாளம் ஒலிக்கும். உடனே முன்னணியில் நிற்கும் வில்வீரர்கள் எதிரியின் முன்னணியின்மேல் அம்புகளைப் பிரயோகிப்பார்கள். இதனுல் எதிரியின் படைவகுப்பில் அமளி உண்டாகும் போது எகிப்தியரின் தேர்ப்படையும் காலாட்படையும் பின்னும் நெருங்கிக் கடும்போர் புரியும். எகிப்தியர் கேவலம் காட்டு மிராண்டிகளைப் போலச் சண்டை செய்தவரல்லர். சரணமடைந்தவரை இவர்கள் கொல்வதில்லை. மூன்றும் ராம்ஸேஸ் காலத்தில் நடந்த கப்பற் சண்டையொன்றில் எகிப்தியர், கடலில் விழுந்துவிட்ட சத்துருக்களின் உயிரைத் தப்பவைத்தனர். போர்செய்ய இயலாது ஆயுதங்களை எறிந்துவிட்டுச் சரணமடைந்தவர்களைக் கட்டி யுத்தகளத்துக்குப் புறம்பே கொண்டுபோய் விடுவார்கள். சத்துருக்களில் எவ்வளவு பேர் இறந்தனர் என்றறிவதற்காக, இறந்தோருடைய கைகளை வெட்டிக்கொண்டுபோய் அரசன்முன் குவித்து எண்ணுவார்கள். சிலவேளைகளில் இறந்தோருடைய நாவும் மற்றைய உறுப்பும் இம்மாதிரிஅரசன்முன்னர்க்குவியலாவதுண்டு. யுத்தகளத்தில் கிடைத்த ஆயுதங்கள், குதிரைகள், ரதங்கள், மற்றையபொருள்கள் எல்லாம் கணக்கிடப்பட்டு அரசன் முன்னர் சேர்க்கப்படும். அவையெல்லாம் அரசனைச்சேர்ந்தவையாம்.

எகிப்தியரது கோட்டைகள் நாற்கோணவடிவ மமைந்தவை. சுவர்கள் பதினைந்தடி கனமும் ஐம்பதடி உயரமுமாக விருந்தனவாம். ஒவ்வொரு பக்கத்திலும் இடையிடையே கோபுரங்கள் கட்டியிருந்தன. பிற்காலத்தில் யாது காரணத்தினுலோ இவ்வாறு கோட்டைகள் கட்டுவது நின்றுபோய் விட்டது. அதற்குப் பதிலாக, எகிப்தியர்கள், கோவில்களில் மண்டபங்களைக் கட்டி அவைகளிலிருந்தே தங்களை எதிரிகளின் படைகளினின்றும் காப்பாற்றிக் கொண்டனரென்று தெரிகின்றது. இவ்வாறு ஒவ்வொரு கோவிலும் ஒவ்வொரு அரணுகமாறிற்று.

சயின்னியங்கள் தங்கும் பாசறையும் நாற்கோண வடிவமாகவே இருக்கும். அதற்கு வாயில் ஏதேனுமொரு புறத்திலிருக்கும். பாசறையின் நடுவில் சேனுபதியின் கூடாரமும், முக்கிய உத்தியோகஸ்தரின் கூடாரமும் அமைக்கப்பட்டிருக்கும். அங்குத் தான் பலி

பீடங்களும், வைதீக காரியங்களுக்கு வேண்டிய பொருள்களும், ரணகளப் பணப்பெட்டியும் வைக்கப்பட்டிருக்கும். காவற்காரர்கள் வெளியில் படுத்துறங்குவார்கள்.

கோட்டையைத் தாக்குவதில் வில் வீரருடைய உதவியைக்கொண்டே போவார்கள். கோட்டைமதிற்புறம் சென்றதும், ஏணிகளைச் சார்த்தி மேலேறுவார்கள்; அல்லது இடியந்திரங்களைக்கொண்டு மதில்களைத் தகர்க்கத் தொடங்குவார்கள். இவ்விரண்டு உபாயமும் பயனற்றவையாக முடியுமானால், மதிலின் கீழே குடைந்து அதைத் தள்ளிவிட முயலுவார்கள்.

தோற்ற அரசர்கள் எகிப்திய அரசனுக்குக் கப்பங் கட்டவேண்டும். அமெனம்ஹாத் அரசனால் ஜெயிக்கப்பட்ட ஒரு அரசன், அவரைத் தெய்வம் போலக்கொண்டாடி வணங்கினதாக ஒரு சித்திரம் காணுகின்றது. எகிப்தியர்கள் தருமயுத்தம் புரிந்தவரென்று தெரிகின்றது. எதிரியைச் சந்தித்தால் ஒரு ரதவீரன் தனது ரதத்தை விட்டிறங்கி,வேல், பரசு, முதலியவற்றுடன் எதிரியுடன் முதலில் சண்டைக்குப் போவான். போரில் பிடிபட்டவர்கள் அரசனுடைய பணியாளராவார்கள். வேறு நாடுகளில் காணுமாறு உயிருடனிருக்கும் போதே தோலையுரித்தல், கழுவேற்றல் முதலிய சித்திரவதையான குரூரச் செய்கைகள் எகிப்தியருக்குத் தெரியாத விஷயங்களாம். அவர்கள் வேண்டுமென்றே ஒருவரையும் இம்சிப்பதில்லை. எகிப்தியர் கொலை செய்வதற்காகவுள்ள சில சித்திரங்களெல்லாம், சண்டைமுனையில் தம்மை மறந்துசெய்யும் காரியங்களென்றே கருதப்படுகின்றன.

## 6. ஜாதீய ஆசாரங்கள்.

இந்தியாவிலிருப்பதைப் போலவே, எகிப்திலும் வருணாசிரம தருமம் பரவி வந்ததுண்டு. முதன்மையாக, வைதீக வகுப்பார் விசேஷ செல்வாக்குடன் இருந்தனர். இவரை எகிப்திய பிராம்மணர் என்னலாம். இரண்டாவது வகுப்பார் போர்வீரராவார். இவர் இந்திய க்ஷத்திரியரைப் போன்றவர். இவர்களுக்கடுத்த சாதாரண ஜனங்கள் பல வகுப்புக்களாகப் பிரிக்கப் பட்டிருந்தனர். கூலிவேலை செய்வோர்கள், கைத்தொழில் செய்வோர்கள், வியாபாரிகள், இடையர்கள், இவர்கள் தனித் தனி வகுப்பாக விருந்தனர். கடைசியான மாடு மேய்க்கும் இடையரும், மீன் பிடிக்கும் வலைஞரும் தாழ்ந்த ஜாதியராவர். இவர்கள் தாம் எகிப்தியருக்குப் பறையர் போலும்.

இந்தியாவில் இப்போது பல நூற்றாண்டுகளாக ஒரு வருணத்தில் பிறந்தவன் வேறொரு வருணத்துக்கு ஏற்றதொழிலை மேற்கொள்வது அபூர்வம். இவ்விதமான நிபந்தனை எகிப்தில் இருந்ததில்லை. வைதீக வகுப்பான் போர்த்தொழிலை மேற்கொள்வதும், போர் வீரவகுப்பினன் வைதீகத்தொழிலை மேற்கொள்வதும் எகிப்தில் சர்வசாதாரணம். மாகாபாரதவீரர்களாய் இப்படியே துரோணர் முதலியோரும் இடைச்சாதி, வலைச்சாதியைத் தவிர, மற்றைச் சாதியோர், ஒருவருக்கொருவர் கொள்வனகொடுப்பன செய்து சம்பந்தஞ் செய்வதுண்டு. விலக்கப்பட்ட ஜாதியார் தங்கள் தங்களுக்குள் மட்டுமே கல்யாணம் செய்துகொள்ளவேண்டும்.

அந்தஸ்தை விரும்புவோ ரெல்லோரும் போர்த்தொழிலையேனும் வைதீகத்தொழிலையேனும் மேற்கொள்வதுண்டு. எகிப்திய கப்பற் படைவீரர்கள், கரைப்படைவீரரிலிருந்தே தேர்ந்தெடுக்கப்படுவார்கள். வைதீகர்கள்சட்ட நிர்மாணஞ் செய்வதில் விசேஷஅதிகாரத்தைப் பெற்றிருந்தனர். இவர்களும் போர்வீரவகுப்பினருமே ராச்சியாதிகாரங்களை வகிப்பார்களாதலால், மந்திரிமார் முதலிய பெரிய உத்தியோகஸ்தர்கள் இவ்விரு வகுப்பினரிலிருந்தே வந்தனர் என்று தனியாகச் சொல்ல வேண்டியதில்லை. வைதீகர்களில் பல வகுப்பினருண்டு.பிரதமகுருக்கள், நியாயாதிபதிகள், சுவாமியாடுவோர், சாஸனமெழுதுவோர், பலி மிருகசோதகர், பரிசுத்த ஆடை வைத்திருப்

போர், கொடி முதலிய வைதீக சின்னங்களை வைத்திருப்போர், என வைதீகர் பலவகையாவர். பிரேதபதனஞ் செய்பவர்கள், * பரிசுத்தப் பிராணி போஷகர்கள், திருவிழாக் காரிய தரிசிகள், இவர்களும் வைதீக கோஷ்டியனர் தாம். ஸ்திரீகளும் வைதீக கோஷ்டியில் சேர்ந்து காரியங்கள் நடத்துவதுண்டு. கோயில்களில் பூஜை நடத்தியவர்களுள்ளும், வைதீக காரியங்களைச் செய்தவர்களுள்ளும், அரண்மனைக் குருக்கள்மாருக்குள்ளும், ஸ்திரீகள் இருந்தனர்.

இரண்டாவது வகுப்பினரான போர்வீரரைப்பற்றி முன்னரே கூறப்பட்டது. இவ்விரு வகுப்பினருக்கும் வரி விதிக்கப்படவில்லை. தேசத்திலுள்ள விளை நிலங்களில் பெரும் பாகம் இவ்விரு வகுப்பினர் வசமே இருந்தது. இவர்கள் இந்நிலத்தைக் குடியானவர்களிடம் குத்தகைக்கு விட்டுவிடுவார்கள். இவர்களுக்கு விடப்பட்ட நிலத்தைத் தவிர பாக்கியுள்ளதெல்லாம் அரசனுடையதாம். ஆகவே மற்றைய வகுப்பினர் வேலைசெய்தே பிழைக்க வேண்டியிருந்ததென்று புலப்படும்.

எகிப்தியர் சாதாரணமாகவே சாமர்த்திய சாலிகள். தேகாரோக்கியத்தைக் காப்பாற்றுவதற்காக மாதந்தோறும் மூன்றுநாள் மருந்து சாப்பிட்டுப் பத்தியமிருப்பார்களாம். மலையாளத்தில் இப்பொழுதும் வருஷத்தில் ஒருமாசம் இப்படிச் செய்வது சாதாரணம். தினையினால் செய்யப்பட்ட ஒருவித அடையே அவர்களுக்குப் பிரதான ஆகாரம். பானத்துக்காக வாற்கோதுமையிலிருந்து ஒருவிதச் சாராயம் இறக்கி உபயோகித்தனர். உப்பிட்டு வெயிலில் உலர்த்திய மீன்களும், வாத்து முதலிய பறவைகளும் அவர்களுடைய ஆகாரப் பொருள்களைச் சேர்ந்தவையாம்.

* இவர்களையும் இவர் தொழிலையும் பின்னிட்டு ஒருமுறை விளக்குவோம்.

சாதாரணமாக, எகிப்தியரின் ஆடைகள் நூலினாற் செய்யப்பட்டனவாக விருக்கும். அதற்குமேல் வெண்மையான மயிர்க்கம்பளமொன்றைப் போட்டுக் கொள்வதுமுண்டு. ஆயினும் இவ்விதக் கம்பளங்களோடு வைதீக காரியங்கள் ஒன்றையும் செய்யக்கூடாது. வைதிகர்கள் சிறுத்தைத்தோலைப் போர்த்துக்கொண்டால் தான் 'மடி' ஆவார்கள்.

எகிப்தியருடைய வீடுகள், சாதாரணமாக, சுடுகல்லால் கட்டப்பட்டு, பலவித வர்ணங்கள் தீட்டப் பெற்றிருக்கும். ஏழைகளுடைய வீடுகள் நான்கு சுவர்களையும், அச்சுவர்களின்மீது போடப்பட்ட பனந்துண்டுகளாகிய உத்திரங்களின்மேல் பரப்பிய பாய்களின்மீது பூசப்படும் கனமான மண்மெழுக்கையுடைய கூரையையும் உடையனவாம். மழை பெய்வது வெகு அபூர்வமாதலால், இம்மண் மெழுக்குக் கரைந்துவிடும் என்ற பயமே இல்லை. இப்படிப்பட்ட வீடுகளில் ஒரு கதவும், இரண்டு அல்லது மூன்று சிறியபலகணிகளுமட்டுமே இருக்கும். செல்வவான்கள் அழகிய மெத்தை வீடுகள் கட்டி வசித்து வந்தனர்.

எகிப்தியர்கள் பாதரக்ஷை யுபயோகிப்பதுண்டு. வெயில் கனகடுமையாக எரிப்பதினால், இவர்கள் ஏதேனுமொரு பாதரக்ஷணத்தை உபயோகிக்கவேண்டியது அவசியமாகும். ஆந்திலா என்னும் நகரத்தின் வருமானம் முழுவதும் எகிப்து நாட்டையாளும் அரசனின் மனைவிக்குப் பாதரக்ஷைகள் செய்யப்படுவதற்காகவே உபயோகிக்கப்பட்டதாம். நைதோகிரிஸ் என்பவளுடைய மெருகிட்ட பாதரக்ஷைகளில் ஒன்றை ஒரு கழுகு தூக்கிக்கொண்டு வந்து அரசனது மடிமீது போட, அவ்வளவு அழகான பாதரக்ஷையைத் தரிப்பவளை மனைவியாக்கிக்கொள்ள விரும்பி, அவ்வரசன் அவளைத் தேடிப்பிடித்து அரசியாக்கிக் கொண்டனனென்று ஒரு கதை யுண்டு.

விவாக விஷயத்தைப்பற்றிய விபரங்கள் செம்மையாகத் தெரியவில்லை. புருஷன் தன்னைக் காட்டிலும் வயதில் மூத்த ஒரு ஸ்திரீயைக் கல்யாணம் செய்து கொள்வதுண்டு. சுவகோத்திரத்தில் கலியாணம் செய்யக்கூடாதென்று இந்தியர்களுக்குள் வழங்கும் தர்மம் எகிப்தியர்களுக்குள் இருந்ததில்லை. அமென் ஹோதெப் என்னுமரசன் தன் சொந்த சகோதரியையே மணந்து கொண்டனனும்; இம்மாதிரி 'பகினீ' விவாகம் இந்தியாவுக்கு மேற்கில் பர்சியா முதலிய பலதேசங்களில் காணும். ஆதலால் இதில் அதிசயமொன்று மில்லை. அவனது மகளை, அவன் வைப்புஸ்திரீயின் மகன் கலியாணம் செய்துகொண்டான். தமயன் அந்தப்புரத்திலிருந்த ஸ்திரீ தம்பிக்கும் உரியவளாம். பொதுப்படக் கூறுமிடத்து, விவாக விஷயம் நாம் அங்கீகரிக்கத்தக்க வண்ணம் ஒழுங்கானதாக இருந்ததில்லை. இவ்விஷயத்தில் மட்டும் அவர்கள் பிராசீனர்களாக விருந்தது ஆச்சரியத்தை விளைவிக்கின்றது.

இனி எகிப்தியரின் இழவு கொண்டாட்டத்தைப்பற்றிப் பேசுவாம். அந்தஸ்துள்ள ஒரு மனிதன் இறந்து விட்டால், அவன் வீட்டு ஸ்திரீகள் அனைவரும் தலையிலும் முகத்திலும் அழுக்கைப் பூசிக்கொண்டு, பிணத்தை வீட்டிலேயே போட்டுவிட்டு, அலங்கோலமான உடைகளோடும், திறந்த மார்புகளோடும், வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு, உறவினர் பின்றொடரத் தெருவீதி வழியே ஓடுவார்கள். ஆடவர்களும் அம்மாதிரியே செய்வார்கள். அதன் பின் பிணம் சுகந்த திரவியங்கள் போடப்பட்டுப் பதனம் செய்யப் பெறுவதற்காகக்கொண்டு போகப்படும். எகிப்தியனேனும், அந்நியனில் யாவனேனும் முதலையினாலாவது நீரில் வீழ்ந்தாவது இறந்திருந்தால், அவனிறந்த இடத்துக்குச் சமீபத்திலுள்ள நகரத்தார் அப்பிணத்தை எடுத்து மரியாதையோடு புதைப்பார்கள். அநாதைப் பிரேத சம்ஸ்காரம் எகிப்தியரிடத்து ஓர் பெரிய தருமம்போலும்.

சாதாரணமாக எகிப்தியர் ஏகபத்னி விரதமுடையவர். ஸ்திரீகளுக்கு விசேஷ சுதந்தரங்களுண்டு. இந்தியாவில் ஆரியவரசர்களுடைய வம்சாவளியில் ஸ்திரீகளின் பெயரைக்கூடக் குறிப்பதில்லை. எகிப்திலோ, ஸ்திரீகள் பட்டத்துக்கும் வருவதற்கு அருகராவார். ஆகவே அவர்களுக்கு விசேஷமான செல்வாக்கும் அதிகாரமும் இருந்தன வென்பது சொல்லாமலே அமையும். ஸ்திரீகள் மிகுந்த மரியாதையுடன் கவுரவமாகப் பாராட்டப் பட்டனர். ஐரோப்பிய நாடுகளில் இப்போது ஸ்திரீகளுக்குள்ள சுதந்தரமும் கண்ணியமும் எகிப்திய ஸ்திரீகளுக்கு வெகு காலத்துக்கு முன்னமேயே இருந்தது.

செல்வான்கள் வீட்டில் நடக்கும் விருந்தில், விருந்தினர்கள் எழுந்து போவதற்குச் சற்று முன்னால், ஒரு சிறிய பிணப்பெட்டி அவர்கள் முன்னர் கொண்டுவரப்படும். அப்பெட்டிக்குள் இறந்தவனுடைய உருவம் போன்ற பிரதிமை யொன்று வைக்கப்பட்டிருக்கும். அதைத் தூக்கிக்கொண்டு போகிறவன், விருந்தினருக்கு அதைக்காட்டி, "இந்த உருவத்தைப் பாருங்கள்; நீங்களும் இறந்த பிறகு இதனைப்போன்றுவீர். ஆதலால், இருக்கும்வரையில் குடித்துச் சந்தோஷமாக விருங்கள்" என்று கூறிக்கொண்டு செல்வான்.

எகிப்து தேசம் மரியாதைக்குப் பிறப்பிடம் என்று சொல்லவேண்டும். ஒருவன் தன்னைக் காட்டிலும் வயதில் மூத்தவன் ஒருவனை வழியில் சந்தித்தால், அவன் செல்வதற்காகச் சற்று ஒதுங்கி நிற்பான். வயதில் முதிர்ந்தவன் ஒருவன் ஓரிடத்துக்கு வந்தால், அங்குள்ள இளையோரெல்லோரும் தங்கள் தங்கள் ஆசனங்களை விட்டெழுந்திருந்து நிற்பார்கள்.

இத்துடன் அபிமானிகள் நம்பூதிரி ஆசாரத்தை ஒப்பிடவேண்டும். எகிப்தியர்களுள், ஒருவரை யொருவர் சந்திக்கும்போது, அவர்கள் பேசுவதில்லை. மிகுந்தபணிவாக முழந்தாள்வரையில் கையைக்கொண்டுபோய் வணங்கிச் செல்வார்கள். வீட்டுக்கு விருந்தினனாக வரும் ஒருவனுக்கு, அவ்வீட்டு வேலையாள் தாமரைப் பூக்களைக்கொடுத்து மரியாதையோடு உபசரிப்பானாம்.

வைத்தியத்தொழில் இவ்வாறு பரவிவந்தது. ஒவ்வொரு வியாதிக்கும் ஒவ்வொரு பிரத்தியேக வைத்தியனுண்டு. கண் வைத்தியம்மட்டும் சிலர் செய்வார்கள்; சிலர் தலைக்கு வரும் வியாதியைமட்டும் குணப்படுத்துவார்கள்; வேறு சிலர் பல் வைத்தியம் செய்வார்கள்; இன்னுஞ் சிலர் குடலைப்பற்றிய நோய்களுக்குச் சிகித்ஸை செய்வார்கள். அற்பமான நோய்களைத் தீர்க்க அநேக வைத்தியர்கள் இருந்தனர். (இன்னும் வரும்).

---

## தூக்கம்; அதை எப்படி அடைவது?

ஸ்ரீமான்-என். ராமபத்திர தீக்ஷிதர் அவர்கள்

நாம் தூக்கத்தை உலகவாழ்க்கையின் இரகசியங்களிலொன்றாக மதிக்கலாம். நித்திரை நமக்கு மிகவும் சகஜமாயிருந்தபோதிலும், அதைப்பற்றி யாலோசிக்கும் பக்ஷத்தில் அறியக்கூடாத ரகசியங்களிலொன்றாக ஆகிவிடுகிறது. நம்முடைய வாழ்நாளின் மூன்றிலொருபாகத்தை என் தூக்கத்தில் செலுத்தி விடுகிறோம்? நாமிடைவிடாமல் சுவாசம் விட்டுக் கொண்டிருக்கிறோம்; நம்முடைய தேகத்தில் இரத்தம் ஓயாமல் ஓடிக்கொண்டிருக்கிறது; நம்முடைய இருதயம் நிமிஷம் தவறாமல் வேலை செய்து கொண்டிருக்கிறது. ஆனால், இடைவிடாமல் பகுத்தறியும் சக்தியுள்ள நமது மூளைக்கு அமைதி அவசியம் வேண்டும்.

'தூக்கமென்றா லென்ன?' என்னும் கேள்விக்கு மனிதர்கள் கோடிக்கணக்கான பதிலுரைக்கிறார்கள். ஆயிரக்கணக்கான புஸ்தகங்கள் தூக்கத்தைப்பற்றி விவரிக்கின்றன. என்றாலும் அதன் ரகசியங்கள் இன்னும் ரகசியங்களாகவே யிருக்கின்றன. அங்க அமைப்பின் அதிசயங்களைச் சோதிக்கிற சில மகான்கள் மூளையில் இரத்தோட்ட வித்தியாசங்களால் நித்திரை வருகிறதென்று கூறுகிறார்கள். சிலர் உதராதிகரணத்தால் தூக்கமுண்டாகிறதென்கிறார்கள். சிலர் மூளைக்கலக்கங்களா லுண்டாகிறதென்று வாதிக்கிறார்கள். மற்றும் சிலர் இரத்த ஓட்டங்களினாலுண்டாகும் களைப்பே தூக்கத்திற்குக் காரண மென்கிறார்கள். வேறு சிலர் முக்கிய ஸ்தானங்களிலுள்ள நரம்புகளின் குறுகுதலும் நீளுதலும் காரணமென்று சொல்லுகிறார்கள். தத்துவசாஸ்திரிகள் மூளையின் ஓய்வால் நித்திரை யுண்டாகிறதென்றும். சரீர ஓய்வினால் மூளையின் ஓய்வுண்டாகிறதென்றும் சொல்லுகிறார்கள்.

யார் எவ்விதம் உரைப்பினும் நமக்கு ஒரு விஷயம் நன்றாகத் தெரியும். அது என்னவென்றால்:—நம்முடைய சரீரம், மூளை, முதலிய அங்கங்களின் சுகத்திற்கு நித்திரை அத்தியாவசியம். டாக்டர் மெனகெயின் என்பவர் சில ஜீவஜெந்துக்களைப் பரீக்ஷித்து, ஆகாரம் நமக்கு எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் நித்திரையுமென்று சொல்லுகிறார். நாம் தூக்கம் வராத இரவுகளின் கொடுமைகளை நன்றாக அறிந்திருக்கிறோம். தூக்கம் கெட்டால் களைப்பு அதிகமாகிவிடுகிறது. எவ்வளவு சமயங்களில் நாம் படுக்கையில் படுத்தபிறகு தூக்கம் வராமல் அங்குமிங்கும் புரண்டும், கண்களை விழித்துக் கொண்டும், மூடிக்கொண்டும், எழுந்திருந்து உட்கார்ந்து கொண்டு மிருந்திருக்கிறோம்? தூக்கம் வராத சரீரத்தின் அவஸ்தையே அவஸ்தை. தூக்கமடையாமல் கஷ்டப்படும் காலங்களிலுண்டாகும் சின்னங்களைச்சற்றுக் கவனிப்போம். மூளை கலங்கிச் சரியான ஸ்திதியிலி

ருக்காது. முகம் வேறுபட்டுச் சந்தோஷம், புன்னகை, முதலியன அற்றுப்போயிருக்கும். பேசுவது கடினமாயிருக்கும். பேசவேண்டுமென்று பிரயத்தனப்பட்டால் மிகவும் கஷ்டமாயிருக்கும். சாந்தமுள்ள ஒருமணித் தூக்கத்தை விரும்பினபோதிலும் வராது.

தூக்கம் வராமையைக்கண்டு சிலர் பயந்து சில கெடுதலான காரியங்களைச் செய்து விடுகிறார்கள். உறக்கத்தை யுண்டாக்கச் சிலர் கஞ்சா உபயோகிக்கிறார்கள். (கஞ்சாவென்ற பதத்தையே விஷமென்று நாம் நினைக்கவேண்டும்.) கஞ்சா முதலிய பதார்த்தங்களை யுபயோகிப்பதால் மூளை கெட்டுப் போய்விடும். கஞ்சாவினால் உலக வெறுப்பும், துக்கமும், தற்கொலையும், இன்னுமனேக கொடிய பாதகங்களும் சம்பவிக்கின்றன.

'உனக்குத் தூக்கத்தின் காலமும், அளவும் எப்பொழுதாவது குறைந்து போய்விட்டதென்று தோன்றுகிறதா? அப்படியானால், உன்னுடைய எல்லாக் கவலைகளையும் ஒழித்து மனதைத் திடப்படுத்திக்கொண்டு கடவுளைத் தியானம் செய்' என்று ஓர் வித்தியார்த்தி சொல்லுகிறார். நித்திரை வராவிட்டால் முதலில் என்ன காரணத்தால் வரவில்லையென்று ஆலோசிக்கவேண்டும். அனேகமாய் எமர்ஸன் என்பவர் சொல்லுவதுபோல் "வாழ் நாளின் நடத்தை" களே காரணமாகப்புலப்படும். அனேகர் தங்களுக்கு வந்திருக்கும் வியாதிகளைக் கவனிக்காமலே பெரும்வியாதிகளை வரவழைத்துக்கொள்ளுகிறார்கள். சில வியாதிகளின் காரணங்களை யூகித்தால் மிகவும் சுலபமாயிருக்கும். ஆனால் வியாதிகளைப்பற்றிச் சொல்ல இது சமயமில்லாததனால் நம்முடைய விஷயத்திற்குப் போவோம். நாள் முழுவதும் கஷ்டப்பட்டு வேலைசெய்யும் ஸ்திரீகள் கவலையுடனும், அதிக சிரமத்துடனும் நித்திரை செய்யப்போவதால் அவர்களுக்குத் தூக்கம் எளிதில் வருவதில்லை. இந்தியாவில், புருஷனுடைய கொடுமைகளால் ஸ்திரீகள் நிரம்பக் கஷ்டமடைகிறார்கள். ஓர் வாலிபப் பெண் கணவனுடைய அஜாக்கிரதையினாலும், முட்டாள் தனத்தாலும், புத்தியின்மையாலும் குடும்ப பாரத்தையும், கவலையையும் அனுவசியமாகப் பொறுத்துக்கொள்ள வேண்டியதாயிற்று. அவளுக்குக் கடவுளிடத்தில் நம்பிக்கையில்லாமற் போயிற்று. இரவில் கவலைகள் அவளுடைய தூக்கத்தைக் கெடுத்துவிட்டன. இத்தூக்கமின்மையே வியாதியாகி விட்டது. யோசனைக்குறிப்பு, சித்தசக்தி, இவைகளிற் பயின்ற ஓர் வைத்தியர் அம்மாதுக்குத் தைரியத்தை யுண்டுபண்ணி, கடவுளின் மகிமையைக் காட்டி, அவளுடைய துக்கத்தைப் பரிகாரம் பண்ணும் வழிகளைக் கற்பித்துக்கொடுத்துச் சொஸ்தமாக்கினார். பிறகு; அவள் பலமும் வீரியமுள்ளவளாகி குடும்பத்தைச் சகித்து வந்தாள். துக்கத்தினாலுண்டான தூக்கமின்மையும் ஒழிந்தது.

"இன்றிரவு நான் தூங்குவேனா?" என்னும் கேள்விக்குப் பதில் "நான் இப்பகலை எவ்விதம் கழித்தேன்" என்பதுதான். நாள் முழுவதும் பயத்துடனும், கோபத்துடனும் அருவருப்புடனும், துக்கத்துடனுமிருந்தால் இரவில் எப்படி நித்திரைவரும்? நாம் செய்ய வேண்டுவதென்னவென்றால், பயம் வந்த சமயத்தில் தைரியப்படுத்திக்கொள்ளவேண்டும்; கோபகாலத்தில் சாந்தமுள்ள மனதைக் கொண்டுவரவேண்டும்; துக்கக்காலங்களில் சந்தோஷமாயிருக்கவேண்டும். வெகு அழகுதான்—இல்லாத காரியத்தைக் கொண்டுவர முடியுமா?—அவ்வளவு சக்தியில்லாவிட்டால் புருஷத்தன்மையின் அழகென்ன? இவ்வளவும் மனது சம்பந்தப்பட்டவரையில், தேக சௌக்கியத்திற்கு ஜீரணம் முக்கியமான விஷயம். அஜீரணத்தால் நரம்பு நாடிகள் கலைந்

மூளையைத் தாக்கித் தூக்கத்தைக் கெடுத்து விடும். இராப்போஜனம் எப்பொழுதும் லேசாக விருக்கவேண்டும். கனத்த ஆகாரம் உதவாது. காபித்தண்ணீர், தேத்தண்ணீர் முதலிய நாகரீகக்குடிகளை இரவில் நிறுத்தி விடவேண்டும். இரவில் சாப்பிடத் தகுந்த பதார்த்தங்களை வைத்தியர்களுடைய உதவியினுலுபயோகிக்க வேண்டும்.

இனிமேல், தூக்கத்திற்கு மனது செய்யக் கூடிய உதவியைப் பார்ப்போம். தூக்கத்தின் பரமரகசிய மென்னவென்ருல் தூங்க வேண்டு மென்று நினைப்பது. ஆகையால், மனதில் எவ்விதக் கவலையும் வரவொட்டாமல் தடுக்கவேண்டும். பள்ளிக்கூடப் பிள்ளைகள் உபாத்தியாயருடைய ரஸமற்ற பிரசங்கங்களைக் கேட்டுக் கொண்டிருக்கும் பொழுதே தூங்கிவிடுவார்கள்; பிரசங்கம் முடிந்தவுடன் எழுந்திருப்பார்கள். நம்முடைய ஸ்திரீகள் இயந்திரத்தில் மாவரைக்கும் பொழுதுண்டாகும் சத்தத்தைக் கேட்டுக்கொண்டே யிருந்தோமானல் எளிதில் நித்திரை வந்துவிடும். சத்தம் நின்றவுடன் விழிப்புக் கொடுக்கும்.

நித்திரையை யுண்டுபண்ணிக்கொள்ள ஆத்மயோசனைக்குறிப்பு செய்து கொள்ளவேண்டும். நாம் திடீரென்று தூங்குவது வழக்கமில்லை. நாம் தூங்கவேண்டு மென்று தீர்மானம் செய்து கொள்ளுகிருேம். சரியான படுக்கையில் படுத்துக்கொண்டு தூக்கத்தைக் கூப்பிடுகிருேம். தூக்கம் வரப்போகிற தென்று நினைக்கிருேம்—தூக்கமும் வந்து விடுகிறது. தூங்கவேண்டுமே யென்கிற பயமே தூக்கத்தைக்கெடுக்கும். இப்பயம் நீங்கினவுடன் நாம் தூங்குகிருேம். ஆகையால், தூக்கமின்மை யென்கிற வியாதியைப் போக்க ஆத்மயோசனைக் குறிப்புகள் செய்துகொள்ளவேண்டும். பின்வரும் மந்திரங்களை யடிக்கடி யுச்சரிக்க வேண்டும்:—

"நான் நன்ருய்த் தூங்கவேண்டும்; என்னுல் தூங்கமுடியாவிட்டால் நான் அமைதியாகவாவதிருக்கவேண்டும். என் மனது கலங்கக் கூடாது. நான் தூங்கிவிடுவேன்" என்பவை. சுருக்கிச் சொல்லின், நம்முடைய தூக்கம் நம் மனதிலிருக்கிறது. "ஏன் நான் தூங்காமலிருக்கக்கூடாது? ஆகையால், நான் தூங்குவேன். என் மனது சாந்தமாயிருக்கிறது. நான் தூங்கப் போகிறேன். நான் தூங்குவேன். நான் தூங்கிவிட்டேன்." இவ்விதம் மனதைத் தைரியப் படுத்திக்கொண்டு இம்மந்திரங்களை யுச்சரித்துத் தூக்கமின்மையைச் சொஸ்தப் படுத்திக்கொண்ட ஓர் மாது பின்வருமாறு எழுதுகிருள். "குழந்தைப் பருவமுதல் நான் நன்ருகத் தூங்கினது கிடையாது. இரவில் எவ்வளவு மெதுவான சத்தமும் என்னை யெழுப்பிவிடும். ஒரு தடவை விழித்துக்கொண்டால் மறுபடியும் நான் தூங்குவதரிது. நான் என்னுடைய சங்கீதத் தொழிலை யாரம்பித்தது முதல் இவ்வியாதியைத் துரத்த முயன்றேன். நான் அனேக முறை தூங்க யத்தனித்தபொழுது, உருவல்லாத சொப்பனங்களும், பயங்கரமான காட்சிகளும், என்னைத் தொந்திரவு செய்தன. சில நாட்களில் நான் தூங்கினதே கிடையாது. எப்பொழுதாவது தூங்கினல், விழித்துக்கொண்டவுடன் எனக்குக் களைப்பாயிருக்கும். பிறகு, என் மனதை யுறுதிப்படுத்திக் கொண்டேன். ஆத்மயோசனைகள் கொடுத்துக்கொள்ள ஆரம்பித்தேன். இப்பொழுது, சகஜம்போல் இரவில் எட்டுமணி தூங்குகிறேன்."

தூக்கத்தை வரவழைத்துக்கொள்ள இன்னுமொருவிதமிருக்கிறது. அதாவது, கவிகள், பாகவதர்கள், முதலியவர்களுடைய பாட்டுக்களைத் தூங்கும் சமயத்தில் ஒப்பிக்கவேண்டும்.

கடைசியாக, பின்வரும் குறிப்புகள் மிகவும் உதவியுள்ளதாக விருக்கும்:—

1. நாள்முழுவதும் சுகசரீரியாயும், சாந்த

முள்ள மனதுள்ளவனுகவு மிருக்கவேண்டும். அதிக ஆசை உதவாது. எப்பொழுதும் சுத்த ஆகாயமுள்ள விடத்திலிருக்கவேண்டும். குறித்த காலங்களைத் தவிர மற்றகாலங்களில் தூங்கக்கூடாது. இரவே தூங்குவதற்குச் சரியான காலம். பகலில் ஒருபொழுதும் தூங்கக் கூடாது.

2. சாயங்காலத்தில் சிரிப்புள்ள முகத்துடனிருக்க வேண்டும். பண்டித நடேச சாஸ்திரியார் முதலான கனவான்கள் எழுதியிருக்கும் தமிழ் நாவல்களையும், ஷேக்ஸ்பியர் நாடகக் கதைகளையும் வாசிப்பது நலம்.

3. பெரிய பட்டணங்களில் அமைதியுள்ள இடங்களகப்படாததால், சத்தமுள்ள விடங்களிலிருந்து பழகவேண்டும்.

4. மருந்துகள் உபயோகித்துத் தூக்கத்தை வரவழைத்துக்கொள்ளும் வழக்கத்தை நிறுத்த வேண்டும்.

5. இவ்வளவு பிரயாசைப்பட்டும் தூக்கம் வராவிட்டால், தூக்க மின்மையிலுங்கூட சந்தோஷமாக விருக்கலாம். "தூக்கம் ஓர் புருவுக்குச் சமானம். அதைப் பின்தொடர்ந்தால் உன்னை விட்டுப் பறந்தோடும். அமைதியாயிரு; புருவை யிஷ்டப்படி விட்டுவிடு; அது உன்னிடத்தில் வரும்" என்று டியூபோ சொல்லியிருக்கிறார்.

---

நாம் முந்திக் குறிப்பிட்டபடி சென்றமாசம் ராஜப்பிரதிநிதியவர்களிடமிருந்து பர்மியப் புத்தர்களுடைய பிரதிநிதிகள் ஸ்ரீ புத்தபகவானுடைய எலும்புகளைச் சம்புடத்துடன் பெற்றுக்கொண்டார்கள். அக்காலத்தில் அதைக் கண்டுபிடித்தவராகிய பூர்வ விருத்தாந்தி ஸ்ரீமான் மார்ஷல் துரையவர்கள் இது வெளிவந்த புராணத்தைநன்கு விளக்கி, முந்தி அசோகவர்த்தன சக்கிரவர்த்தியவர்கள் எந்த நியாயங்கொண்டு இந்தப் புத்த சின்னங்களை ஆங்காங்கு ஏற்பித்தாரோ, அதே நியாயத்தினுல் இப்பொழுது இந்தச் சம்புடம் பர்மாவில் போய்த் தங்குவது பொருந்தும் என்றார். தக்க மரியாதையுடன் இந்தச் சடங்கு நிறைவேறிற்று.

## வாகன வகைகள்


II. (74-ம் பக்கத்திலிருந்து)

ஸ்ரீமான்-டி. எஸ். வெங்கிடரமணையர், பி.ஏ., எல்.டி.


அற்பசிமீ விஹாரிணியில் தரைமேல் நமக்கு உதவிவருகிற வாகன வகைகளின் பரம்பரையைவிசாரித்தோம். அதினின்றும்இப்பொழுது வாயுவேகமாய்ப் போகிற மோட்டார், ரயில், முதலிய வண்டிகளுக்கு மூதாதைகளாய் முரட்டு வண்டிகளும், முரட்டுச் சக்கரங்களும், முரட்டு வழிகளும் இருந்து, ஒவ்வொன்றும் காலக்கிரமத்தில் புத்திமான்கள் சிரமப்பட்டு நேராக்கியதென்றும், இனியும் அவற்றிலுள்ள தோஷங்களை நமது சந்ததியார் நோக்கிக் கொள்ளவேண்டுமென்றும் கண்டோம். இப்பொழுது கடல், நதி முதலிய நீர் வழிகளிலும் அவ்வாறே படிப்படியாய் நாம் அனுகூலமடைந்து வந்திருப்பதை விசாரிப்போம்.

தண்ணீர்மேல் சவாரிசெய்வதென்றாலும், சாமான்களைக் கொண்டுபோவதென்றாலும், அது வெகு அபாயகரமான விஷயமென்று நம்மில் சாமான்னியமாய் எல்லோருக்கும், விசேஷமாய் நீந்தத் தெரியாதவர்களுக்கும், தெரியும். ஆகலால், இந்தக்கலையை அபிவிருத்திக்குக்கொண்டுவருவதற்குத் தரைக்குரியவாகனங்களை ஏற்படுத்துவதில் இருந்ததைவிடச் சௌகரியங்கள் அதிகம் வேண்டும்.


முதலாவது நாம் இருக்குமிடம் சமுத்திரம், அல்லது நதி, குளங்கள் முதலியன செறிந்ததாயிருக்கவேண்டும். இதனுல் தான் நமது கவிகளிலொருவர் "கான்யாற றடைகரை யூரினிது" என்று கொண்டாடுகிறார் போலும். காவேரி போன்றநதியருகில் ஜனங்களிருந்தால் அவர்களில் நூற்றுக்கு எத்தனைபேர் நீச்சம் தெரியாமலிருப்பார்கள்? ராஜஸ்தானப் பாலைவனம்போன்று குடிப்பதற்குக்கூட நீர் வேண்டுமட்டு



''டிரெட்நாட்'' என்னும் பெரிய சப்பல்



சட்டு மரம்



பழைய மரக்கலம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS. REGISTERED 13 JUN 1910 MADRAS.

மில்லாமல், கைகால்களை மணலால் சுத்தி செய்து கொள்ளவேண்டிய இடங்களில் ஜனங்கள் குடியேறியிருந்தால், அவர்களில் நூற்றுக்கு எத்தனைபேர் நீச்சந் தெரிந்தவர்களாயிருப்பது சாத்தியம்? இந்தக் கேள்விகளுக்குக் குழந்தைகளும் "ரெடி"யாய்ப் பதில் சொல்லி விடுவார்கள்.

இப்பொழுது, காவேரி தீரத்தில் பவானி போன்ற ஓர் ஸ்தலத்தில் ஜனங்கள் இருக்கிறார்களென்று வைத்துக் கொள்வோம். குடகுமலையில் பெரிய மழை பெய்கிறது. காவேரி உடனே பெருவாரியாய்ப் பிரவகிக்கிறது. இருகரையிலுமுள்ள செடி, மரம், மிருகாதிகள் எல்லாவற்றையும் அடித்துக்கொண்டு வருகிறது. பவானியிலுள்ளவர்கள் காவேரிப் பாலத்தின்மேல் நின்றுகொண்டு வேடிக்கை பார்க்கிறார்கள். ஏதோ ஒரு செல்லரித்த பெரிய மரத்துண்டு மிதந்துபோகிறது. ஒருவன் சொல்லுகிறான், "அடே, இதைப்பிடித்து இழுத்துக்கொண்டுவந்தால், பத்து நாளைக்கு விறகுக்கு ஆக்ஷேபமில்லை"யென்று. உடனே, கைபிடிச்சுவற்றின் மேலேறித்திடீரென்று குதித்துக் கட்டையைப் பிடித்து இழுத்துப் போகிறான். ஆனால் நீரோட்ட மதிகமாதலால் அவனிழுக்க, அதிழுக்க, இந்தத் தகராரில் அவனுக்குச் சீக்கிரம் கைசலித்துப்போய், கரை சேரலாமென்று பார்த்தால் அதுவும் சுலப சாத்தியமில்லாமல், கிருஷ்ணார்ப்பண மாகிவிடும் போலிருக்கிறது. உடனே அவன், கட்டையின்னும் மிதப்பதைக்கண்டு ஏதோ ஆனபடியாகட்டுமென்று அதை யிறுகக்கட்டிக் கொள்ளுகிறான். பிறகு சற்று நேரம் கழித்து நீரலைப்பினால் அவன் மேலும், கட்டை கீழுமாகப் போகிறது. உடனே அவன் குதிரைக்கால்போட்டுக் கட்டைமேல் உட்கார்ந்து கொண்டு, நீர் போகும்வழியே கொஞ்சதூரம் போய், சிறிது சிறிதாகக் கட்டையைக் கையாற் பிடித்துத் தள்ளி அதிர்ஷ்டவசத்தினால் கரைவந்து சேருகிறான். வந்தவுடன் தனக்குப் பிராணபத்து வந்ததை ஒருவருடன் சொல்லுவது அவமானகரமென்று எண்ணியோ, அல்லது மூக்கறையன் கதையாக இனி யிரண்டொருவர் அவ்வாறே தத்தளித்தால் தான் அவர்களுக்கு யுக்தி சொல்லிக்கொடுக்கலாமென்கிற ஜம்பத்தினாலோ, அவன் ஊருக்குப் போய், இஷ்டர்களுடன், "அடடா, இன்றைய தினம் எனக்குக் கிடைத்த அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம், காவேரியில் என்னவாகச் சவாரி செய்தேன், அம்மாதிரி உங்களுக்கெல்லாம் கிடைக்குமா?" என்கிறான். அதைக்கேட்டு அடுத்த பிரவாகத்தில் நாலைந்துபேர் இவ்வாறே செய்து தங்களுடைய யுக்தி பலத்தினாலோ, அல்லது முந்தியவனது அனுபவத்தினாலோ தப்பித்துக்கொள்ளுகிறார்கள். இப்படியானதும், நீர்வழி போவதற்குப் படகு ஏற்பட்டுவிட்டதென்று நிச்சயமாய்ச் சொல்லலாம்.

இப்படி, ஒரு தேசமல்லாமல், கடற்கரை, நதிக்கரையை அடுத்துள்ள பலதேசங்களிலும், ஜனங்கள் அகஸ்மாத்தாகத்தான் இந்த வித்தையைக் கற்றிருக்கவேண்டும். ஒரு மரத்துண்டை நம்புவதைவிட, இரண்டு மூன்றைச் சேர்த்துக் கட்டிவிடுவது நலமென்பது அதற்கு அடுத்தபடியாகத் தோன்றக்கூடிய விஷயம். இதிலும், மீன் முதலியவைகளைப் பார்த்தோ, வேறுவிதமான அனுபவத்தினாலோ, இரண்டு தலையும் குறுகியிருக்கச் செய்துவிடுவது இன்னும் சுலபம். இதற்குக் கட்டுமரம் என்று பெயர். இதைப் படத்தில் காணலாம். பிறகு, உரித்த தேங்காய்மட்டை, மட்குடம், உலர்ந்த சுரைக்காய், முதலியன வெகு நேர்த்தியாக மிதந்துபோவதைக் கண்டோ, அல்லது வேறு யுக்தியினாலோ, இப்படிச் சேர்த்துக் கட்டிய மரங்களைவயிறு தாழ்ந்திருக்கும்படி செய்திருக்கவேண்டும். இதற்குப் பலமுறைகளுண்டு.

உளி முதலிய ஆயுதங்களில்லாதகாலத்தில் கூரிய கற்களைக் கருவிகளாக்கி மரங்களை ஒருபுறம் சதைத்துப் பள்ளமாக்குவதுண்டு. இதைவிட, அமெரிக்கா முதலிய இடங்களில் பழைய நாளிலிருந்தபடி பெரிய மரத்துண்டுகளுக்கு ஒருபுறம் தீவைத்தெரித்து, கரியைச் சுரண்டிப் பள்ளமாக்குவதுமுண்டு. இவ்வாறு செய்து எழுபது, எண்பது பேர்வரையில் இருந்து போகும்படியான பெரும் படகுகளைக் கொலம்பஸ் தான் கண்டதாக எழுதியிருக்கிறார்.

மரமில்லாத இடங்களில், சிறு கொம்புகளையோ, மூங்கில் முதலியவற்றையோ வளைத்துக் கட்டி, அதற்குத் தோல்களைப்போர்த்து அவற்றைப் படகுகளாக்குவதும் சாமான்னியமாய் எங்குங் காணக்கூடியதாம். காவேரி முதலிய நதிப்பிரதேசங்களில் இவைகள் மூலமாய்ச் சாமான்களைக் கொண்டுபோவதும்,ஜனங்கள் நதியைத் தாண்டுவதும் நாளதுவரை நடந்து வருகிற விஷயம்.

ஒரேமரத்தை மேற் சொல்லியவாறு பெரிய படகாக்குவதைவிட்டு, பல சிறு பலகைகளை ஒரு முதுகு மரத்திற்கு இருபுறத்திலுஞ் சேர்த்துக்கட்டி, குறுக்காகவும் கொம்புகள் சேர்த்துப் பிகிர்ந்து விடுவதுதான் வெகு நாள்வரை கப்பலென்று வழங்கிவந்த யந்திரம். ஆனல் இது எளிதாகப் போவதற்காக இதற்கு வேறு துணைக்கருவிகள் காலக்கிரமத்தில் சேர்ந்து வந்தன. அவற்றைநாம் சுருக்கி இங்கு விவரிப்போம்.

நாம் மேற்கூறிய சிறு படகுகளையும் நமக்கு வேண்டியபடி போகச் செய்யவேண்டுமானல், அதற்கு ஏதாகிலும் ஒரு கருவிவேண்டியிருப்பது பிரத்தியக்ஷம். உதாரணமாக, கையை வீசிக்கொண்டு ஓடுவதற்கும், கைகளைக் கட்டிக்கொண்டு ஓடுவதற்கும் வித்தியாசம் உண்டாவென்று குழந்தைகளைக்கேட்போம். உடனே சொல்லிவிடுவார்கள். இரண்டு கைகளையும் வீசிக்கொண்டு ஓடுவது தான் சுலபமென்று. அதுபோலவே, மேலே நாம் அதிர்ஷ்டவசத்தால் காவேரிக்கு அர்ப்பணமாகாமற் தப்பின ஒருவனைப்பற்றிப் பேசினேமல்லவா? அவன் ஆற்றொழுக்கோடு போய்க்கொண்டிருக்கையில் கரையடுத்து வருவதைக்கண்டு, சீக்கிரம் கரையடுக்க வேண்டுமென்று காலாலும் கையாலும் தண்ணீரைத் தள்ளிவிட்டு மரத்திற்குப் போகும்வழி காட்டியிருப்பானுகில்,துடுப்பு என்னும் துணைக்கருவி ஏற்பட்டதாகச் சொல்லிவிடலாம். இப்படியே, ஆப்பிரிக்காவில் நீல நதியிலும் மீன்பிடிப்பவன் கட்டைமேல் குதிரைக்காலிட்டு உட்கார்ந்துகொண்டு, வலையை வீசிக்கொண்டே கால்களால் மரக்கட்டையையும் வேண்டியபடி தள்ளிப் போவதுண்டு. இப்பொழுது தையல் யந்திரம் வைத்துக்கொண்டிருப்பவர்கள், தைக்குந் துணியை வேண்டியபடி தள்ளிக்கொண்டே, இரண்டு பாதங்களினுலும் யந்திரத்தைக் கடகடவென்று இயக்கிக்கொண்டிருப்பதை நாம் பார்க்கிறோமன்றோ, அதுபோல வென்றறிக. ஆனல் கைகால்களைக்கொண்டே படகுகளை ஓட்ட வேண்டுமானல், அது பெருங்காரியங்களுக்கானதல்ல. ஆதலால் 'மரக்கைகள்' என்று நாம் தாராளமாய்ச் சொல்லக்கூடிய துடுப்புகளென்பவைகளை உண்டாக்கியும், அவை வேண்டாதவிடத்து மூங்கில் முதலிய ஓடக்கோல்களின் உதவியினுலும் படகுகள் வெகுகாலம் ஓடின.

இவ்வாறு படகை ஓட்டுபவர்கள், நனைந்த துணியை ஓடக்கோலின் நுனியில் மாட்டி அதைக் காற்றுக்கு உலரும்படி விட்டதில், அதனல் காற்று அனுகூலமாயிருக்கையில் தங்களுக்குச்சிரமங் குறைந்ததைக் கண்டோ, அல்லது இதுபோன்ற வேறு அனுபவத்தினுலோ, பாயும், பாய்மரமும் உபயோகத்திற்கு

வந்தன. இவ்வளவானபின் மரக்கலங்களைத் திருப்புவதற்கு மீன்களுக்கு வாற்புறத்திலுள்ள படி "மீகான்" அமைந்தது வெகு சுலபம். அதில் அதிசயமொன்றுமில்லை.

இம்மாதிரி கப்பல்களில் தான் வெகுகாலமாகத் திரைகடலோடி ஜனங்கள் திரவியந் தேடியது. ஆனால், இப்படிப் போய்க்கொண்டிருப்பதில் அனேகருக்கு அனுபவக்குறைவினால் திசைகெட்டு வழிதப்பிப் பாறைகளின் மேல் கப்பல்கள் மோதியும், வேறுவிதத்திலும் பெருத்த நஷ்டமுண்டாகிக்கொண்டே வந்தது. ஆதலால்தான் நாளதுவரை மிகவும் விசனமாயிருக்கிற ஒருவனைக் கண்டால், "என்ன, கப்பல் முழுகிப்போயிற்றா?" என்று கேட்பதும், "கப்பலோடிப்பட்ட கடன் கொட்டை நூற்றுக் கட்டுமா?" என்றும், நம்மவர்களிற் சொல்லிவருவதுண்டு. தவிர, மேனாட்டாரிலும், "கப்பலென்றாலென்ன, வெறும் பலகைகள்தானே; மாலுமிகளென்றாலென்ன, சாமான்னிய மனிதர்தானே," என்றும் வழங்குகிறது.

ஆதலால், கடலில் போகிறவர்களுக்கு ரஸ்தா ஒன்றுமில்லாததுகொண்டு திசையறிவதற்குஓர் கருவி ஏற்படும்வரை அவர்கள் பிழைப்பு வெகு அபாயகரமாகவேதானிருந்தது. இந்தக் கருவியைச் சுமார் 2000-வருஷங்களுக்கு முன் நமது அயலவர்களாகிய சீனர்களும், சுமார் 600-வருஷத்திற்கு முன் மேனாட்டவர்களும், வெவ்வேறு அனுபவத்தைக் கொண்டு கண்டு பிடித்தார்கள். இரும்பைக் காந்தமிழுப்பது வெகு பழைய அனுபவம். காந்த ஊசி தெற்கு வடக்குத் திக்குகளைக் காட்டத்தக்கதென்று உங்களில் பலருக்குத் தெரிந்த விஷயம். இதுவே மாலுமிகளுக்குத் திசையறி கருவியாக ஏற்பட்டுவிட்டது. ஏனெனில், காந்த ஊசியினால் வடக்கு நமக்கு நிஷ்கரிஷையாய்த் தெரிந்துவிட்டால் மற்ற திக்குகள் நிஷ்கரிஷையாகி விடுகின்றன. ஆதலால் காற்றின்வழியாகக் கப்பலோடுகையில் நமக்கு வேண்டிய திக்கில் போகிறதா, அல்லது விபரீததிக்கில் போகிறதா வென்பதைக் கண்டறியலாம். இதுவும் நாலுதிக்குகளை மட்டும் காட்டிக்கொண்டிருக்கும்வரை நமக்குப்போகும்வழி நியமமாக ஏற்படாது. ஆதலால், நாலு திக்குகளையும் சில்லரையாகச் சரிபாகங்களாக்கி, 32-திசைகளாக வகுத்திருக்கிறார்கள். ஆதலால், ஒரு கப்பல் போனவழியே மற்ற கப்பல்களும் விசேஷப் பிசகில்லாமல் செல்லுவதற்குச் சௌகரியம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, நன்றாய்த்தேர்ந்த மாலுமிக்கும், நன்றாகப் பழகிய வண்டிக்காரனுக்கும் விசேஷ வித்தியாசமேயில்லை. வண்டிக்காரன் எப்படிச் சர்க்கார் போட்டிருக்கும் ரோட்டிலேயே ஓரடி வித்தியாச மில்லாமல் ஓட்டிப்போகிறானே, அதுபோலவே, மாலுமியும் சமுத்திர முதலிய நீர்ப்பரப்பின் மேல் தவறுதலின்றி ஓட்டிப்போகிறான்.

இவ்வாறு துடுப்புகள் உதவியாலும், காற்றின் உதவியாலும் எத்தனையோ நூற்றாண்டுகளாக வியாபாரமும், கடற்சண்டையும், கடற்கொள்ளையும், நடந்து வந்தன. இம்மாதிரியான கப்பலொன்று கட்டுமரத்திற்கு அடுத்துக்காணுகிறது. என்றாலும், மொத்தத்தில் கடல் யாத்திரை செய்வதென்றால், அது சாமான்னிய ஜனங்களுக்கு வெகு பெருங்காரியமாகவே யிருந்தது. ஏனெனில், இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்கு வரவேண்டுமென்றால் பழைய நாளில் மூன்று மாதமோ, நான்கு மாதமோ, ஆறு மாதமோ, செல்லும். ஆனால், 19-ம் நூற்றாண்டில் நீராவி யந்திரம் ஏற்பட்டு, அதன் மூலமாய் வண்டிகளை யோட்டலாமென்பது ருசுவாகவே, அம்மூலியமாகக் கப்பல்களையும் ஏன் தூரத்தக்கூடாதென்று விவேகிகள் ஆலோசிக்கலானார்கள். பிறகு,

சிறிது சிறிதாக, அம்மாதிரியே செய்யத்தொடங்கி, காலக்கிரமத்தில் மணிக்கு இருபது மைல் வீதம் கப்பல் ஓடுவது சாத்தியமாகியிருக்கிறது. நீராவியைக் கப்பலுக்கு உபயோகிக்கும்படி ஆகவே, பழைய மரக்கலங்கள் அதற்கு உதவாதனவாகி, இருப்புத் தகடுகளால் கப்பல்கள் நிர்மாணிக்கப்பெற்றன.

போர்க் கப்பல்களும் அவ்வாறே இருப்புத் தகடுகளாலாக்கி, பீரங்கி முதலிய சகல யுத்தக் கருவிகளையும் நன்றாயமைக்கப்பெற்று வரவரப் பெரிதாகி வருகின்றன. இப்பொழுது உள்ள பெரிய கப்பல்களுக்கு "டிரெட்நாட்" என்றால் "நிர்ப்பயன்" என்று பெயர். அவை ஒவ்வொன்றும் நிர்மாணிப்பதற்கு எத்தனையோ கோடி ரூபாய்கள் வேண்டும். ஏனெனில், அவைகளுக்குக் கப்பல் என்ற பெயர் உபசாரமேயொழிய, அவை ஒவ்வொன்றும் தண்ணீரில் தெப்பமாடுகிற ஒரு சிறு நகரமென்றே சொல்லவேண்டும். அதிற்போகும் ஜனங்களுக்கு வேண்டிய சகல சௌகரியங்களும் அதில் நன்றாயமைந்திருக்கின்றன. அதை விவரித்தால் பெருகும். படத்தில் ஒன்று காட்டியிருப்பதைப் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம்.

எப்படித் தரையில் வண்டிகள் சிறிது சிறிதாகப் பிரபலமாகி, ரோட்டுகளும் நன்றாயமைந்ததினால் தூர தேசத்திலுள்ள இடங்களுக்குப் போய் வருவதும், சாமான்களை மாற்றிக்கொள்வதும் சுலபமாயிற்றோ, அதுபோல, "கடலைச் சவாரிசெய்ய" வகைகள் ஏற்படுமளவிற்குத் தூரதேசங்களும் ஒன்றையொன்று நெருங்கிவிடுகின்றன. தூரதேச விலை பொருள்களும் கண்காணாத தூரம்போய் மடிகின்றன. ஆதலால், பூப்பிரதக்ஷிணம் செய்வதற்கு இவ்விரு வகைக் கருவிகளும் கூடித்தான் இதுவரையில் உதவி வந்திருக்கின்றன. ஆனால் இனி வருங் காலத்தில் இம்மாதிரிக் காரியங்களுக்கு இவ்விரண்டு சாதனங்களையும்விடச் சிறந்ததாகிய ஒரு சாதனம் இப்பொழுதுதான் நிர்மாணமாகி வருகிறது. வெகுசாய், நமது காலத்திலேயே நமது நாட்டுச் சாமான்னியர்களும் அதைப் பரிசயஞ் செய்துகொள்ள வகை யேற்படும் போலிருப்பதால், அதைக்குறித்து மேலொரு மாதத்தில் விவரிப்போம்.

---

ஸ்ரீசிருங்ககிரி ஜகத்குரு சுவாமிகள் எட்டடி பாய்ந்தால், ஸ்ரீ ஹம்பி ஜகத்குரு சுவாமிகள் பதினாறடி பாய்வார்போலிருக்கிறது. இப்பொழுது நமது ராச்சியத்திற்கு வடக்கிலுள்ள திபெத் ராச்சியத்தின் அதிபதியாகியும், அவ்விடத்திலுள்ள பௌத்தர்களுக்கெல்லாம் பிரத்தியக்ஷ புத்தனுமாகிய தாலைலாமாவென்பவர் தமக்கு மேலதிகாரியாகிய சீனா சர்க்காருக்கு ஏதோ விரோதமாக நடந்து, அதனாலவர்கள் துரத்த இந்தியாவில் தஞ்சமாக வந்திருக்கிறார். ஹம்பி சுவாமிகள் நமது ராஜப்பிரதிநிதியவர்களுக்குத் தந்தி மூலமாய்ச் சங்கதி தெரிவித்து, தானும் லாமாவும் கலந்து பேசவேண்டுமென்றும், அதனால் இந்து மதத்திற்கும், பௌத்த மதத்திற்கும் வெகுநாளாயிருந்துவரும் முகச்சார்பு இல்லாமல் போகவேண்டிய உபாயம் ஏற்படவேண்டுமென்றும், அதற்கு ராஜப்பிரதிநிதியவர்கள் சகாயிக்கவேண்டுமென்றும் கேட்கிறார். அம்மட்டேயல்லாமல், புனாவில் கூடியிருக்கும் மகம்மதியருக்கும் அவர்களுக்கு நாயகரான சத்திரபதி ஆகாகான்பஹதூர் அவர்களுக்கும் ஆசிகள் வழங்கி, அவர்களெடுத்த காரியம் இனிது முடியவேண்டுமென்று தமது பிரார்த்தனை யிருப்பதாகவும் சொல்லியிருக்கிறார். இதையெல்லாம் பார்க்கையில் ஏதோ பெரிய உற்பாதம் சமீபித்திருப்பதாகவே காணுகிறது. ஆச்சரியம்! ஆச்சரியம்!!

# புஸ்தகவிமர்சனம்

இரட்டைப்புலவர் சரித்திரம். 'செந்தமிழ்' மறு பதிப்பு. சி. கு. நாராயணசாமி முதலியார். தீஞ் சுவைப் பொக்கிஷம். இலக்கம். 3.

இதைப் பார்வைக்கு அனுப்பிய உடைமைக்காரருக்கு வந்தனம். ஸ்ரீமான் முதலியாரவர்களுடைய நோக்கத்தையும், வேறு சிறந்துள்ள லக்ஷணங்களையும் முந்தியே நாம் குறிப்பிட்டிருக்கிறோமாதலால், மறுபடியவைகளை யிங்கு கூறவேண்டுவது அனாவசியம். 'பொய்யாமொழிப்புலவர்' சரித்திரம் போலவே, இதுவும் பதர்ப்பேச்சை வெறுத்து, லக்ஷியத்தைக் கைவிடாது நன்னெறிபற்றிப் போகிறது. கடுதாசி, அச்சுமுதலிய விஷயங்களும் நன்றாயமைந்திருக்கின்றன. ஆனால் இக்காலச்சபைக்கு ஆகாத இரண்டொரு சங்கதிகளைமட்டும் முதலியாரவர்கள் ஒழித்துவிடவேண்டும்.

### பத்திரிகைகளின் வரவு

மாதாந்தரப் பத்திரிகைகள்.—பிழைக்கும் வழி, விவேகபோதினி, சக்ரவர்த்தினி, வித்தியாபானு, பிரபஞ்சம், ஹிதகாரிணி, ரஞ்சிதபோதினி, மங்களோதயம்.

மாதம் இருமுறை பதிப்புகள்.—இந்து சாதனம் உதயதாரகை.

வாரப் பதிப்புகள்.—திராவிட தீபம், நீலலோசினி, தேசாபிமானி, லோகானுகூலன், லோகோபகாரி, யூனைடெட் இந்தியா, சந்திரிகை, பாண்டியன், திராவிடாபிமானி, சிலாங்கூர் வித்யாபாஸ்கரன்.

வாரம் இருமுறைப் பதிப்புகள்.—மைசூர் டைம்ஸ்

---

# சமாசாரக் குறிப்புகள்

இந்திய ஜனங்களுக்கு ராஜாங்கத்தாரோடு கலந்து தேசக்ஷேமத்திற்காக உழைத்து வருவதற்கு யோக்கியதை வரவில்லை யென்று வாதாடுவது சில ஜனங்களுடையவும், சிலபேர்களுடையவும் விரதம். இவர்களை யுத்தேசித்துக் கனம் ஸ்ரீமான் திவான்பஹதூர் ரகுநாதராயரவர்கள் எழுதுகிறார்:—"ஜனங்களைச் சேர்த்துக்கொண்டு மந்திராலோசனை செய்வது நலமென்றும், அதனால் ராஜாபிரஜை இருதக்ஷிக்கும் அனுகூலமே தவிர வேறாகாதென்றும் நாம் நெடுநாளாக வாதித்து வந்தது தற்காலம் வியக்தமானதற்காக எனக்கு வெகு சந்தோஷம். இந்தியா கவர்ன்மெண்டு புதியசட்ட நிருபண சபையையும், அதில் முதன் முதல் நடந்த நடவடிக்கையையும், எல்லோரும் புகழ்கிறார்களே தவிர ஒருவராவது இகழவில்லை. இது என் மனதுக்கு வெகு திர்ப்தி. ஆதலால் இனியாகிலும் இந்தியர்களைப் பற்றிப் பேசுபவர்கள் வீண்வாதம் செய்யாமலும், வாய்ச்சளுவாக எதை வேண்டுமானாலும் பேசாமலும், பிரிடிஷ் துரைத்தன பக்தியும் அம்மூலமாக இந்தியர்களடையக் கூடிய சித்தியும், அவர்களில் 100-ல் 90-பெயருக்கதிகமாகவே நன்றாக அறிந்திருக்கிறார்களென்றும் நிச்சயம் செய்துகொண்டு பேசவும், எழுதவும் செய்வார்களென்று நம்புகிறேன்" என்று.

***

'கோ ஆபரேஷன்' முறையில் கைத்தொழில்களும் வியாபாரமும், பாங்குகளும் பெருகவேண்டுமென்று நாம்பேசியும், நடத்தியும் வருவதில், அவசரப்பட்டுக் காரியங்களை யாரம்பித்துத் தக்க மனிதர் கிடையாத இடங்களில் சொஸைட்டிகளை உண்டாக்கி "மூன்றேமுக்கால் நாழிகை முத்துமாரியாக"ச் செய்வது நன்றன்று. ஒரு சொஸைட்டி நேராக நடக்கமாட்டாமல் 'தீபாவளி' யாவதில், நூறு சொஸைட்டிகள் தழைப்பதனாலுண்டாகும் நற்பயன் விருதாவாகி விடுகிறது. ஏனெனில், சாமான்னிய ஜனங்களுக்கு நம்பிக்கை வருவதற்கு ஒரே உபாயம்தான். அதாவது காரியக்கேடு வராமற் பார்த்துப் பிரயத்தனப்படுவதேயாம். 'கேடு' என்றால் அவர்களுக்கு நடுக்கம் பலமாக உண்டாகிறது.

***

கல்கத்தாவில் ஒரு அங்கிலேயச் சிறுபெண் தனக்குவேண்டிய ஒரு குமாரனைக் கல்லியாணம் செய்துகொண்டு சுகமாக வாழ்வதற்கு ஆக்கிரகப்பட்டதில், இருவருக்கும் ஐவேஜு கம்மியாயிருந்ததால், வெறுப்படைந்து, விஷம் வாங்கிக்கொண்டு இறந்துபோவதென்று இருவரும் தீர்மானித்தார்களாம். ஆகவே அவன் அவளுக்கு விஷம் வாங்கிக்கொண்டுவந்து கொடுத்தான். அதையவள் குடித்து மயக்கமாய்ப் படுத்திருக்க, அடுத்திருந்தவர்கள் சமூசயித்து, அவளை ஆஸ்பத்திரிக்கு எடுத்துப்போய்ச் சௌக்கியப் படுத்தினார்கள். மணமகன் ஒன்றும்

குடிக்கவில்லைபோல் காணுகிறது. 'தற்கொலை' என்னுங் குற்றத்திற்காக இருவரையும் போலீஸார் சார்ஜு செய்ததில், விஷம் கொண்டுவந்து கொடுத்தவனுக்கு ஒருமாதம் காவல் கிடைத்தது. சுயம்வர பலன் கைமேல் கிடைத்ததுபோலும்.

***

பம்பாயில் ஸ்ரீமான் கரீம்பாய் என்னும் தனவான் $4\frac{1}{2}$-லக்ஷம் ரூபாய் கவரன்மெண்டு அதீனத்தில் விட்டு, தொழிற் பயிற்சிக்கு உதவும்படியான சாஸ்திரங்களை அப்பியசிக்கும் மகம்மதீய மாணுக்கருக்கு உதவும்படியாகவும், மொத்தத்தில் சாஸ்திரப்பயிற்சி விர்த்தியாகவேண்டியும் தன்னுடைய மனோபீஷ்டத்தை விளக்கியிருக்கிறார். கவர்னரவர்களும், அதை வெகு சந்தோஷத்துடன் அங்கீகரித்து, இதற்குச் சமதையான தருமமில்லை யென்றும், இப்படியின்னும் சிலர் செய்வாராகில், பம்பாய் நகரம் சாஸ்திரப்பயிற்சி விஷயத்தில் முதற்பதவியடைந்துவிடுமென்றும், உறுதிகூறிச் சர்க்காருடைய திருப்தியை வெளியாக்கினர். இம்மாதிரி இந்த ராஜதானிக்குச் சொல்லிக் கொள்ளக்கூடியது ஏதேனுமுண்டா வென்று யோசிக்கிறோம்.

***

சென்றமீ பம்பாயில் கடைத்தெருவில் அகஸ்மாத்தாகத் தீப்பிடித்து, எத்தனையோ லக்ஷம் விலை பெற்ற சரக்குகளும், வீடுவாசல்களும் வெந்து போயினவாம். நெருப்பை யணைக்க அனேகர் முயன்றும் மூன்று மணி நேரத்திற்கு மேலானதால் நஷ்டம் அதிகமாயிற்றாம்.

***

நமது செகர்டெரியவர்கள் சபையில் சென்ற $1\frac{1}{2}$-வருஷமாக மெம்பராகியிருந்தமகம்மதீய ஸ்ரீமான் சையத் ஹுஸேன் பில்கிராமியவர்கள் தேக அசௌக்கியத்தினல் விலக நேரிட்டதில், அவருக்குப் பிரதியாக, ஐதராபாத் ராச்சியத்தில் திவானகிய ஸ்ரீமான் மிர்ஜா அப்பாஸ் அலிபைக் என்பவரை நியமித்திருப்பதாகக் கேள்விப்படுகிறோம். இவர் ஷியா மகம்மதீயராகிலும், மகம்மதீயருக்கு இது விஷயத்தில் திருப்திகரமாகவே யிருக்குமென்று நம்புகிறோம். மொத்தத்தில் மார்லிபிரபுவுக்கு இந்து ஒருவரும் மகம்மதீய ரொருவரும் தமது சபையிலிருக்கவேண்டுமென்றே மனமிருப்பதாக இதனல் வெளியாகிறது.

மதிராசு கண்ணாடிவேலைச் சங்கத்திற்கு உதவியாக மாக்ஷிமை தங்கிய கவர்னரவர்கள் விறகுதானம் செய்திருக்கிறார்களென்பதைக் கேட்டுச் சந்தோஷிக்கிறோம். இப்பொழுது தான் இவ்விடத்தில் உப்புக்கல்லைப் போல் இரண்டொரு தொழில்கள் ஆரம்பமாயிருப்பதில், வேண்டிய சரக்கில்லாமலும், தொழில் தெரிந்த மனுஷிய சகாயமில்லாமலும், அவைகள் தத்தளிக்கின்றன. இந்தக் கம்பெனியாருக்குத்தக்க மனுஷியரில்லாமல், ஐரோப்பிய தொழிலாளிகளை வருத்தியிருப்பதில் பணச்செலவதிகமாகிறது. அதற்குப் பிரதியாக ஏதோ கொஞ்சம் உதவட்டுமென்று சர்க்கார் 2-ஃ த்திற்குச் செல்லும் விறகில் சுமார் பாதி கடப்பை பாரஸ்டுகளில் வெட்டிக்கொள்ள அனுமதி கொடுத்திருக்கிறார்கள். இதற்காக நாமெல்லோரும் சந்தோஷப்பட வேண்டியவர்கள்.

***

நமது ஜனங்களுக்கு எப்பொழுதுதான் சுபுத்தியுண்டாகுமோ தெரியவில்லை. ரசவாதிகளென்று பெயர் வைத்துக்கொண்டு தாமிரத்தைத் தங்கமாக்குவதாகப் பிதற்றிப் பேதைகளை யேமாற்றுவோர் ஒரு கூட்டம். இக்காலத்தில் பிருமஞானம் சித்திக்கச் சுலப வழி காட்டுவதாக வெகு புத்திசாலிகளையும் ஏமாற்றி வருபவர் ஒரு கூட்டம். ஸ்ரீ ஜகத்குரு ஆசாரிய சுவாமிகள் சொல்லியிருக்கிறார்கள், 'சடையனும், மொட்டையனும், அப்பளாக் குடுமிக்காரனும், காவித் துணிக்காரனும் ஆகிய பலவித வேஷதாரிகள் வயிறு வளர்ப்பதற்காகத் திரிவதைக் கண்டும் மூடர் அந்தரகசியத்தை அறிகிறதில்லை,' என்று.

***

இது எக்காலத்திலும் நிஜம் என்று காணுகிறது. சமீபத்தில், திருவனந்தபுரம், கொல்லம் இவ்விடங்களில் யாரோ வேஷதாரி 'பிருமசுவரூபணீ' என்று ஒரு சங்கமும், அதற்கு நிஷ்டையும் ஏற்படுத்தியதில்கொல்லத்தில் ஒரு திருட்டுக்கேசில் அகப்பட்டு, அதில் பெரிய உத்தியோகஸ்தரும் சாக்ஷிகளாகி, ஜனங்களுக்கெல்லாம் சிரிப்புக்கிடமாக நடந்துவருவதாக வதந்தி.

சங்கதி தெரியவேண்டும்,


நமது சக்ரவர்த்தி


நமது சக்ரவர்த்தினி